

# தமிழரசு

16-7-1982 75 காசு




மாயவரம் என்றும் மாயூரம் என்றும் வழங்கப்பட்டு வந்த பெயரை மயிலாடுதுறை என மாற்றிய விழாவில் மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதி. சீனிவாசன் அவர்கள் தலைமையில் மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 'மயிலாடுதுறை' என்னும் பெயர் பொறிக்கப் பெற்ற கல்லைத் திறந்து வைத்தார். (27.6.'82.)



சென்னை இராஜா அண்ணாமலை புரத்தில் உள்ள கோவிந்தசாமி நகரில், ஏற்பட்ட தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் (30.6.82ல்) அரிசி, உடை, பணம் ஆகியவற்றை வழங்கினார்.

.7.82-ல் டில்லியில் நடைபெற்ற செய்தித்துறை அமைச்சர்கள் மாநாட்டில் மாண்புமிகு மத்திய செய்தித்துறை அமைச்சர் திரு வசந்த் சாத்தே அவர்களை, மாண்புமிகு செய்தி–அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் சந்தித்து உரையாடினார்.





இந்திய நாட்டின் ஏழாவது குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ள கியானி ஜெயில் சிங் அவர்கள் எளிய, பிற்படுத்தப்பட்ட குடும்பத்தில் 5.5.1916-ல் பிறந்தவர்.

விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டு பிரஜா மண்டல் என்னும் இயக்கத்தைத் துவக்கி அதன் தலைவராகப் பணியாற்றியுள்ளார். அந்த இயக்கத்தில் பங்கேற்றதற்காக 1938 முதல் 1943 வரை ஐந்தாண்டு கடுங்காவல் தண்டனை பெற்றார். 1946-ஆம் ஆண்டில் தேசியக் கொடி இயக்கத்தைத் தமது மாநிலத்தில் துவக்கினார்.

இந்திய நாடு விடுதலையடைந்த பின்னர் அந்நாளைய பெப்சு மாநிலத்தில் இருமுறை அமைச்சர் பொறுப்பை ஏற்று, வருவாய்த்துறை, பொதுப்பணித்துறை, வேளாண்மைத்துறை ஆகிய துறைகளை நிருவகித்து வந்திருக்கிறார். 1956-ஆம் ஆண்டு மாநிலங்களவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். 1962 ஆம் ஆண்டில் பஞ்சாப் மாநில அமைச்சரவையில் இடம் பெற்ற இவர், 1972 முதல் 1977 வரை பஞ்சாப் மாநிலத்தின் முதல்வராகவும் பொறுப் பேற்றிருக்கிறார். 1980-ல் மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்று, மைய அரசின் உள்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தார்.

இந்தியாவின் ஏழாவது குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிட்ட ஜெயில்சிங் அவர்கள் 7,54,113 வாக்குகள் பெற்று, குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

# தியாகத் திருவுருவம்



''காமராசர் எப்போதும் ஒரு சிறிய பெட்டியை வைத்திருப்பாராம். அதை யாரையும் திறக்க அனுமதிப்பதில்லையாம். இப்போது அதைத் திறந்து பார்த்தபோது, அதில் இருந்த முக்கியமான பொருள் என்னவென்றால், அது அவரது தாயாரது படம்தான்.

''அந்தத் தாய் நோய்வாய்ப்பட்டபோது கூட அவர் போய்ப் பார்க்கவில்லை. பாசம், கடமை, உரிமை, உணர்வு அத்தனையும் அவருக்கு இருந்தபோதிலும் பிறருக்காக, நாட்டுக்காகத் தொண்டு செய்யும் பண்பு இருந்ததே-அதுதான் தியாகம்.

''போராடிப் போராடி வாழ்க்கையில் எதிர் நீச்சல் போட்டுக் கொண்டு தன்னை உயர்த்திக் காட்டியவர் காமராசர். இன்றைக்கு நான் பல கோப்புகளைப் பார்க்கிறேன். காமராசர் முதல்வராக இருந்தபோது வீணாகச் சட்டப்பிரச்சினையை வைத்து, அவர் செய்ய வேண்டிய காரியங்களைத் தள்ளிப் போட்டதில்லை. மக்களுக்காகத்தான் சட்டமே ஒழிய, சட்டத்துக்காக மக்கள் அல்ல என்பதைச் செயலில் காட்டியவர்.

ஒதுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, அழுத்தப்பட்ட, தூக்கியெறியப்பட்ட மக்களின் உள்ளத்திலே உறுதியும் வீரமும் துணிவும் அறிவும் வரச் செயல்பட்டவர் காமராசர்.

மாண்புமிகு முதல்வர்

*(1978-ஆம் ஆண்டு ஜூலை 15-ஆம் நாள் பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் பிறந்த நாளில் ஆற்றிய உரையில்)*

தமிழரசு
மலர்: 13
இதழ்: 2
துந்துபி — ஆனி 32 16—7—1982
திருவள்ளுவர் ஆண்டு 2013

**முகப்பில்:**

குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு ஜெயில்சிங் அவர்களும் மாண்புமிகு முதல்வர் அவர்களும்.

## தூரக்கிழக்காசியப் பயணம் -

# தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு ஒரு திறவுகோல்

மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர்

## திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி

மனித வாழ்வில் எத்தனையோ சம்பவங்களும் நிகழ்ச்சிகளும் நடக்கின்றன. ஆனால் அவையனைத்தும் நெஞ்சில் நிலைத்து நிற்பதுமில்லை. நினைவுகூர்ந்து போற்றும் தன்மையுடையதாக இருப்பதுமில்லை. நாம் ஆற்றுகின்ற பணியும் மேற்கொள்ளும் பயணமும் நாட்டின் வளர்ச்சிக்கு உதவி, மக்களின் வளமான வாழ்வுக்குத் தேவையான, வலிவான அடிப்படைகளை உருவாக்கித் தரும்போது பெருமையும் சிறப்பும், தாமே வந்து சேருகின்றன.

தன்னலம் மறந்து தமிழ்நாட்டின் ஏற்றத்திற்காகப் பாடுபடும் அன்பிற்கும் அருளுக்கும் உரிய தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவரின் அன்பு வாழ்த்துக்களுடன் அண்மையில் நான் மேற்கொண்ட தூரக் கிழக்காசியப் பயணம் தமிழ்நாட்டிற்கும் தமிழ் மக்களுக்கும் நலம்பயக்கும் நிகழ்ச்சிகளில் ஒன்றாக அமைந்ததை என்னால் உணர முடிகின்றது.

நான் சென்ற நாடுகளில் கண்ட காட்சிகளும் - அனுபவம் வாய்ந்த பெருமக்களிடம் கலந்துபேசியதன் வாயிலாகப் பெற்ற கருத்துக்களும் அதன் காரணமாக எனது உள்ளத்தில் எழுந்த எண்ணங்களும் ஏற்றத் தாழ்வற்ற சமத்துவ சமுதாய அமைப்பினை நிறுவிட உழைத்திடும் மாண்புமிகு புரட்சித்தலைவரின் இலட்சியக் கனவுகளை ஈடேற்றப் பெரிதும் உதவும் என்று நான் திடமாக நம்புகிறேன்.

*30.5.1982* அன்று மதியம் எனது பயணம் தொடங்கியது.

மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு வந்திருந்து, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் என்னை வாழ்த்தி வழியனுப்பி வைத்தார்கள்.

''சென்று வா! செந்தமிழ் நாட்டிற்கு வளம் சேர்க்கப் புதிய முறைகளைக் கண்டு வா!'' என்றுசொல்லாமல் சொல்லி மகிழ்ச்சியும் உவகையும் நிறைந்த உள்ளத்தோடு என்னை வழியனுப்பி வைத்தார்கள்.

நான் எண்ணிப்பார்க்கிறேன்!

அன்றொருநாள். 1973-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் சமதர்ம மணம் கமழும் சோவியத் நாட்டில்-மாஸ்கோ மாநகரில் நடைபெற்ற உலக சமாதான மாநாட்டில் கலந்துகொள்ள நான் சென்ற போது எனது இனிய தலைவர் என்னை வாழ்த்தி வழியனுப்பிவைத்த அந்தக் காட்சி எனது மனக்கண் முன் நிழலாடுவதைக் காணுகின்றேன்.

இது, பத்தாண்டுகளுக்கு முன் நிகழ்ந்த இனிய நிகழ்ச்சி. ஆனாலும் இன்னும் என் நினைவில் அது பசுமையாக இருக்கின்றது.

என்னைச் சுமந்துசென்ற விமானம் சிங்கப்பூர் நோக்கிப் பறந்தது! எனது சிந்தனையும் சிறகடித்துப் பறக்கத் தொடங்கியது! எனது பயணத்தின் நோக்கம் குறித்த சிந்தனையில் ஆழ்ந்தேன்.

தமிழ்நாட்டில் வளமிருந்தும் வறுமை தாண்டவமாடுகின்றது! உழைக்கும்திறன் படைத்த மக்களிருந்தும் உற்பத்தி பெருகவில்லை! செல்வச் செழிப்பு மிகுந்திருக்கும் நிலை ஒருபுறம்-அதே நேரத்தில் ஏழ்மையும் இல்லாமையும் இணைந்து நிற்கும் காட்சி மறுபுறம்.





தூரக் கிழக்கு நாடுகளில் சுற்றுப்பயணத்தை மேற்கொண்ட மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழியனுப்பி வைத்தல்.

இந்த அவலநிலையைப் போக்க-முரண்பாடுகள் நிறைந்த இந்தத் தன்மையினை நீக்க - கீழ்த் திசை நாட்டினரின் அனுபவம் நமக்கு எந்த வகையில் உதவிடும் என்பதனை அறிந்திடச் செல்கிறோம். அதுவும் புத்துலகச் சிற்பி-புரட்சித்தலைவரின் தூதுவராகச் செல்கிறோம் என்பதை எண்ணியபோது - அச்சமும் தயக்கமும் ஒரு கணம் என்னை ஆட்டிப்படைத்தன.

புரட்சித்தலைவர் நம்மிடம் ஒப்படைத்திருக்கின்ற பெரும் பொறுப்பினை எப்படி நிறைவேற்றப்போகிறோம் என்ற ஆர்வமும் துடிப்பும் மாறி மாறி எழுந்தன.

''நாம் சாமான்யர்கள்; ஆனால் நாம் சாமான்யமான பணிகளை மேற்கொள்ள வில்லை. மகத்தான இலட்சியத்திற்காகப் பாடுபட்டுக்கொண்டிருக்கின்றோம்''

"We are common men, shouldering uncommon Tasks"

என்று நமது அறிவு ஆசான் பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி குறிப்பிட்ட கருத்தினை என் நெஞ்சம் அசைபோடத் தொடங்கியது. தமிழ்நாட்டில் அடிப்படையான சமூக மாறுதலைக் (Structural changes) கொண்டுவரும் பெரும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் புரட்சித்தலைவரின் அரசில் ஒரு தொண்டராக இருப்பதை எண்ணி-இந்தக் கடமையினை - புரட்சித்தலைவர் எனக்கிட்ட இந்தக் கட்டளையினைச் செவ்வனே ஆற்றிட முடியும் என்ற துணிவினைப்பெற்றேன்.

30.5.'82 அன்று தொடங்கிய எனது பயணம் 24.6.'82 வரை நிகழ்ந்தது. ஏறத்தாழ 25 நாட்களில் சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, ஜப்பான், தென் கொரியா, மலேசியா ஆகிய நாடுகளைக் கண்டுவந்தேன்.

தோல் தொழில், பட்டு வளர்ச்சி, பால் பண்ணைத்தொழில் ஆகியவற்றில் அந்த நாடுகள் நிகழ்த்தியிருக்கும் சாதனைகளையும் அவர்களின் முயற்சி எந்த வகையில் நமது வளர்ச்சிக்குத் துணைநிற்கும் என்ற உண்மையினையும் ஒரு ஆராய்ச்சி மாணவனைப்போல் கண்டறிந்தேன்.

அந்த நாடுகள் பெற்ற வெற்றிக்கு அடிப்படையாக விளங்கும் சிறப்பம்சங்களை நாமும் மேற்கொள்வோமேயானால், தமிழகம் வளமும் வலிவும் பொருந்திய நாடாக மாறி உலக அரங்கில் தலை நிமிர்ந்து நிற்க முடியும் என்ற நம்பிக்கை பிறக்கின்றது.

25 இலட்சம் பேர் மட்டுமே வாழ்கின்ற நாடாகிய நியூசிலாந்து, பால் பொருள் உற்பத்தியிலும், ஏற்றுமதியிலும் உலக அரங்கில் சிறப்பான இடத்தைப் பெற்றுத் திகழ்கின்றது.

இரண்டாவது உலகப்போரின் போது அணுகுண்டு வீச்சுக்கு ஆளாகி அழிவின் விளிம்பிற்கே சென்ற ஜப்பான் நாடு, இன்று உலக வல்லரசுகளோடு போட்டிபோடும் அளவுக்கு தொழில்துறையிலும், அறிவியல் துறையிலும் வளர்ச்சிபெற்று விளங்குகின்றது.

அண்மைக்காலம் வரை உள்நாட்டுப் போரில் சிக்கித் தவித்த தென் கொரியா,

உலகமே கண்டு வியக்கும் வகையில் இன்று முன்னேற்றப் பாதையில் முனைந்து நிற்கிறது.

துறைமுகங்களை மட்டுமே ஆதாரங்களாகக் கொண்டு உலக வணிகத்தின் கேந்திரமாகத் திகழ முடியுமென்று சிங்கப்பூரும் ஹாங்காங்கும் நிருபித்துக் காட்டிக்கொண்டு இருக்கின்றன.

இயற்கை வளம் குறைவாகப் பெற்றிருக்

கின்ற இந்த நாடுகள் பொருளாதாரத்தில் வலிவு பெற்று, புதுயுகத்தின் தலைவாயிலில் நுழைந்திருக்கும் போது எல்லா வளங்களையும் பெற்றிருக்கின்ற தமிழகம் அவற்றை முறையாகப் பயன்படுத்தி வெற்றிபுரி நோக்கி ஏன் வீறு நடைபோடமுடியாது என்ற வினா என்னுள் எழுந்தது.

அதனால்தான், இடையூறுகளையும் தடைக்கற்களையும் தாண்டி அந்த நாடுகள் பெற்றிருக்கின்ற அபரிமிதமான வளர்ச்சியினையும் - வளர்ச்சிக்கான காரணங்களையும் கூர்ந்து ஆராய்ந்தேன்.

அங்குள்ள அமைதியான சூழ்நிலையும், மக்களின் நெறியான வாழ்வும்தான் இத்தகைய வெற்றியினை அவர்களுக்கு ஈட்டித் தந்திருக்கின்றது என்ற முடிவுக்கு வந்தேன்.

தேசிய நலனுக்கு முதலிடமும், முன்னுரிமையும் தருகின்ற மனப்பான்மையினை மக்கள் பெற்றிருப்பதை நேரிடையாகக் காண முடிந்தது. தங்களின் தனி நலனுக்கும் நாட்டின் பொது நலனுக்கும் மோதல் எழுகின்ற போது தங்கள் நலனைப் பின்னுக்கு நிறுத்தி நாட்டின் பொது நன்மையினை முன்னுக்கு நிறுத்துகின்ற உளப்பாங்கினை (National Consciousness) அவர்கள் பெற்றிருப்பதைக் கண்டு வியந்தேன். அதுதான் அவர்களின் வளர்ச்சிக்கு மூலகாரணமாக இருக்கின்றது.

அந்நாடுகளில் தொழிலாளர்களுக்கும், தொழிலதிபர்களுக்கும் இடையே ஒற்றுமையும், நல்லெண்ணமும், பரஸ்பர நம்பிக்கையும் நிலவுகின்றன. கருத்து வேறுபாடும் மனமாச்சரியங்களும் அவர்களிடையே எழும் போது அவற்றைத் தனிப்பட்ட பிரச்சினையாகக் கருதித் தீர்த்துக்கொள்ள முயல்கின்றார்களே தவிர நாட்டின் முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் பாதிக்கும் அளவுக்கு அவை வடிவம் எடுக்க அனுமதிப்பதில்லை.

தொழிலாளர்களும் சரி-தொழிலதிபர்களும் சரி- பொருள் உற்பத்தியிலும், தொழில் வளர்ச்சியிலும் இணைந்து நிற்கிறார்கள் என்பது மட்டுமல்ல, எல்லாச் செயல்களையும் ஈடுபாட்டுணர்ச்சியுடன் (Involvement) நிறைவேற்றுவதைக் கண்டேன்.

''ஆட்சி உண்மையில் செம்மையானதாக அமைந்திட வேண்டுமென்றால் வயலில், தொழிற்சாலையில், அங்காடியில் பணிபுரிந்திடும் உற்பத்தியாளர்கள், உழைப்பாளர்கள் அனைவரும் ஆட்சி நடத்திடுவோர் நாமே என்ற உணர்வுடன் தத்தமது கடமையினைச் செய்யவேண்டும்.''

—என்ற பேரறிஞர் அண்ணாவின் கருத்துக்கு எடுத்துக்காட்டாக இருப்பதைப்போல அங்குள்ள மக்களின் வாழ்க்கை முறை அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது.

கால மாறுதலின் வேகத்தினை உணர்ந்து அதற்கேற்பச் செயல்படுகின்ற திறனையும்- விழிப்புணர்ச்சியினையும் (Awareness) பெற்றிருக்கின்ற மக்கள் கடின உழைப்புக்கும், கட்டுப்பாடான வாழ்வுக்கும் சொந்தக்காரர்களாக இருக்கின்றனர். அதன் காரணமாக வளர்ச்சிப்பாதையில் ஒவ்வொரு படிக்கட்டாக ஏறி இன்று வெற்றியின் உச்சியில் தவழ்ந்துகொண்டு இருக்கிறார்கள்.

ஆற்றலால், அறிவுத்திறனால் மக்களின் கடமையும் கட்டுப்பாடும் மிக்க வாழ்வின் வாயிலாக வளர்ச்சியினைப் பெற்றிருக்கின்ற அந்த நாடுகளைக் கண்டபோது நமது நாடும் அத்தகைய நிலையினைப் பெற்றிட முடியாதா என்ற எண்ணம் எனக்குத் தோன்றியது. தமிழ்நாட்டில் அந்த நிலை உருவாகிட நமது பயணம் எந்த வகையில் உதவிடும் என்ற ஆதங்கம் எழுந்தது.

நான் சென்ற நாடுகளில் தொழிற்கூடங்கள் பலவற்றைக்கண்டேன். பலருடன் கலந்துரையாடினேன். பல இடங்களில் தொழில் மற்றும் வர்த்தகக்கழகத்தைச் (Chamber of Commerce & Industry) சேர்ந்தவர்கள் என்னைச் சந்தித்து உரையாடினார்கள். அந்த சந்திப்புகள் நமது ஏற்றுமதி பெருக நல்லதோர் தொடக்கம் என்பதை எண்ணிடும் போது பெருமையும் பெருமிதமும் கொள்கிறேன்.

பதனிடப்பட்ட தோல், தோல் சம்பந்தமான பொருள்களை அந்நாடுகளுக்கு அதிக அளவில் ஏற்றுமதி செய்ய நல்ல வாய்ப்புள்ளது. ஹாங்காங் நாட்டைச் சேர்ந்த தனியார் நிறுவனம் ஒன்று நமது 'டான்சி' அமைப்புடன் இணைந்து கூட்டுறவுத்துறையில் 'தோல் பொருள் தொழிற்சாலை' நிறுவுவதற்கான பேச்சுவார்த்தை தொடங்கிட இந்தப் பயணம் வழிகோலியிருக்கின்றது.

தமிழ்நாட்டின் ஆட்டு ரோமத்திற்கு (Goat hair) ஆஸ்திரேலியா நாட்டில் நல்ல தேவையிருப்பதும், அதனை அதிக அளவில் ஏற்றுமதி செய்வதன் மூலம் அந்நியச் செலாவணி ஈட்டிட முடியும் என்பதும் இந்தப் பயணத்தின்போது நான் கண்ட உண்மையாகும்.

ஆஸ்திரேலியாவில் சிட்னி, மெல்போர்ன் போன்ற இடங்களில் தோல் தொழில் கழிவு நீரைத் தரையில் ஓடவிடாமல் உயரமான தொட்டிகளில் ஏற்றிப்பல தட்டுகளில் மருந்

**தென்கொரியாவில் பட்டு நூற்பாலையைப் பார்வையிடுதல்**



**உ**லகம் சுருங்கி வருகிறது; உலக நாடுகள் நெருங்கி வருகின்றன.

**ப**க்கத்து வீட்டுக்காரன் எப்படி இருக்கிறான் என்பதைக் கூடத் தெரிந்து கொள்ளாதது பழைய காலப் பழக்கம். இன்று நெடுந்தூரத்து நாடுகளானாலும் அங்கே மக்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதை நேரில் தெரிந்து கொள்ள விழைகிறோம்.

—பேரறிஞர் அண்ணா



தைக் கலந்து வடிகட்டும் முறையினை (Vertical Pumping out and processing of Tanneries effluent aud disposals) கண்டபோது தமிழ் நாட்டில் ஆம்பூரிலும், வாணியம்பாடியிலும் இந்த முறையைப் பயன்படுத்திப் பெரும் பலனைப் பெறலாம் என்ற எண்ணம் உதயமானது.

ஜப்பான், தென் கொரியா போன்ற நாடுகள் பட்டுத்தொழிலில் நிகழ்த்தியிருக்கின்ற சாதனைகளையும் முன்னேற்றத்தினையும் ஆர்வத்துடன் ஆராய்ந்தறிந்தேன். கிராமப் பொருளாதார முன்னேற்றத்திலும் அடித்தள மக்களின் வாழ்வு மேம்பாட்டிலும் அக்கறை கொண்டு செயலாற்றிவரும் புரட்சித்தலைவரின் அரசு குறைந்த மூலதனததில் பெரும் வருவாயும், அதிக அளவில் வேலை வாய்ப்பும் தரக்கூடிய தொழில்களைத் தொடங்குவதில் தனது முழுக்கவனத்தையும்செலுத்தி வருகின்றது. நாட்டின் வளர்ச்சிக்கும் மக்களின் வாழ்வு மறுமலர்ச்சிக்கும் வழிகோலும் அத்தகைய தொழில்களில் பட்டுவளர்ப்புத் தொழில் தலையாய இடத்தைப் பெற்றுத் திகழ்கின்றது. "SeriCulture" என்றால் "Self Employment and Remunerative Industry" என்று பொருள் சொல்லும் வகையில் உள்ள இத்துறையின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்றது புரட்சித்தலைவரின் அரசு.

**கோலாலம்பூரில் அமைக்கப்பெற்றுவரும் திருவள்ளுவர் கலைக்கூடத்தில் மாண்புமிகு அமைச்சர்**



புரட்சித்தலைவரின் ஆணையால் தனக்கென்று தனி இயக்ககம் ( Directorate of Sericulture) கண்டு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வரும் பட்டுவளர்ப்புத் துறையில் நவீன யுக்திகளைக் கையாள்வது எப்படி,விஞ்ஞான முறைகளைப் புகுத்தி வெற்றி காண்பது எப்படி, என்ற அவாவினால் உந்தப்பட்ட நான் இத் தொழிலில் ஜப்பானும், தென் கொரியாவும் காட்டுகின்ற ஆர்வத்தையும் அடைந்திருக்கின்ற முன்னேற்றத்தினையும் ,கவனத்துடன் கண்டறிந்தேன்.

நூறாண்டுக் காலத்திற்கு மேற்பட்ட பழமையினையும், முதிர்ச்சியையும் உடையதாக அந்த நாடுகளில் பட்டுத்தொழில் இருப்பதை அறிகிறோம். பட்டு வளர்ப்பில் உள்ள நான்கு முக்கிய கட்டங்களில்-'மல்பரி பயிரிடுதல்' 'இளம் புழுவளர்த்தல்'-'பட்டுக்கூடுகளை உருவாக்குதல்' -'பட்டுநூல் உற்பத்தி' ஆகியவற்றில், இந்நாடுகள் பெற்றிருக்கின்ற வளர்ச்சி அவர்களின் ஆராய்ச்சித் திறமைக்கு எடுத்துக் காட்டாக இருக்கின்றது.

பட்டுத் தொழிலில் புழு வளர்த்தல் என்பது, கடினமான பணியாகும். அதுவும் எட்டு நாட்கள்வரை புழுக்களைப் பாதுகாத்துவளர்ப்பது என்பது சிரமமான வேலையாகும். விவசாயிகளின் இந்த இன்னல்களைப் போக்கும் வகையில் அந்நாடுகளில் முட்டைகளுக்குப் பதிலாக எட்டு நாள் வளர்ந்த இளம் பட்டுப் புழுக்களையே கூட்டுறவு அமைப்புகளின் வாயிலாக அளிக்கின்றார்கள். தமிழ்நாட்டிலும் சில இடங்களில் இந்த முறையினை நாம் அறிமுகப்படுத்தி இருக்கின்றோம். அதனை எல்லா இடங்களுக்கும் பரவலாக்கிட அவர்களின் அனுபவம் துணைபுரியும் என்று நம்புகிறேன்.

பட்டு நூல் நூற்க நவீன இயந்திரங்களையே முழுமையாக அவர்கள் பயன்படுத்து

(தொடர்ச்சி 4)-ஆம் பக்கம்)



# ஒருமைப்பாடு உருவாக...

மாண்புமிகு செய்தி–அறநிலையத்துறை அமைச்சர்
திரு இராம. வீரப்பன்

நமது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் சமூக, பண்பாட்டு நிலைகளை மேம்படுத்தவும் பசி, வறுமை, அறியாமை இவற்றை ஒழிப்பதற்கும், பொதுமக்களின் ஒத்துழைப்பும் ஆர்வமும் அவசியமாகுமென்பதை நாம் அறிவோம். இம்முயற்சியில் திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் ஆகியவற்றின் பங்கும் கள விளம்பரப் பணியின் பாங்கும் மிகுந்த முக்கியத்துவம் பெற்றுத் திகழ்வதைக் காண முடியும். இத்தகைய மக்கள் தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்தும்போது நாம் இப்பரந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு வட்டாரத்தில் நிலவும் வேறுபட்ட தன்மைகளையும் பலதரப்பட்ட இன, மொழி மாறுபாடுகளையும் கருத்தில் கொண்டு செயல்பட்டாக வேண்டும்.

தமிழ்நாட்டில் விளம்பரத் திட்டங்கள் பலவற்றைச் செயல்படுத்துவதில் மத்திய, மாநில அரசுகளிடையே சீரிய கூட்டுறவும் ஒத்துழைப்பும் இருந்து வந்துள்ளது. எங்கள் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் இயக்குநர் உறுப்பினராகவுள்ள ஒருங்கிணைப்பு விளம்பரப் பணிக்குழு முனைப்புடன் செயல்பட்டு வருகிறதென்பதை இம்மாநாட்டில் குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன். இக்குழுவின் மாதாந்தரக் கூட்டங்களில் மத்திய, மாநில அரசுகளின் செய்தித் துறை அலுவலர்கள் பெருவாரியாகக் கலந்து கொள்வதுடன் அவ்வப்போது மத்திய, மாநில அரசுகள் அறிவித்திடும் பல்வேறு விளம்பரத் திட்டங்களையும் செவ்வனே செயலாற்ற முனைகின்றனர். இதன் தொடர்பாக நமது மதிப்புமிக்க இந்தியப் பிரதமர் அறிவித்த புதிய 20 அம்சத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் மத்திய, மாநில அரசுகள் இணைந்து பணியாற்றுவதை ஈண்டு குறிப்பிட முடியும். இந்த இருபது அம்சத் திட்டம் நிறைவேற்றப்படுவதில் எய்திய முன்னேற்றம் குறித்து எங்கள் முதல்வர் ஆர்வம் காட்டி வருவதுடன் இந்தியப் பிரதமருக்குச் சிறப்பான கருத்துரைகளையும் அனுப்பியுள்ளார்.

நாகர்கோயிலில் மாவட்ட அளவிலான வானொலி நிலையம் அமைப்பதற்கும் மதுரையில் வானொலி நிலையம் ஏற்படுத்துவதற்கான பணியைத் தொடங்கியதற்கும் இந்திய அரசிற்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். இந்த இரண்டு நிலையங்களும் செயல்படத் தொடங்கினால் தென் மாவட்ட மக்களின் நெடுநாள் ஆசை, குறிப்பாக உழவர் பெருமக்களின் விருப்பம் நிறைவேற்றப்பட்டதாக ஆகும். எனினும் 30,540 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள ஒரு கோடி மக்கள் தொகை கொண்ட சேலம், வட ஆர்க்காடு, தருமபுரி மாவட்டங்களில் அப்பகுதிகளிலுள்ள மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய வானொலி நிலையங்கள் அமைக்கப்பட வேண்டுமென்னும் கோரிக்கை இருந்து வருகிறது. இவர்களின் கோரிக்கை, கவனிக்கப்பட வேண்டியதொன்றாகும். போதுமான ஒலிபரப்புத் திறன் கொண்ட வானொலிச் சாதனங்களுடன் தமிழகம் முழுவதிலும் ஒலிபரப்பும் முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும்.

அனைத்திந்திய வானொலி நிலையத்தின் பணிகள் விரிவடைவதற்கான முயற்சிகளைப் பாராட்டும் வேளையில், மாநில அரசுக்கு வருத்தம் தரும் பிரச்சினை ஒன்றை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். சட்டப்பேரவைக் கூட்டம் நிகழும் நாட்களில் சென்னையிலிருந்து ஒலிபரப்பப்படும் 'சட்டமன்றத்தில் இன்று' என்ற சிறப்பு அறிக்கையில் தற்போது பின்பற்றப்படும் நடைமுறை பற்றிய ஒன்றாகும். இந்த அறிக்கைகளைச் சுயேச்சையான பத்திரிகையாளர்களும் நிருபர்களும் தயாரிக்கின்றனர். இந்த ஒலிபரப்பிற்கான நேரம் போதுமானதல்லவென்றும் இவ்வாறு ஒலிபரப்பப்படும் அறிக்கையில் செய்திகள் தவறாகக் கூறப்படுவதாகவும் சட்டப்பேரவை உறுப்பினர்கள் குறை கூறுகின்றனர். இத்தகைய அறிக்கைகள் சில, விருப்பு வெறுப்புக்கும் மாறுபாட்டுக்கும் இடமளிப்பதாக மாநில அரசுக்குத் தெரியவந்துள்ளது. இது குறித்து மாநில அரசு, ஏற்கெனவே சென்னையி-

லுள்ள அனைத்திந்திய வானொலி நிலையத்தினரிடம் தெரிவித்துள்ளது. சட்டப்பேரவை நடவடிக்கைகள் குறித்த சிறப்பு அறிக்கைகள், குறைபாடுகளுக்கும் மாறுபாடுகளுக்கும் இடமளிக்காது சரியான உண்மைச் செய்திகளை அறிவிக்க இம்மாநாடு வழிவகை காண விவாதிக்க வேண்டும். சட்டப்பேரவை உறுப்பினர்களின் எதிர்ப்பைத் தவிர்க்கவும் மாநில அரசுக்கு இதனால் ஏற்படும் இடர்ப்பாட்டைப் போக்கவும் இது குறித்துச் சீரான கொள்கை வகுக்கப்பட வேண்டும்.

வட்டார ஆலோசனைக் குழுக்களில் உறுப்பினர்களைச் சேர்ப்பதற்காக தமிழ்நாட்டிலுள்ள அனைத்திந்திய வானொலி நிலையத்தின் நிலைய இயக்குநர்கள், தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெயர்ப்பட்டியலை அனுப்பி மாநில அரசின் பரிந்துரையைக் கேட்கின்றனர். இத்தகைய ஆலோசனைக் குழுக்களின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, பலதரப்பட்ட துறைகளில் உள்ள திறன்மிக்க தக்கோரின் பெயர்களைத் தருமாறு கேட்டு மாநில அரசுக்குக் கடிதம் வருமானால் பொருத்தமாகவும் நியாயமாகவும் அமையும்.

மக்களுக்குச் செய்திகளைத் தரும் தொடர்புச் சாதனங்களில் இன்று தொலைக்காட்சி மிகுந்த முக்கியத்துவம் பெற்றுத் திகழ்கிறது. 10 கி. வாட் ஒளிபரப்பு நிலையம் தமிழ்நாட்டிலுள்ள கொடைக்கானலில் அமைக்கும் பணி தொடங்கப்பட இருக்கிறது. ஒளிபரப்புக் கருவிகள் சக்தி வாய்ந்தனவையாகவும், போதுமான பரப்பளவிற்கு ஒளிபரப்பக் கூடியதாகவும் இருக்க வேண்டும். இவ்வாறு அமையவில்லையெனில் அண்டை நாடுகளிலிருந்து ஒளிபரப்பப்படும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை மக்கள் பயன்படுத்தத் தொடங்குவர். வண்ணத்தில் தொலைக்காட்சியை நடத்துவது வலியுறுத்தப்படத்தக்கதாகும். இதற்கான முயற்சியை மேற்கொண்டிருப்பதற்காக நான் மத்திய அரசின் செய்தி, ஒலிபரப்பு அமைச்சரைப் பாராட்டுகிறேன். தொடக்கத்தில் வட இந்தியப் பகுதியில் மட்டும் இந்த வசதி விரிவாக்கப்படுமென்பது எங்களுக்குக் கவலை தரும் செய்தியாகும். எவ்வளவு செலவாயினும் இந்தியா முழுமைக்கும் இந்த வண்ணத் தொலைக்காட்சி செயலாக்கப்படவேண்டும்.

*1982*, ஆகஸ்டு 15-ஆம் நாள் முதற்கொண்டு தேசிய தொலைக்காட்சித் திட்டங்கள் தொடங்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இம் முயற்சியை வரவேற்கிறோம். இத்திட்டங்கள் ஆங்கிலத்திலும் இந்தியிலும் மட்டுமே அமையுமென்று தெரிகிறது. அனைத்து மொழிகள் பேசுவோரும் மனநிறைவடையும் வகையில் தேசிய தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் எல்லா வட்டார மொழிகளிலும் சேர்க்கப்பட வேண்டும். இதன் மூலம் தேசிய ஒற்றுமையும் உணர்வுப்பூர்வமான ஒருமைப்பாடும் பேணப்படும்.

திரைப்படங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்த தமிழ்நாடு அரசு. இத்தொழிலின் வளர்ச்சிக்காக எல்லா முயற்சிகளையும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு பல்வேறு உதவித் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. குழந்தைகள் திரைப்படங்கள் தயாரிப்பதற்காகப் போதுமான நிதி வசதிகளைச் செய்யவும் அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. திரைப்படத் தயாரிப்பு முறைகளிலும் திரைப்படத் தொழில் நுட்பம் எந்த அளவிற்கு வளர்ந்துள்ளதென்பதிலும் மாணவ, மாணவிகளுக்குப் பயிற்சியளிக்கத் தமிழ்நாடு அரசு தொலைக்காட்சி, திரைப்படக் கல்லூரியை நடத்தி வருகிறது.

இரண்டாவது உலகக் குழந்தைகள் திரைப்பட விழாவின் போது, பண்டித ஜவகர்லால் நேருவின் நினைவாக மிகச் சிறந்த மூன்று குழந்தைகள் படங்களுக்கு ரூ. 5,000 மதிப்புள்ள தங்கப் பதக்கமுடன் ரூ. 10,000 ரொக்கப் பணமும் பரிசாக அளிப்பதாக எங்கள் முதலமைச்சர் அறிவித்தார்கள்.

கள விளம்பரப்பணியகம், அனைத்திந்திய வானொலி நிலையம், தொலைக் காட்சியகம் ஆகியவற்றில் மத்திய, மாநில அரசுகளிடையே ஒத்துழைப்பு நிலவுகிறது. ஆனால் திரைப்படம் தொடர்பாக இந்த ஒத்துழைப்பு சிறிதும் இல்லை. திரைப்படம் காட்டப்படுவதைக் கட்டுப்படுத்தும் அதிகாரம், மாநில அரசுகள் செயல்படுத்தும் திரைப்படச் சாதனச் சட்டத்தினால் நிறைவேற்றப்படுகிறது. படத் தணிக்கை குறித்த நடவடிக்கைகளினாலும் மாநில அரசுகள் சேர்க்கப்படுவதன் அவசியத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். படத் தணிக்கை குறித்து முடிவெடுத்தல் பற்றியும், படத் தணிக்கை பற்றி மேற்கொண்டும் எடுக்க வேண்டிய நடைமுறைகள் பற்றியும் படத் தணிக்கை அமைப்பிற்கும் திரைப்படத் தொழிலுக்கும் உள்ள பொதுத் தொடர்பு பற்றியும் மாநில அரசு கவலை கொண்டுள்ளது.

திரைப்படங்கள் உருவாக்கும் சமூக விழிப்புணர்வும் விளைவும் சட்ட, ஒழுங்குப் பிரச்சினையும் மாநில அரசு நிருவாகப் பிரச்சினையாகக் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. இத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஆயிரக்கணக்கான தொழில் நுட்பப் பணியாளர்கள், தொழிலாளர்கள் நலன்களையும் மாநில அரசு பாதுகாக்க வேண்டிய பொறுப்புள்ளது. திரைப்படத் தணிக்கைக்கு வட்டார ஆலோசனைக் குழுக்களை நியமிக்கும் போது மாநில அரசைக் கலந்து அவர்களின் பரிந்துரையையும் கருத்தில் கொள்ளுமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளோம். இதன்மீது இது வரை தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படாமைக்கு வருந்துகிறேன்.

திரைப்படத் தணிக்கைக்காக மேற்கொள்ளப்படும் கொள்கைகள் யாவை, வழிகாட்டு முறைகள் எவை எவை என்பதை மாநில அரசு அறிந்து கொண்டிருப்பது முக்கியமாகும். நமது நாட்டிற்கு வெளிநாடுகளிலிருந்து வரவழைக்கப்படும் திரைப்படங்கள் குறித்தும் அவற்றைத் தணிக்கை செய்யும் விதிமுறைகள் குறித்தும் மாநில அரசுகளுக்கு எதுவும் தெரிவிக்கப்படுவதில்லை. திரைப்படத் தணிக்கையில் ஒரே சீரான முறை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இக்கருத்து அனுபவத்தில் எழுந்ததொன்றாகும். அண்மையில் தென் மாநிலங்களில் திரைப்படத் தொழிலில் ஈடுபட்டுள்ள தயாரிப்பாளர்களும் சங்கங்களும் சென்னை வட்டாரத்தில் திரைப்படத் தணிக்கைக்கு மேற்கொள்ளப்படும் முறையில் பாரபட்சம் நிலவுவதாக எதிர்ப்புத் தெரிவித்தனர். எங்கள்

முதலமைச்சரின் முயற்சியால் சமரசக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுத் தீர்வு காணப்பட்டது. திரைப்படத் தணிக்கைக்குப் பின்பற்றப்படும் விதிமுறைகளை மீண்டும் ஆய்ந்து தெளிவுபடுத்த வேண்டும். இந்தியா முழுமைக்கும் ஒரே சீரான விதிமுறைகளும் நடைமுறைகளும் வகுக்கப்பட்டுப் பின்பற்றப்பட வேண்டுமென்னும் கருத்தை நான் பெரிதும் ஒப்புக் கொள்கிறேன். 'பால் உணர்வைத் தூண்டுதல்', 'வன்முறையைத் தூண்டுதல்' என்பதற்கு அவை எப்பொருளில் பயன்படுத்தப்படுகின்றனவோ அவற்றிற்கேற்ப விளக்கம் சரியான முறையில் அளித்து நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்.

சில படங்களில் அண்மைக் காலத்தில் மக்கள் பிரதிநிதிகளையும் சட்டப் பேரவை உறுப்பினர்களையும், நிருவாகிகளையும், காவல்துறை அதிகாரிகளையும் இழிவுபடுத்தும் முறையில் காட்சிகள் அமைந்துள்ளதை இம் மாநாட்டின் நாட்டத்திற்குக் கொண்டு வர விழைகின்றேன். குறிப்பிட்ட நேர்வுகளில் குறை கூறப்படுவதற்கு மறுப்பில்லை. ஆனால் அத்தகைய திரைப்படங்கள் மக்களாட்சி அமைப்பு முறையைக் குறை கூறுவதாய் அமைகின்றன. வட்டாரத் தணிக்கையாளர்களின் விருப்பு, வெறுப்பிற்கேற்பத் தணிக்கைச் சான்றுகள் வழங்கப்பட்டு வருவது வியப்பை அளிக்கிறது. நமது அரசியல் அமைப்பிலுள்ள சீரிய, உயரிய கொள்கைகளைப் பாதுகாப்பதில் மத்திய அரசுக்குள்ளதைப் போன்றே மாநில அரசுகளுக்கும் சிறப்பான பங்கு உள்ளது.

தேசிய ஒருமித்த கருத்து இதில் உருவாக்கப்பட்டு மாநில, மத்திய அரசுகளுக்கிடையில் ஒற்றுமையும் ஒத்துழைப்பும் நிலவுதல் அவசியமாகும்.

தமிழ்நாடு அரசு திரைப்படப் பிரிவு தயாரிக்கும் செய்திப் படங்களுக்கு மக்களிடையே பரவலான செல்வாக்கு ஓங்கியுள்ளது. இந்திய அரசின் செய்திப் படங்கள், தணிக்கையிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன. அது போன்றே இவற்றிற்கும் விலக்களிக்க வேண்டுவது விரும்பத்தக்கதாகும். ஆயத் தீர்வையிலிருந்தும் இவற்றிற்கு விலக்களிக்க வேண்டும்.

மத்திய, மாநில அரசுகளிலுள்ள செய்தித் துறை அலுவலர்களைப் பரிமாற்றம் செய்வது குறித்து ஆலோசிக்குமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறேன். மாநில அரசுகளிலுள்ள அனுபவம் மிக்க அலுவலர்கள் அனைத்திந்திய வானொலி நிலையம், தொலைக்காட்சி நிலையம், ஆகியவற்றில் பணியாற்றலாம். இது குறித்து மத்திய அரசு விரிவாக ஆராய வேண்டும்.

**[புதுடில்லியில் 1982, ஜூலை திங்கள் 3-ஆம் நாள் நடைபெற்ற செய்தித்துறை அமைச்சர்கள் மாநாட்டில், மாண்புமிகு தமிழக செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்]**

# அயல்நாடுகளில் ஆராய்ச்சி

தமிழர்கள் பேரெண்ணிக்கையில் வாழும் இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் தமிழாராய்ச்சிக்கான வாய்ப்புக்களை அறிந்து வரத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சார்பாக அனுப்பப்பட்ட இயக்குநர் டாக்டர் தி. முருகரத்தினம், இந்நாடுகளுக்குச் சென்று ஒருமாதம் சுற்றுப் பயணம் செய்துவிட்டு 22-6-82ல் தாயகம் திரும்பினார். இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளின் பல்கலைக் கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் ஆகியவற்றை அவர் சென்று பார்வையிட்டார். பல்வேறு துறைப் பேராசிரியர்கள், துணைவேந்தர்கள், உயர் கல்வி அலுவலர்கள், அமைச்சர்கள் ஆகியோரைக் கண்டு, தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் திட்டங்கள் பற்றி அவர் விளக்கினார். தொழிலாளர் மன்றங்கள், இலக்கியக் கழகங்கள், எழுத்தாளர் மன்றங்கள், கோவில்கள், நூலகங்கள், நூல் விற்பனையகங்கள் முதலியவற்றையும் அவர் பார்வையிட்டார். இந்நாடுகளில் நடைபெறும் தமிழாராய்ச்சிப் பொருள்கள் எவை, எவை? ஆராய்ச்சி வல்ல அறிஞர்கள் எவர் எவர்? இருபுறத்தும் ஆராய்ச்சிக்குப் பொருளுதவிக்கான வாய்ப்புக்கள் எவை, எவை? ஆராய்ச்சி மாணவர், பேராசிரியர் பரிமாற்றத்துக்கான வாய்ப்புக்கள் எவை எவை? என்ற விவரங்களை இவர் அறிந்து வந்துள்ளார். அயல்நாடுகளில் தமிழ்த் தொழிலாளர் சங்கங்களும் தம்மைப் பற்றி ஆராய்தலிலும் அவ்வாராய்ச்சிக்கு உதவி செய்தலிலும் ஆர்வம் காட்டுகின்றனர் என்பதையும் அவர் கண்டறிந்தார்.

இவ்வியக்குநரின் தென்கிழக்காசிய நாடுகளின் பயணத்தால் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் திட்டங்கள் உருவாவதற்கும், அறிஞர் பரிமாற்றங்கள் ஏற்படுவதற்கும், நுணுக்க விவரங்களும், அறிவு நிலையங்களோடு தொடர்பும் ஏற்பட்டுள்ளன.

## தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் முயற்சி!



சென்னை நகரில்...

# கோடையிலும் குடிதண்ணீர் கிடைத்திட...

"1978-ஆம் ஆண்டில் குடிநீர் வடிகால் வாரியம் அமைக்கப்பட்ட தேதியில் இருந்து கூடுதலாக 50 இலட்சம் லிட்டர் தண்ணீர், குழாய்க்கிணறு மூலம் அதிகப்படியாகச் சேர்த்து இருக்கிறோம். அந்தத் தண்ணீர்தான் தாமிரபாக்கத்தில் இருந்து குழாய் மூலம் வடசென்னை ராபின்சன் பூங்கா தொட்டிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

"இதே போல, திருவான்மியூர்-முட்டுக்காடு இவற்றிற்கு இடைப்பட்ட பகுதிகளில் நாலைந்து குழாய்க் கிணறுகள் தோண்டி அதில் இருந்து கிடைக்கும் 40 இலட்சம் லிட்டர் தண்ணீரில் 20 இலட்சம் லிட்டர் தண்ணீரை அந்த உள்ளூர்ப் பகுதிகளுக்குக் கொடுத்துவிட்டு, மீதி 20 இலட்சம் லிட்டர் தண்ணீரைச் சென்னை குடிநீர்க் குழாயுடன் 1½ ஆண்டில் இணைக்க இருக்கிறோம்.

"இப்படியே வருகிற 1985-ஆம் ஆண்டுக்குள் சென்னை நகருக்கு எந்தக் கோடையானாலும், குடிதண்ணீர் தடையின்றிக் கிடைக்க ஏற்பாடு செய்து விடுவோம். அத்துடன் கொத்தலை ஆற்றுப் படுகையில், உலக வங்கியின் உதவியுடன் நிலத்தடிக் குளங்களில் தண்ணீரைத் தேக்கும் திட்டத்தின் மூலம் கூடுதலாக 50 சதவீதம் தண்ணீர் மிகையாகக் கிடைக்கும்படியாகச் செய்து விடுவோம்.

"இப்போது சென்னையில் தினம் 5 கோடி காலன் விநியோகம் செய்யப்படும் தண்ணீருக்குப் பதிலாக 10 இலட்சம் காலன் மட்டும் குறைத்து, 4 கோடியே 90 இலட்சம் காலன் தண்ணீர் வழங்கி வருகிறோம்.

"மழை வந்துவிடும் என்ற நம்பிக்கையில் தான் கொஞ்சமாகக் குறைத்து வருகிறோம். வாரத்திற்கு 10 இலட்சம் காலன் வீதம் கூடுதலாகக் குறைத்து ஜூலை கடைசியில் 4 கோடியே 50 இலட்சம் காலன் அளவில் தண்ணீர் வழங்கப்படும். அதற்கும் குறையாமல் பார்த்துக்கொள்கிறோம். ஆனால், இதைவிட மோசமான வறட்சி நிலைமை எல்லாம் சென்னை நகரில் இருந்துள்ளது. '74-ஆம் ஆண்டில் இதே நேரத்தில் 3½ கோடி காலன்தான் தண்ணீர் விடப்பட்டது. அந்த ஆண்டு செப்டம்பரில் 2½ கோடி காலன்தான் விடப்பட்டது. '75-ஆம் ஆண்டு ஜனவரியிலேயே 3 கோடி காலன்தான். பிப்ரவரியில் 2½ கோடி காலன் தான். மே மாதத்தில் இருந்து அதே தண்ணீரை அக்டோபர் வரை ஒரு நாள் விட்டு ஒரு நாள் தான் கொடுக்க முடிந்தது. அந்த அளவுக்கு மோசமான வறட்சியும் இருந்து இருக்கிறது. ஆனால், அப்படி வறட்சிக்கு நாங்கள் விட்டுவிட மாட்டோம். அக்டோபர் வரை 4½ கோடி காலன் வரை சமாளிக்க முடியும்.

"சென்னை நகரில் குடிநீர் வாரியத்தின் குழாய்க்கிணறுகள் 3,222 உள்ளன. பெரிய கிணறுகள் 1,116, இரும்புத் தொட்டிகள் 289, சிமெண்ட் தொட்டிகள் 125, தண்ணீர் லாரி 48. இவைகளைப் பயன்படுத்தி, தேவையான இடங்களுக்குத் தண்ணீர் உடனுக்குடன் அனுப்பி வைக்கிறோம்.

"எருக்கஞ்சேரியில் கொடுங்கையூர் பகுதியில் 21 இரும்புத் தொட்டிகள் மூலம் தண்ணீர் வழங்கப்படுகிறது. அங்கு நிலத்தடித் தண்ணீர் உப்பாக இருப்பதால், சென்னை நகரக் குழாய்த் தண்ணீரை அங்கு 1½ ஆண்டுக்

காலத்தில் நீட்டித்துத் தெருக் குழாய் மூலம் தண்ணீர் விநியோகிக்கப்படும்.

"இந்தக் குடிநீர் அவசர நிலைமையைச் சமாளிப்பதற்காகவும், புகார்களை அணுகுவதற்காகவும், வாரியத்தில் மேற்பார்வைப் பொறியாளர் ஒருவரை 3 மாத காலத்துக்கு நியமித்து உள்ளோம்.

''திருவான்மியூர் பகுதியிலுள்ளவர்களுக்குக் குடிநீர் வழங்க மேல் நிலைத் தொட்டி அமைக்கும் பணி முடிந்துவிட்டது. விரைவில் அங்கிருந்து குடிநீர் வழங்கப்படும். தற்போது அந்தப் பகுதியில் மிகையாகக் கிடைக்கும் தண்ணீரை இந்திரா நகர், சாஸ்திரி நகர் ஆகிய பகுதிகளுக்குத் தண்ணீர் லாரிகள் மூலம் வழங்கி வருகிறோம்.

''திருவான்மியூரையடுத்த பாலவாக்கம் பகுதியில் சில தனிப்பட்டவர்கள். கிணறுகளைத் தோண்டி, தண்ணீர் எடுத்து லாரிகள் மூலம் சென்னை நகரில் ஓட்டல்கள் போன்ற நிறுவனங்களுக்கு விற்பனை செய்து வருவதாக என் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. இது குறித்துத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

''குடிநீர் வாரியத்தைச் சேர்ந்தவர்கள் எவரேனும் பொதுமக்களுக்கு வழங்கப்படும் தண்ணீரை விற்பனை செய்வதாகப் புகார் தெரிவிக்கப்பட்டால், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.''

[2.7.'82 அன்று மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள், செய்தியாளர்கள் கூட்டத்தில் தெரிவித்த கருத்துக்கள்.]




**உள்ளம் கவர்ந்தது!**

தமிழரசு இதழ்களின் ஒவ்வொரு அட்டையும் உள்ளத்தைக் கவரும் வண்ணம் உள்ளன.

'தன்னிறைவுத் திட்டப்பணிகள் பற்றிய கட்டுரைகள் மிக்க பயனுள்ளவையாக இருக்கின்றன. பண்டிதமணி நூற்றாண்டு நிறைவு விழாக் கட்டுரை சிறப்பாக இருந்தது.

—ச. புகழேந்தி.
திருவையாறு

**சிறப்பாக இருந்தது!**

'பண்டிதமணி' பற்றி டாக்டர் மெ. சுந்தரம் எழுதிய கட்டுரை மிகவும் சிறப்பாக இருந்தது.

—இராம. முத்துக்கருப்பன்
திருக்கோவிலூர்.

**அருமை! அருமை!**

மாணவர் பக்கம் —ஓவியர்களுக்கு உதவுவோம் - கீரை' பற்றிய கட்டுரைகள் அருமை! அருமை!

—பு. இளங்கோ
திருவையாறு

**படம் பிடித்துக் காட்டியது!**

தருமபுரி மாவட்டத்தில் ஐந்து நாட்கள் கட்டுரை, எங்கள் மாவட்ட வளர்ச்சிப் பணிகளைப் படம் பிடித்துக் காட்டியது.

—அ. விவேகானந்தன்
கிருஷ்ணகிரி.

**சிறுகதை வேண்டும்!**

தமிழரசில் சிறுகதைகள் — துணுக்குகள் நிறைய இடம் பெற வேண்டும்.

—வி. பி. செல்வராஜ்
கும்பகோணம்.

**வளரும் தமிழகம்!**

'வளரும் தமிழகம்' என்ற தலைப்பில் வெளியிடும் அமைச்சர் பெருமக்களின் உரைத் தொகுப்பு நெஞ்சைத் தொடுகின்றன.

—டி. சுவாமிநாதன்
பேரணாம்பட்டு.

**படமும் செய்தியும்**

'தமிழரசு' முன்பு 'படமும் செய்தியும்' வெளியிட்டு வந்தது. அதைப்போல மீண்டும் தொடர்ந்து வெளியிட வேண்டும்.

—இரத்தினவேல்
ஸ்ரீபெரும்புதூர்.

**அரசுப்பணிகள் :**

அரசின் அறிவிப்புகள் - ஆக்கப் பணிகள் பற்றிய தொகுப்பு, தமிழக அரசின் திட்டங்கள்- ஆற்றி வரும் பணிகள் ஆகியவற்றைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

—பி. நீலாவதி
திருவள்ளூர்.

# உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!

ஆனந்தன்



'தனி ஒருவனுக்குணவு இல்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்றார் பாட்டுக்கொரு புலவர் பாரதி.

உயிருக்கு உறுதுணையாவது உணவு. உணவு இல்லையெனில் வாழ்க்கை இல்லை. குழந்தைப் பருவத்தில் போதிய சத்துணவு இல்லையெனில் குழந்தையின் உடல் நலத்துடன், அறிவுத்திறனும் பெரிதும் பாதிக்கப்படுமென அறிவியல் ஆராய்ச்சிகள் நிறுவியுள்ளன.

நாட்டின் பொருளாதார, சமூக, பண்பாட்டு வளர்ச்சி அந்த நாட்டின் கல்வி வளத்தைப் பொறுத்தது என்று நம் ஆராய்ச்சியாளர்கள் விளக்கியுள்ளனர். குழந்தைப் பருவத்தில் நல்ல சத்துணவு இல்லையெனில் குழந்தையின் கல்வியும் கேடுறும். எனவேதான், மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் இம்மாபெரும் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தினை வழங்கியுள்ளார்கள்.

**இலவசச் சத்துணவுத் திட்டம் —துவக்க விழா!**

செங்கல்பட்டு மாவட்டம், வில்லிவாக்கம் தொகுதியைச் சேர்ந்த 'மேல்அயனம்பாக்கம்' என்ற கிராமத்தில் இலவசச் சத்துணவுத் திட்டத் துவக்க விழா 1-7-82 காலை, சீரோடும் சிறப்போடும் மங்கள இசையுடன் துவங்கியது. சைதாப்பேட்டை கோட்ட வளர்ச்சி அலுவலர் திரு. சி. சண்முகசுந்தரம் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

விழாவுக்கு, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எச். ஜே. இராமச்சந்திரன் இ. ஆ. ப., அவர்கள் தலைமை வகித்தார். அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''செங்கல்பட்டு மாவட்டத்தில் 4,315 மையங்கள் இருக்கின்றன. அதில் சமூகநலத்துறையின் கீழ் இயங்கும் மையங்கள் 2,005. செங்கல்பட்டு மாவட்டத்தில் 4 இலட்சத்து 80 ஆயிரத்து 18 குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கப்படுகிறது. இதற்கு மாதம் 4 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் செலவாகும். வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஊராட்சிகளின் எண்ணிக்கை பதினேழு. இதில் ஒரு வேளை இலவச சத்துணவு உண்ணும் குழந்தைகளின் எண்ணிக்கை 4989. மேல்அயனம்பாக்கத்தில் 140 குழந்தைகளும், கீழ்அயனம்பாக்கத்தில் 123 குழந்தைகளும் இலவசச் சத்துணவுத் திட்டத்தில் இடம் பெற்றுள்ளனர்.

**நல்லதொரு திட்டம் நாடு பாராட்டுகிறது**

குத்து விளக்கை ஏற்றி சத்துணவுத் திட்டத்தினைத் துவக்கி வைத்து மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் உரையாற்றியபோது குறிப்பிட்டார்:

''இந்தியாவிலுள்ள 22 மாநிலங்களில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு ஏழைக் குழந்தைகளுக்குஇலவசச் சத்துணவுத் திட்டத்தைத் துணிச்சலோடு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்து இருக்கிறார்கள். நல்ல எண்ணத்தில் நல்லவை தான் தோன்றும். அந்த அடிப்படையில் இந்த நல்ல, பயனுள்ள திட்டத்தைப் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழகத்திற்குக் கொண்டு வந்திருப்பதை நல்ல உள்ளம் கொண்ட அனைவரும் பாராட்டாமல் இருக்க மாட்டார்கள். நல்ல நிலத்தில்தான் நல்ல பயிர் விளையும் என்பதைப் போல, புரட்சித் தலைவர் அவர்களின் நல்ல மனத்தில் நல்லதொரு திட்டம் உருவாகியிருப்

பதை நாம் மட்டுமல்ல, மற்றைய மாநிலத்தவர்களும் பாராட்டுகின்றனர்.

**குழந்தைகளின் அறிவு வளர்ச்சி**

"வருங்காலக் குடிமக்களாகிய நம் குழந்தைகளின் தேவைகளை நிறைவு செய்து, அவர்கள் தங்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சியையும் முழு வளர்ச்சியையும் காண வைப்பது நமது தலையாய கடமையாகும். இந்தப் பணியில் பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் உள்ள பொறுப்பு, மிகவும் முக்கியமானது, அதிலும் குழந்தைகளின் இளம் பருவத்தில் பாடம் கற்பிக்கும் ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களின் பங்கு, மிகமிகப் பெரியது. அவர்கள் குழந்தைகளின் அறிவு வளர்ச்சியை மட்டுமின்றி, உடல், உணர்வு, பண்பு ஆகியவற்றின் வளர்ச்சிகளையும் ஒருங்கே கவனிப்பதற்கு, இப்புதிய சத்துணவுத் திட்டம் பல வாய்ப்புக்களை அளிக்கிறது. இப்புதிய சத்துணவுத் திட்டத்தின் நோக்கங்களில் உணவியற் கல்வியும், குழந்தைகளின் வளர்ச்சியும் முதலிடம் பெற்றுள்ளன. இவ்வுணவுத் திட்டத்தில் நலம் தரும் நல்லுணர்வைத் தருவதுடன், அதன் நன்மைகளைக் குழந்தைகள் உணரும் பொருட்டுப் படக்காட்சிகள், கதை சொல்லுதல், ஆடல் பாடல்கள், பள்ளித் தோட்டம் அமைத்தல் முதலிய செயல்முறைகள் மூலம் உளவியற் கல்வியும் புகட்டப்படுகிறது.

**ஒரு வேளையானது**

"தமிழ்நாட்டில் 100-க்கு 52 பேர் ஏழ்மைக் கோட்டுக்குக் கீழே இருக்கிறார்கள். 100-க்கு 18 பேர் வறுமைக்கோட்டிற்குக் கீழ் இருக்கிறார்கள். 100-க்கு 11 பேர் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஏழ்மையில் பட்டினி கிடக்கும் குழந்தைகளுக்கு ஒரு வேளையாவது உடலைத் தேற்றுகின்ற அளவுக்குச் சத்துணவு அளிக்க வேண்டும் என்பதே இந்தத் திட்டத்தின் நோக்கம். புரட்சித் தலைவர் நல்லவர்-வல்லவர் என்று பேர் பெற்றதோடு நின்றுவிடாமல் அவர் நம்மவர் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றதனால்தான் இந்த நல்ல திட்டத்தினை - யாரும் நினைக்காததைச் செய்ய முன்வந்துள்ளார்.

**60 இலட்சம் குழந்தைகள் பயன் பெறுவர்**

"தமிழ்நாட்டில் 2 வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளின் எண்ணிக்கை 42,10,000. 5 வயது முதல் 10 வயது வரையிலுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை 63,73,000. ஆக 2 வயது முதல் 10 வயது வரை உள்ள குழந்தைகளின் எண்ணிக்கை 1 கோடியே 5 இலட்சத்து 83 ஆயிரம். இதில் ஏழ்மை நிலையில் உள்ள 60 இலட்சம் குழந்தைகளுக்கு இச்சத்துணவு அளிக்கும் பொறுப்பைத் தமிழக அரசு பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் 4 ஆயிரத்து 343 குழந்தைகள் காப்பகங்கள் இருக்கின்றன. மேலும் 20 ஆயிரம் காப்பகங்களை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. சமையல்கூடம், உணவுக் கூடம் கட்ட ரூ. 38 ஆயிரம் வரை ஆகிறது.

**பணத்தைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை!**

"தமிழக வரவு-செலவுத் திட்டம் (பட்ஜெட்) பற்றாக் குறையில் இருக்கிறது. அப்படி இருக்கும்போது ஏழைகளுக்கு இலவச உணவு அளிக்க வேண்டும் என்ற நோக்கில் அதைப் பொருட்படுத்தாமல் செலவு செய்ய முன்வந்து இருக்கிறோம். விலைவாசி ஆண்டுக்கு ஆண்டு கூடினாலும், சத்துணவுத் திட்டத்திற்கான பணமும் கூடுதலாகும். அதனைக் கருத்தில் கொள்ளாமல் செலவு செய்யப்படும்.

**கண்காணிக்க வேண்டும்**

"சத்துணவுத் திட்டத்துக்காக 100 கோடி ரூபாய் செலவழிப்பது என்பது முக்கியமல்ல. அந்தத் திட்டம் சரியாக, ஒழுங்காகப் போய்ச் சேர வேண்டியவர்களுக்குப் போய்ச் சேருகிறதா என்பது தான் முக்கியம். இந்தத் திட்டத்தில் கட்சி வேறுபாடு கிடையாது.

"அந்தந்தப் பகுதியிலுள்ள மக்கள் . கண்காணிப்பதோடு இந்தத் திட்டம் வெற்றி பெற மக்களும் ஒத்துழைப்புத் தர வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

குழந்தைகள் காப்பகத்தில் ஒரு குழந்தைக்கு சத்துணவு ஊட்டப்படுகிறது





### சிலம்புச் செல்வர்

இவ்விழாவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் திரு ம.பொ. சிவஞானம் அவர்கள் தமது உரையில், தெரிவித்ததாவது:

“பட்டினி - பசி என்பது பரம்பரையான வியாதி - கல்தோன்றி மண் தோன்றாக் காலம் முதல் இதுவரை எந்த அரசும் ஏழைக் குழந்தைகளின் பட்டினியைப் போக்க முன் வந்ததில்லை. மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்களின் சீரிய தலைமையிலான அரசு ஒன்று தான் பட்டினியைப் போக்க முன் வந்து இருக்கிறது. இதைவிட வேறு என்ன இருக்க முடியும்? போட்ட உணவையே மீண்டும் மீண்டும் போடாமல், நாளுக்கு ஒரு சுவையான சத்தான உணவு வழங்கப் போகிறார்கள் புரட்சித் தலைவர் என்று சொல்ல இதைவிட வேறு என்ன செய்ய வேண்டும்? தீ விபத்து, வெள்ளச் சேதம் ஏற்படும் போதெல்லாம் ஓடி வந்து உதவும் முதல் கரமாக இந்தப் புரட்சித் தலைவர் அவர்களின் கரம்தான் இருந்ததை நாமெல்லாம்பார்த்திருக்கிறோம். இயற்கையாக அவர் உள்ளத்தில் ஏற்பட்ட உணர்வுதான், இந்தச் சத்துணவுத் திட்டம், எந்த ஆட்சி வந்தாலும் இந்தத் திட்டத்தைக் கைவிட முடியாது.

''உண்டி கொடுத்தோர்
உயிர் கொடுத்தோரே''

என்கிறது மணிமேகலைக் காப்பியம். அந்தச் செயலை இன்று முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் செய்து வருகிறார். மத்திய அரசின் 20 அம்சத் திட்டத்துடன் இதனைச் சேர்த்து 21 அம்சத்திட்டமாக இனி இருக்கும். இப்படிப்பட்ட திட்டத்தைக் குறைவாக யாராவது மதிப்பிட்டால் இதைவிடப் பாவமானது வேறு எதுவும் இருக்க முடியாது'' என்றார்.



### மேலவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு மேலவைத்துணை தலைவர் திரு புலமைப்பித்தன் அவர்கள் தமது உரையில்.

''வயிற்றுக்குச் சோறு உண்டு
கண்டீர்-இங்கு
வாழும் மனிதருக்கெல்லாம்''

என்றார் பாரதி-அந்தப் பாரதி கண்ட கனவை நனவாக்கி வருகிறார் புரட்சித் தலைவர் அவர்கள். தான் பெற்ற பசித் துன்பத்தை நாட்டு மக்களும் பெற்றுவிடக் கூடாதே என்பதில் அக்கறை கொண்டு சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார். பசிப் பிணி என்ற நோயைத் தீர்த்து வைக்கிற வைத்தியராக முதல்வர் அவர்கள் விளங்கி வருகிறார்'' என்று குறிப்பிட்டார்.

வில்லிவாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜே.சி.டி. பிரபாகரன் அவர்கள் பேசுகையில்—

''அரசியல் மறுமலர்ச்சிக்கு வித்திடப் போகிற திட்டம் இந்தச் சத்துணவுத் திட்டம். இந்தத் திட்டம் எனது தொகுதியில் துவக்கி வைக்கப்பட்டதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். திட்டம் வெற்றி பெறத்தொகுதி மக்களின் சார்பில் உத்தரவாதத்தைத் தருகிறேன்'' என்று குறிப்பிட்டார்.

விழாவில் சமூகநலத்துறை ஆணையர் திருமதி ஜே. அஞ்சனி தயானந்த் இ.ஆ.ப., அவர்கள், செங்கல்பட்டு மாவட்டக் கல்வி அலுவலர் திரு சிவதாணுப் பிள்ளை, மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி இராஜம்மாள் ஆகியோர் உரையாற்றினர்.

263 ஏழைக் குழந்தைகளுக்குச் சர்க்கரைப் பொங்கல், சாம்பார் சாதம், தயிர்சாதம், கூட்டு, பொரியல், கீரை ஆகியவைகளை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பரிமாறினார்கள்.

மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் திரு எஸ். எம். சண்முகசுந்தரம் அவர்கள் நன்றி கூறினார்.

குழந்தைகளைத் தெய்வமெனப் போற்றித் தூய்மையுடனும் சக்தியுடனும் அவர்களை வளர்ப்பதே ஒரு சமுதாயம் குழந்தைகளுக்கும் நாட்டிற்கும் செய்யக் கூடிய பெரும்பணியாகும்.

இத்திட்டம் எதிர்காலத்தில் தமிழகத்தின் மனித ஆற்றலைப் பெருக்குவதற்கான முதலீடு என்றால் அது மிகையாகாது.



பீங்கான் உற்பத்திக்கான மூலப்பொருள் ஆய்வுக் கூடம்

# தமிழகத்தின் புகழ்பரப்பும் பாண்டங்கள்



தமிழ்நாட்டில் மட்பாண்டம், கண்ணாடி மற்றும் உருகாத கலவை செய்வதற்குத் தேவையான மான்சைட், கிரானைட், மைக்கா களிமண் போன்ற பல தாதுப்பொருள்கள் அதிகமாகக் கிடைக்கின்றன. பல்லாண்டுகளுக்கு முன்பே மட்பாண்டத் தொழில்வளர்ச்சிக்கு இம்மாநிலத்தில் வாய்ப்பிருப்பதை உணர்ந்தே அரசு,மட்பாண்டத் தொழில் அபிவிருத்திக்கு உதவ முன்வந்தது. அதனால்தான் சேஷசாயி தொழிலகம் வடலூர், நெய்வேலி மட்பாண்டத் தொழிலகம், பாரி கம்பெனி, ராணிப்பேட்டைமுதலியன துவக்கப்பட்டன. அரசு மட்பாண்டத் தொழிலை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தில் இயந்திரச் செங்கல் தொழிற்சாலை ஊறுகாய் ஜாடிகள், கற்குழாய் தொழிற்சாலைகள், பீங்கான் கலைப் பொருள்கள் உற்பத்தி நிலையங்கள், மின் தடைகள், மற்றும் இதர பீங்கான் சாமான்களைச் செய்யும் தொழிலகங்கள் ஆகியவற்றை அமைத்துள்ளது. மேலும் மட்பாண்ட சிறுதொழில் அதிபர்களுக்கு உதவும் வகையில் ஒரு தனிப்பட்ட தொழிற்பேட்டையையும் ஏற்படுத்தியுள்ளது. தென் இந்தியாவிலேயே மட்பாண்டத் தொழிலில் ஒரு குறிப்பிட்ட ஆண்டுகள் தொழிற் பயிற்சி கொடுக்க ஒரு பள்ளியும் அமைக்கப்பட்டுள்ளது.

1973-ஆம் ஆண்டு இறுதியில் அரசு தனது கட்டுப்பாட்டின் கீழுள்ள மட்பாண்டப் பிரிவுகளை தனியாக ஒரு பொது நிறுவனம் அமைத்து அவைகளை வணிக நோக்கத்தோடு இயக்க முடிவு செய்தது. இதனால் 1974 ஆம் ஆண்டின் இடையில் தமிழ் நாடு மட்பாண்டத் தொழில் நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது.

அது திருமழிசை இயந்திரச் செங்கல் தொழிற்சாலை, பீங்கான் தொழிலகம், கற்குழாய்த் தொழிற்சாலை, கலை நிலையங்கள், விருத்தாசலம், பெரம்பூர் பீங்கான் தொழில் மையம், ஓமலூர் மற்றும் பணி வசதி நிலையம், தொழிற்பேட்டை ஆகியவற்றை இயக்கி வருகிறது. 1968-ல் இயந்திரச் செங்கல் தொழிற்சாலை ரூ. 75 இலட்சம் மூலதனத்துடன் செக்கோஸ்லோவியா இயந்திரங்களைக் கொண்டு தொடங்கப்பட்டது. தேவையான களிமண் அதனை அடுத்துள்ள 180 ஏக்கர் நிலத்திலிருந்து கிடைக்கிறது. முதலில்



உப்பு மெருகிட்ட கற்குழாய்கள் தயாரிக்க உதவும் சூளைகள்.

உலை எண்ணெய்யைக் கொண்டு இங்குள்ள ஹாப்மேன் சூளை இயங்கியதால் சுமார் 60,000 செங்கற்கள் ஒரு நாளைக்கு உற்பத்தியாயின. ஆனால் இப்போது நிலக்கரி கொண்டு இயக்குவதால் சுமார் 20,000 முதல் 25,000 வரை ஒரு நாளைக்கு உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கு உற்பத்தி செய்யப்புடும் செங்கற்கள் மற்றவற்றைவிட உறுதியாக உள்ளன. இத்தொழிலகத்தின் வளர்ச்சிக்காக துளையிட்ட செங்கற்கள்பளபளப்பான கற்கள் முதலியவையும் உற்பத்தி செய்ய ஆராயப்பட்டது. கல்பாக்கம் அணு மின்நிலையத்துக்கான பிரத்தியேக கூரை ஓடுகள் இங்குதான் உற்பத்தி செய்யப்பட்டன. தடுப்புக்கட்டைகளும், தக்கை ஓடுகளும் கூட இங்கு உற்பத்தி செய்ய முடிகிற்து. விருத்தாசலம் பீங்கான் தொழிலகம் துப்புரவுச் சாமான்கள், மின்தடைகள், மற்ற பீங்கான் பொருள்களை உற்பத்தி செய்கிறது. இங்கு உள்ளூர் தொழில்நுட்பமே பின்பற்றப்படுகிறது. உற்பத்திப் பொருள்கள் நீடித்த உழைப்பிற்கும் குறைந்த விலைக்கும் பெயர் பெற்றவை. பீங்கான் பொருள்கள், தாஜ்மஹால் சென்டியர் போன்ற 5 நட்சத்திர ஓட்டல்களால் வாங்கி ஆதரிக்கப்படுகின்றன. முகவர்கள் மூலமாக தெற்கு மாநிலங்களில் எல்லா இடங்களிலும் பீங்கான் பொருள்கள் விற்கப்படுகின்றன.

கற்குழாய் செய்வதற்கான களிமண் அதிகமாக உள்ள இடங்களில் சுரங்க வேலைக்கான வசதிகளை இக்கம்பெனி பெற்றுள்ளது. இக்களிமண்ணைக் கற்குழாய் தொழிற்சாலை பயன்படுத்தி மிக நேர்த்தியான கற்குழாய்களை ஐ. எஸ். ஐ. த்ரத்திற்குக் குறையாமல், கடந்த பல்லாண்டுகளாக உற்பத்தி செய்து வருகிறது. சாதாரண உப்பைக் கொண்டு இக்குழாய்கள் மெருகேற்றப்படுகின்றன. நகராட்சிகள், வடிகால் வாரியங்கள், மற்றும் பலவகைக் கட்டிடத் தயாரிப்பாளர்கள் டாசல் கற்குழாய்களையே அதன் சூளையிடப்பட்ட தரத்திற்கும் மெருகின் நீடித்த உழைப்பிற்கும் தேர்ந்தெடுத்து வாங்குகிறார்கள். ஆனால் அதிக உஷ்ணம் கொடுக்கக்கூடிய தகுந்த உயர்ந்த ரக நிலக்கரி போதுமான அளவிலும் குறிப்பிட்ட நேரத்திலும் கிடைக்காமையால் இத்தொழிலகம் தனது முழு உற்பத்தித் திறனுடன் இயங்க முடியவில்லை. எனினும் இத்தொழிலகத்தின் சிறப்பான இயக்கத்தைக்கருதி சுமார்ரூ100 இலட்சம் செலவில் இன்னொரு கற்குழாய்த் தொழிலகத்தை கும்மிடிபூண்டியில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் பூர்வாங்க வேலைகள் முடிந்த பிறகு, தொழிலகம் விரைவில் அமைக்கப்படலாம்.



பீங்கான் சிறுதொழிலதிபர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவே 40 தொழிற்கூடங்களைக் கொண்ட தொழிற்பேட்டையை விருத்தாசலத்தில் டாசல் இயக்கி வருகிறது. இங்கு ஒரு நாளைக்கு 4 டன் பீங்கான் பொருள்களைச் சூளையிட்டு தரவல்ல உலை எண்ணெய் கொண்டு இயங்கும்தொடர் சுரங்கச்சூளை ஒன்று சிறு தொழிலதிபர்களின்



இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே எழுதப்பட்ட திருக்குறளிலேயே ஹைட்ரஜன் இல்லையே அணுகுண்டு இல்லையே என்று சொல்வது பொருந்தாது. எழுதப்பட்ட காலத்தையும் ஒப்பு நோக்கவேண்டும்.

—பேரறிஞர் அண்ணா

வசதிக்காக அமைக்கப்பட்டுள்ளது. கரியைக் கொண்டு இயக்கும் சூளைகளில் ஒரு பொருள் சூளையிட 10 நாட்கள்கூட ஆகும்.

ஆனால் இந்த நவ்ன சூளையில் பொருள்கள் 24 முதல் 30 மணி நேரத்தில் சூளையிடப்படுகின்றன. புதிய பீங்கான் வடிவமைப்புகள், மெருகுகள் கண்டு பிடிக்கப்பட்டுப் பல இடங்களிலிருந்து கிடைக்கும்மூலப்பொருள்களைப் பயன்படுத்தும் வழிமுறைகள் ஆராயப்பட்டு வருகின்றன. மேலும் ஒவ்வொரு வருஷமும் சில குறிப்பிட்ட மட்பாண்டக் கலைஞர்களுக்கு மின் தடைகள், துப்புரவுச் சாமான்கள் முதலியவை செய்வதில் பயிற்சி அளிக்கப்பட்டும் வருகிறது.

விருத்தாசலம், பெரம்பூர் ஆகிய இடங்களிலுள்ள கலை நிலையங்கள் ஒரு மாதத்திற்கு ரூ. 1 இலட்சம் மதிப்புள்ள 4 டன் கலைப்பொருள்களை உற்பத்தி செய்கின்றன. கலை மற்றும் கைத்திறன் பள்ளியிலிருந்து வெளிவரும் கலைஞர்கள், டிசைனர்கள் ஆகிய பலருக்கு இங்கு வேலை தரப்பட்டு புதிய புதிய கலைப் பொருள்களை உருவாக்குமாறு ஊக்குவிக்கப்படுகிறார்கள். அவர்களின் உற்பத்திப் பொருள்கள், பெங்களூர், ஐதராபாத், பம்பாய், டில்லி முதல்ய இடங்களில் சிறப்புக் கண்காட்சியில் வைக்கப்படுகின்றன. பொது மக்கள் விருப்பத்திற்கிணங்க ஒவ்வொரு ஆண்டும் சுமார் 20 பேருக்கு, கலைப் பொருள்கள் செய்வதில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பிரத்தியேக வண்ணங்கள், கலவைகள், முதலியவற்றை உபயோகித்து மரத்தால் செய்தது போன்ற தோற்றமுள்ள பீங்கான் பொருள்களும் செய்யப்படுகின்றன.

ஓமலூரில் ஒரு சிறிய பீங்கான் தொழில் மையத்தை அமைத்து கிராமப்புற மக்களுக்கும் மட்பாண்டம் செய்வதில் பயிற்சியளிக்கவும் டாசல் மறக்கவில்லை. இத்தொழிலகம் நகரை விட்டு மிக தூரத்தில் அமைதியான இடத்தில் அமைந்துள்ளது. இங்கு குறைவாகப் படித்த கிராமப்புற இளைஞர்கள் மிகவும் கவனமாக பல தரப்பட்ட ஊறுகாய் ஜாடிகளைச் செய்வதைக் காணலாம். இத்தொழிலகம் ஆதாயத்தைத் தரவில்லையானாலும் சமூக நன்மைகளைக் கருதியே டாசல் இதை இயக்கி வருகிறது.

மேற்கூறியவைகளிலிருந்து டாசல் தொழில் நுட்பத்திலும், உற்பத்திப் பொருள்களின் வகைகளிலும், சமூக நன்மைகளைக் கருதியும் பல முனைகளில்இயங்குகிறது என்பதைக் காணலாம். மிகுந்த முயற்சிக்கு பிறகே டாசல் பெயர் தமிழ்நாடு முழுவதும் மற்றும் வடக்கில் முக்கிய நகரங்களிலும் புகழ் பெற்றிருக்கிறது. இது குறித்து டாசல் மிகவும் பெருமைப்படுகிறது.

பீங்கான் துப்புரவுச் சாமான்கள் வடிவ வார்ப்புப் பணிநடைபெறுகிறது.



# பாலர்க்குப் பண்பட்ட கல்வி

"அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்''.

என்றார் வள்ளுவப் பெருந்தகை. மாணவர் அறிவுச் செல்வம் பெற்று விட்டால், எல்லாச் செல்வமும் பெற்றவர்களாவர். அறிவுச் செல்வம், பண்பட்ட கல்வியின் மூலமே பெற இயலும். பாலர்க்குப் பண்பட்ட கல்வியை அளிப்பதற்குத் தமிழக அரசும், கல்வித்துறையும் பல திட்டங்களை வகுத்து நிறைவேற்றி வருகின்றன.

மேலும்,
''அறிவற்றங் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்''.

என்கின்றார் திருவள்ளுவர். பாலர்க்குப் பாது காப்பாக இருக்கக் கூடியது அறிவும் கல்வியுமே ஆகும்.

**கல்வியும் பொருளாதார முன்னேற்றமும்:**

ஒரு நாட்டின், சமூகப் பொருளாதாரப் பண்பாட்டு முன்னேற்றம், அந்நாட்டின் கல்வி வளர்ச்சியைச் சார்ந்துள்ளது என்றும், நோக்கமுடைய கல்வி நிலையில் உயர்வு இருந்தால், அம்மக்களின் வாழ்க்கைத்தரம் சிறப்படையும் என்றும் பல கல்வி ஆராய்ச்சிகள் நிறுவியுள்ளன. எனவேதான், நாட்டின் வருவாய்க் கணக்கில் கிட்டத்தட்ட, கால் பங்கினை நம் தமிழகத்தில் கல்விக்காக ஒதுக்கீடு செய்து, பல புதிய, பயனுள்ள திட்டங்களை அமல் படுத்தி வருகின்றோம்.







**கல்வி முதலீடு:**

1982-83ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் ரூ. 291 கோடி கல்விக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. 1975-76ல் கல்விக்கு ஒதுக்கிய தொகை ரூ. 123 கோடிதான். 1982-83ல் பள்ளிக் கல்விக்காக மட்டும் ரூ. 239 கோடி செலவழிக்கப்படும். முன்பெல்லாம், உயர் கல்விக்கு அதிக செலவு செய்யப்பட்டுள்ளதால் ''இந்தியக் கல்வி அமைப்பு, உயர் மட்டம் வலிமை கொண்டும், அடித்தளம் வலிமையற்றும் இருந்தது'' என்று குறை கூறப்பட்டது. இப்போது அந்நிலை இன்றி, அடிப்படையாகிய பள்ளிக் கல்விக்கே பெருந்தொகை செலவழிக்கப்படுகின்றது. குறிப்பாக இப்போது தொடக்கக்கல்விக்கு மட்டும் சுமார் ரூ. 123 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கதாகும்.

**பண்பட்ட கல்வி**

பாலர் பண்பட்ட கல்வியைப் பெற, கல்வி அமைப்பு முறைகளில், பல வகைகளிலும் திட்டமிட்டுச் செயல்பட வேண்டியுள்ளது. போதுமான பள்ளி வசதிகளைச் செய்து கொடுத்தல், ஆசிரியர்களை நியமித்தல், ஆசிரியர்களின் வசதிகளை கவனித்தல், ஆசிரியர்களின் கல்வித்தர வளர்ச்சிக்குப் பல்வேறு பயிற்சிகளை அளித்தல், மாணவர்கள் நலனுக்காகப் பல திட்டங்களை அமல்படுத்தல் போன்ற வகைகளில் பெருமுயற்சி எடுத்துக் கொண்டு, செயல்பட்டு, வெற்றி கண்டுள்ளோம்.

## சாதனைகள்

**மாணவர்கள் சேர்க்கை**

பள்ளி வயது வந்த பிள்ளைகள் பள்ளிகளில் சேர்க்கப்படுவதற்கு, பல திட்டங்கள் அமல்படுத்தப்பட்டு எல்லா வகையிலும் சேர்க்கையை அதிகரிக்கவும், மாணவர் விட்டுப் போகும் நிலை குறையவும் வழிவகைகள் காணப்பட்டன. இதனைப் பின் வரும் புள்ளி விவரங்கள் காட்டும்.

| கல்விநிலை | சேர்க்கப்பட்டவர் சதவீதம் 1975-76 | 1981-82 |
|---|---|---|
| தொடக்கநிலை | 90 | 94.76 |
| உயர் தொடக்கநிலை | 52 | 64.55 |
| இடைநிலை | 32 | 41.36 |

1975-76க்கும் 1981-82க்கும் இடைப்பட்ட காலத்தில் கூடுதலாக 12.07 இலட்சம் மாணவர்களைச் சேர்த்துள்ளோம். இவ்வாறு மாணவர்கள் எண்ணிக்கை அதிகரிப்புக்கு ஏற்ப, ஆசிரியர்கள் எண்ணிக்கை வளர்ந்துள்ளதையும் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| ஆசிரியர்கள் எண்ணிக்கை | 1975-76 | 1981-82 |
|---|---|---|
| 1. உயர்நிலை-மேல்நிலை | 67,712 | 83,914 |
| 2. உயர் தொடக்கப்பள்ளி | 67,926 | 66,221 |
| 3. தொடக்கப் பள்ளி | 1,10,477 | 1,13,036 |
| மொத்தம் | 2,46,115 | 2,63,171 |



**பள்ளிகள் பெருகுவதும் பள்ளிகளில் இட நெருக்கடி ஏற்படுகிற அளவுக்குப் படிக்கின்ற ஆர்வம் பெருகுவதும் ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கு நல்ல அறிகுறியாகும்.**

**—பேரறிஞர் அண்ணா**

(பல உயர்தொடக்கப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகள் ஆக மாற்றப்பட்டதால், 1981-82ல் உயர் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் எண்ணிக்கை குறைந்து தோன்றுகிறது.)

பள்ளி வயதுச் சிறுவர் அனைவருக்கும் தொடக்கக் கல்வியை விரிவாக்குதல் புதிய 20 அம்சத் திட்டத்தில் ஓர் அம்சம் ஆகும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் (அதாவது 1984-85க்குள்) இந்தியா அனைத்திலும் 6-11 வயதுத் தொகுதியினரில் 95 சதவீதத்தினரும் 11-14 வயதுத் தொகுதியினரில் 50 சதவீதத்தினரும் பள்ளிகளில் சேர்க்கப்பட வேண்டும் என்பது ஆறாவது திட்ட இலக்கு ஆகும். தமிழகத்தில் 6-11 வயதுத் தொகுதியைப் பொறுத்தவரை அந்த இலக்கு இப்பொழுதே எய்தப்பட்டு இருப்பதும் 11-14 வயதுத் தொகுதியினரைப் பொறுத்தவரை அந்த இலக்கை விஞ்சியிருப்பதும் மகிழ்ச்சிக்குரியது.

மேலும் 1982-83ஆம் ஆண்டில் 1,000 இடை நிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர் பதவிகள், நடுநிலைப் பள்ளிகளுக்கும் உயர்நிலைப் பள்ளிகளுக்கும் சேர்த்து 150 உடற்பயிற்சி ஆசிரியர் பதவிகள்; நடுநிலைப் பள்ளிகளுக்கும் உயர்நிலைப் பள்ளிகளின் நடுநிலை வகுப்புகளுக்கும் சேர்த்து 500 தமிழாசிரியர் பதவிகள்; உயர்நிலைப் பள்ளிகளுக்கு 50 தலைமை ஆசிரியர் பதவிகள் உயர்நிலைப் பள்ளிகளுக்கு 300 பி.எட். தர ஆசிரியர் பதவிகள் ஆகியவை ஏற்படுத்தப்படும். நடுநிலைப் பள்ளிகளில் உள்ள பகுதி நேரக் கைத்தொழில் ஆசிரியர் பதவிகளில் 100, முழுநேரப் பதவிகளாக உயர்த்தப்படும்.

1981 அக்டோபர் 1ம் தேதி நிலவரப்படி தமிழ்நாட்டில் மொத்தம் 36,896 பள்ளிகள் இருந்தன. அவற்றில் முதல் நிலைப் பள்ளிகள் 27,767. நடுநிலைப் பள்ளிகள் 5,556. உயர்நிலைப் பள்ளிகள் 3,573 (1,405 மேல்நிலைப் பள்ளிகள் உட்பட). மைய அரசின் உயர்நிலைப் பள்ளிக் கல்வி வாரியம் போன்றவற்றோடு இணைந்த 137 பள்ளிகளும் -79 உயர்நிலைப் பள்ளிகளும் 58 மேல்நிலைப் பள்ளிகளும் - மொத்தப் பள்ளிகளின் எண்ணிக்கையாகிய 36,896-ல் அடங்கும்.

## பள்ளியை விட்டு இடையில் நின்று விடுவோர்

பொருளாதார சமூகப் பிரச்சினைகளால் அரும்பாடுபட்டுச் சேர்த்த மாணவர்களில் பெரும்பாலோர் பள்ளியை விட்டு நின்று விடுகிறார்கள். அவ்வாறு நிற்காமல் இருக்கப் பல புதிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. 1977-78முதல் 1-3 வகுப்புகளில் தோல்வி என்ற நிலை இருக்கக் கூடாது என்று ஆணையிட்டு, தேக்கத்தைக் குறைக்க வழி செய்யப்பட்டது. இந்நிலையில் ஆசிரியர்கள், புது நோக்கோடு பயிற்சிபெற வேண்டும் என்று 1-3 வகுப்புகளில் உள்ள எல்லா ஆசிரியர்களுக்கும் பணியிடைப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. இவற்றின் விளைவாக 1-5 வகுப்புகளில் பள்ளியை விட்டு நின்றவர்கள் 1975-76ல் 42.29%. இருந்தது 1981-82ல் 30.67 %. ஆக குறைந்து விட்டது.

## தாழ்த்தப்பட்டோரின் பங்கேற்பு உயர்வு

மேலும் மாணவ மாணவியரில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் எண்ணிக்கையும் முன்னேற்றம் கண்டுள்ளது. 1975-76ல் 18%. மாணவ மாணவியர்தான் ஆதிதிராவிடர் பழங்குடியினர். 1981-82ல் இது 21%. ஆக உயர்ந்துள்ளது. இவ்வாறே ஆதிதிராவிடர் பழங்குடியினத்தைச் சார்ந்த ஆசிரியர்களின் சதவீதம் 9%. லிருந்து 13%.ஆக உயர்ந்துள்ளது.

## நலிந்தவர்களுக்குச் சிறப்புத் தனிப்பாடம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு 1981-82ஆம் ஆண்டில் 500 உயர்நிலைப் பள்ளிகளில் 8, 9, 10 வகுப்புகளில் பயிலும் அம்மாணவர்களுக்கு ஆங்கிலம், கணக்கு, அறிவியல் ஆகிய பாடங்களில் பள்ளி நேரத்திற்குப் பின்னர் நாள்தோறும் மொத்தம் 1½ மணி நேரம் உரிய ஆசிரியர்களின் 'நேரடி மேற்பார்வையில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இவ்வாண்டு சுமார் 37,600 மாணவர் பயன் பெற்றனர். இந்த முன்னோடித் திட்டம் 1982-83லும் தொடர்ந்து செயல்படும். மேலும் 300 பள்ளிகளுக்கு விரிவாக்கம் செய்யப்படும்.

## ஊக்கச்செயல்களும் ஆக்கப்பணிகளும்

மாணவர்களின் சேர்க்கை நிலை உயரவும், தேக்கம்-விரையம் குறையவும் மேற்கொண்ட பல ஊக்கச் செயல்களில், மதிய உணவு, இலவசச் சீருடை, இலவசக் கற்பலகை புத்தகங்கள் வழங்குதல் ஆகியவை அடங்கும்.

1975-76ல் சுமார் 12 இலட்சம் மாணவர்கள் இலவசக் கற்பலகை, புத்தகங்களைப் பெற்றார்கள். 1981-82ல் இவ்வுதவி பெறுவோர் 13 இலட்சம் ஆக உயர்ந்துள்ளனர்.

## மதிய உணவு

1975-76ல் 28286 மதிய உணவ மையங்களில் 20.03 இலட்சம் குழந்தைகள் மதிய உணவு பெற்றார்கள் அதற்கு ஆன செலவு ரூ458 இலட்சங்கள். 1981-82ல் இது 30493 மையங்களாகவும், 20.51 இலட்சம் பிள்ளைகளாக





வும் உயர்ந்தன. இவர்களுக்கான செலவு ரூ. 505 லட்சமாகும்.

### மாண்புமிகு முதல்வரின் ஏழை இளஞ் சிறார்க்கு அமுதூட்டும் திட்டம்

சத்துணவு குழந்தைப் பருவத்தில் கிடைக்காவிட்டால் இளஞ்சிறார்களின் அறிவுத் திறனும் பாதிக்கும் என்று ஆராய்ச்சிகள் நிறுவியுள்ளன. எனவே, வறுமையில் உழன்று சத்துணவு இன்றி, ஆற்றலையும் திறனையும் வளர்த்துக் கொள்ள இயலாத நிலையைக் களைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 2 முதல் 10 வயதுவரை உள்ள குழந்தைகளுக்கு ஆண்டு முழுவதும் சத்துணவு வழங்கும் திட்டத்தை 1982 ஜூலை முதல் தேதியிலிருந்து வழங்கியுள்ளார்கள். இதன்படி 5 முதல் 9 வயது வரை உள்ள 38.15 இலட்சம் குழந்தைகளுக்கு ஆண்டு முழுவதும் நாளும் 50 காசு செலவில் சத்துணவு, கல்வித் துறையால் வழங்கப்படும். ஆண்டொன்றுக்கு இதற்குச் சுமார் ரூ. 70 கோடி பள்ளிக் கல்வித் துறையில் செலவாகும்.

### பள்ளிச் சீரமைப்பு மாநாடும் இலவசச் சீருடையும்

இவ்வாண்டில் (1981-82) டிசம்பர் 1981 வரை நடத்தப்பட்ட 50 பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் மூலம் ரூ. 63 இலட்சம் பொது மக்களிடமிருந்து நன்கொடையாகப் பெறப்பட்டது. பொது மக்களின் நன்கொடையைக் கொண்டு அதே காலக் கட்டத்தில் 49,378 மாணவர்களுக்குச் சீருடைகள் இலவசமாக வழங்கப்பட்டன.

### புத்தக வங்கி

ஏழை மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் வாங்கும் செலவினைத் தவிர்ப்பது புத்தக வங்கிகளின் நோக்கமாகும். 1.10.81 நிலவரப்படி 32,630 பள்ளிகளில் இவ்வங்கிகள் ஏற்படுத்தப்பட்டு இருந்தன. இவ்வங்கிகளில் மொத்தம் உள்ள புத்தகங்கள் 22 இலட்சத்திற்கும் அதிகமாகும். பயன் பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 10 இலட்சத்திற்கும் அதிகமாகும். உயர் வகுப்புக்குச் செல்லும் மாணவர்கள் நன்கொடையாக வழங்கும் புத்தகங்களைக் கொண்டும், பெற்றோர் ஒத்துழைப்புடனும் சமூகத் தொண்டு நிறுவனங்கள் உதவியுடனும், இப்புத்தக வங்கிகள் ஏற்படுத்தப்பட்டன.

### ஆசிரியர் நலன்கள்

பாலர் ப்ண்பட்ட கல்வி பெற வேண்டுமானால் ஆசிரியர் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்; தேவையான அடிப்படை நலன்களும் பெற வேண்டும். இவ்வகையில் அண்மைக் காலத்தில் பல புதிய சலுகைகள் அளிக்கப்பட்டன.

பணியில் சேர்ந்த நாளிலிருந்து ஒரே தகுதியில் 20 ஆண்டுகள் பணி முடித்திருந்தால் 10 ஆண்டுகள் தேர்வு நிலையில் 10 ஆண்டுகள் தகுதி முடிக்காமல் இருந்தால் கூடி சிறப்பு நிலை (Special Grade) அனைத்து நிலை ஆசியர்களுக்கும் வழங்கி ஆணை பிறப்பிக்கப்பட்டது.

எஞ்சியுள்ள இரண்டாம் நிலைத் தமிழாசிரியர் அனைவரும் 1.1.81 முதல் முதனிலைத் தமிழாசிரியர்களாக உயர்த்தப்பட்டார்கள். இரண்டாம் நிலைத் தமிழாசிரியர் எவருமே இல்லையென்ற நிலை உருவாக்கப்பட்டது இப்போது.

முன்னாள் இந்தி மற்றும் இதர மொழி ஆசிரியர்கள் (தமிழ் தவிர )அரசின் மொழிக் கொள்கை காரணமாக இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களுக்கு 1.4.'73 மற்றும் 1.4.74 முதல் தேர்வு நிலை வழங்கும்போது அவர்கள் முன்னாள் பணியாற்றிய பணிக்காலத்தையும் கணக்கில் கொண்டு தேர்வுநிலை வழங்கலாம் என அரசு ஜூலை 1981ல் ஆணை வழங்கியுள்ளது.

அனைத்து நிலை ஆசிரியர்களுக்கும் ஆண்டு ஒன்றுக்கு 10 நாட்கள் ஈட்டிய

விடுப்பு வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. முன்பு ஆண்டுக்கு 3 நாட்களே இருந்தன. இதுவும் மற்ற எந்த மாநிலமும் வழங்காத சாதனை.

பல ஆண்டுகளாகக் கோரிக்கை எழுப்பி வந்த தலைமை ஆசிரியர்களுக்கென படி ரூபாய் 5 வழங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இடைநிலை ஆசிரியர் பயிற்சிக்காக ஊக்க ஊதியம் ஒன்று வழங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மாநகராட்சிப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குக் காசோலை மூலம் நேரடியாகச் சம்பளம் வழங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மேல்நிலைப் பள்ளிகளில் உதவித் தலைமையாசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

பட்டதாரி ஆசிரியர் தகுதியுள்ள உடற்கல்வி ஆசிரியர்கள் உதவித் தலைமையாசிரியர்களாக வழி வகை செய்யப்பட்டுள்ளது.

இடைநிலை ஆசிரியர் தகுதித் தேர்வு பெற்ற அனைவருக்கும் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதத்தில் பதவி உயர்வு வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களுக்கு மருத்துவ வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

1.4.'82 முதல் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களுக்கு உதவிக் கல்வி அலுவலர்கள் மூலம் சம்பளம் காசோலையாக வழங்கப்படுகிறது.

ஆசிரியர்களுக்கு சைக்கிள் கடன் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கு மூக்குக் கண்ணாடி மற்றும் காதுகேட்கும் கருவி இலவசமாக வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

**கல்வி நிருவாக முன்னேற்றம்**

அனைத்து வசதிகளையும் சிறந்த முறையில் பயன்படுத்தி எதிர்பார்க்கும் கல்விப் பலனைப் பெற, கல்வி நிருவாக அமைப்பு வலிமை பெற வேண்டும். இவ்வகையில் பல முன்னேற்றங்கள் செய்யப்பட்டன.

பெண்கள் பள்ளிகளை ஆய்வு செய்யத் தனியாக இரண்டு மகளிர் பள்ளி ஆய்வாளர்கள் இருந்தனர். தற்போது மேலும் 10 ஆய்வர் பதவிகள் வழங்கப்பட்டு 12 மகளிர் பள்ளி ஆய்வர்கள் பணியாற்றுகின்றனர்.

அனைத்து வருவாய் மாவட்டங்களுக்கும் தனியாக முதன்மைக் கல்வி அலுவலர்கள் இல்லாது இருந்த நிலையை மாற்றி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு முதன்மைக் கல்வி அலுவலர் வீதம் 16 முதன்மைக் கல்வி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே இத்திட்டத்திற்கு என இரண்டு களப்பணி அலுவலர்கள் (Field Officers) தான் இருந்தனர். 1980ல் மேலும் 9 களப்பணி அலுவலர் பணியிடம் வழங்கி இத்திட்டம் மேலும் சிறப்பாகச் செயல்பட வழிவகை செய்ததோடு, 97 மையச் சமையல் கூடங்களுக்குக் கண்காணிப்பாளர் தகுதியில் உயர்த்தப்பட்டது.

## புதிய சாதனைகள்

**ஊராட்சி ஒன்றியப்பள்ளி ஆசிரியர்களை அரசு ஊழியராக்குதல்**

ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளிகளில் பணியாற்றி வந்த ஆசிரியர்களும், அடிப்படை ஊழியர்களும் 1.6.81 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டனர். அப்பள்ளிகளின் கட்டடப் பராமரிப்புத் தவிர, பள்ளி நிருவாகப் பொறுப்பு முழுவதும் பள்ளிக் கல்வித்துறைக்கு மாற்றப்பட்டது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஓர் உதவிக் கல்வி அலுவலர் வீதம், 366 உதவிக் கல்வி அலுவலர்களை நியமித்து அவர்கள் மூலம் இப்பள்ளிகளைப்பள்ளிக் கல்வித்துறை நிருவகித்து வருகிறது. ஒவ்வொரு உதவிக் கல்வி அலுவலரின் அலுவலகத்திலும் இளநிலை உதவியாளர் ஒருவரும் தட்டச்சர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர். கூடுதல் வேலைப் பளுவைச் சமாளிக்க ஒவ்வொரு மாவட்டக் கல்வி அலுவலரின் அலுவலகத்திலும் உதவியாளர் பணியிடம் ஒன்றும் தட்டச்சர் பணியிடம் ஒன்றும் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. தொடக்கக் கல்விக்காகப் பள்ளிக் கல்வி (கூடுதல்) இயக்குநர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்கிய இம் மாபெரும் மாற்றம், தொடக்கக் கல்வித் தர உயர்வுக்கும், விரிவாக்கத்திற்கும் உறுதுணையான ஒரு முக்கியமான நடவடிக்கையாகும்.

**இளஞ்சிறார் கல்வி**

தமிழக அரசு, முதன் முறையாக 1982-83ல் இளஞ் சிறார்கள் கல்விக்கெனப் பெரிய அளவிலான ஒரு திட்டத்தினைத் தொடங்கவிருக்கிறது. இளஞ்சிறார்களுக்குப் பள்ளி செல்லும் மனப்போக்கைப் புகட்டுவதன் மூலம் இளஞ்சிறார் கல்வியானது தொடக்கக்



கல்வி வளரவும் உதவும். மேலும் இது பள்ளி செல்லும் வயதுள்ள சிறுமியர் தம் தம்பி தங்கையரைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பிலிருந்து விடுபட்டு அச்சிறுமியர் பள்ளி செல்வதற்கும் உறுதுணை புரியும். பிரதமரின் புதிய 20 அம்சத் திட்டத்திலும் சிறுமியரிடையே தொடக்கக் கல்வியை மேலும் பரப்புவதற்கு குறிப்பான முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. 1982-83ல் தொடங்க விருக்கும் இத்திட்டத்தின் முதற்கட்டமாக இமமாநிலத்திலுள்ள 4,433 குழந்தைகள் நல மையங்கள் (பால் வாடிகள்) ஒவ்வொன்றிலும் ஒரு நர்சரிப் பிரிவு ஏற்படுத்தப்படும். இந்த நர்சரிப் பிரிவுகளுக்கான பாடத்திட்டங்களை வகுப்பதற்காக 1981 நவம்பரில் ஒரு குழு அமைக்கப்பட்டு உள்ளது. இத்திட்டத்திற்கென 1982-83ல் ரூ. 1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### அஞ்சல் மற்றும் நேர்முகப் பயிற்சி

தொடக்க நிலை ஆசிரியர்கள் (ஹையர் கிரேடு) இடைநிலைத் (செகண்டிரி கிரேடு) தகுதி பெற்று இடைநிலைத் தகுதிக்கான ஊதியத்தைப் பெற வகை செய்யும் பொருட்டுத் தமிழ்நாடு கல்வியாராய்ச்சிப் பயிற்சி நிறுவனம் 5 மாத அஞ்சல்-வழி மற்றும் நேரடித் தொடர்புப் பயிற்சி ஒன்றினை நடத்தி வருகிறது. இத் திட்டத்தில் கீழ் ஆண்டுதோறும் பயன்பெறும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 1982-83லிருந்து 5,000லிருந்து 10,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

### யூனிசிப் திட்டங்கள்

தொடக்கக் கல்வியைச் சார்ந்த பின்வரும் சிறப்பு முன்னோடித் திட்டங்களை யூனிசெப் உதவியுடன் தமிழ்நாடு கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் செயற்படுத்தி வருகிறது:

1. தொடக்கக் கல்விப் பாடத் திட்டத்தைப் புதுப்பித்தல்.
2. சமுதாய வளர்ச்சியோடு இணைந்த கல்வி வளர்ச்சி
3. தொடக்கக்கல்வி வாய்ப்புகளைப் பரவலாக்குதல்.

இம்மூன்று திட்டங்கள் தமிழ்நாட்டில் நிறைவேற்றப்படும் பாங்கினைச் சாலச் சிறந்தது என தேசிய கல்வியாராய்ச்சிப் பயிற்சி நிறுவனம் பாராட்டியுள்ளது.

### தேர்வுமுறைச் சீர்திருத்தம்

மேலும் தேர்வு முறைச் சீர்திருத்த ஆராய்ச்சி, சென்னையிலும் வேறு சில இடங்களிலும், ஆசிரியர்கள் பயன் பெறுவதற்கான தொடர் கல்வி மையங்களை நடத்துதல் ஆகிய பணிகளிலும் இந்நிறுவனம் ஈடுபட்டு வருகிறது.

### மக்கள்தொகைக் கட்டுப்பாட்டுக் கல்வி

மக்கள் தொகைக் கட்டுப்பாடு நடவடிக்கைகளுக்கான ஐக்கிய நாடுகள் நிதி (UNFRA) தரும் சுமார் ரூ. 25 இலட்சம் உதவித் தொகையைக் கொண்டு 1980 ஏப்ரல் முதல் 1983 மார்ச் முடியவுள்ள மூன்றாண்டுக் காலத்தில் தமிழ்நாட்டில் உள்ள



பள்ளிகளில் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுக் கல்வியைச் செயல்படுத்துவதற்கான திட்டம் ஒன்றுக்கு அரசு ஏற்பளித்துள்ளது. மாநில அரசும் தன் பணத்திலிருந்து இத்திட்டத்திற்காக அம்மூன்றாண்டு காலத்தில் ரூ. 3 லட்சம் அளவில் செலவிடும்.

### அனைவருக்குமான திறந்த நிலைக் கல்வி

உயர்நிலைப் பள்ளி நிலையில் பள்ளி சாராக் கல்வியினை விரிவாக்கும் பொருட்டு, அனைவருக்குமான திறந்த நிலைப் பள்ளி ஒன்றை உருவாக்குவது பற்றி ஆலோசனை கூற, குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. வேலை செய்து வருபவர்கள், இல்லத்தரசியர் போன்றோருள் 8 வது தேறியவர்கள் இப்பள்ளி மூலம் உயர்நிலைப் பள்ளிப் படிப்பினைத் தொடர வாய்ப்பு ஏற்படும்.

### மக்கள் நிலை உயர, கல்வி நலம் பெருக்குதல்

இவ்வாறு பாலர் பண்பட்ட கல்வியைப் பெறப் பள்ளி வசதிகளைப் பெருக்கியும், ஆசிரியர் நலனில் ஆர்வங்காட்டியும் கல்விக் கூடங்களின் தரம் உயரும் வழிகளை ஆய்ந்து செயல்படுத்தவும் பள்ளிக் கல்வித்துறை முனைந்து வருகின்றது. இதனால் தமிழகம் கல்வியில் தொடர்ந்து முன்னோடியாக இருந்து, மக்கள் நிலை உயரும் வகையில் கல்வியைப் பரப்பும்; சமூகப் பொருளாதார மறுமலர்ச்சிக்கு வழி வகுக்கும்; அண்ணா காண விழைந்த தமிழகத்தை நிர்மாணிக்கும்.

தற்போது பலனற்றுக் கிடக்
கும் நீர்ப் பரப்புக்களைப் பயன்
படுத்தி மீனவர்களுக்கும் மற்றை
யோருக்கும் இலாபகரமான
வேலை வாய்ப்புக்களை ஏற்
படுத்தி அயல் நாடுகளில் விரும்பி
உண்ணப்படும் விலை மதிப்
புயர்ந்த இறால்களையும் பால்
கெண்டை, மடவை, கொடுவா
போன்றவைகளையும் கடலோ
ரப் பகுதிகளை அடுத்துக் கிடக்
கும் உவர் நீர்ப் பரப்புகளில்
வளர்த்து மீன் உற்பத்தியைப்
பெருக்க முடியும், கடல் ஏற்று
மதிப் பொருள்களில் முக்கிய
இனமான இறால்கள் தற்போது
கடலிலிருந்துதான் பிடிக்கப்படு
கின்றன. இயற்கை வளங்கள்
வரையறையற்றவை எனக் கூற
முடியாது. கடலில் அதிகப்படி
யாக மீன்பிடித் தன்மைக்கான
அறிகுறிகள் காணப்பட்டுள்ளன.

தாழ்வான நிலப்பகுதிகள்,
சதுப்பு நிலங்கள், உவர் நீர்ப்
பரப்புகள், கடலுடன் தொடர்
புள்ள ஆழமில்லாத ஏரிகள்
கடலையடுத்துள்ள உவர் நீர்
ஏரிகள் இவைகளில் இறால்
வளர்ப்பை மேற்கொள்வதன்
மூலம் கடலிலிருந்து பிடிக்கப்
படும் இறால்களன்றி உபரியாக
இறால்களைப் பிடித்து ஏற்றுமதி
செய்துஅந்நியச்செலாவணியைப்
பெருக்க முடியும். கடலிலிருந்து
கிடைக்கும் இறாலின் அளவு
குறையத் தொடங்கியுள்ளதோ
என்ற ஐயம் ஏற்பட்டுள்ள இந்த
நேரத்தில் தமிழ்நாட்டிலுள்ள
56,000 ஹெக்டேர் பரப்பில்
(பெரும்பாலும் தஞ்சை,
செங்கை, முகவை மாவட்டங்
களில்) இறால் வளர்ப்பு செய்ய
லாம் எனக் கண்டறியப்பட்
டுள்ளது.

இறால் உற்பத்தியை வளர்ப்பு
முறைகள் மூலம் அதிகரித்து
எதிர்காலத்தில் இறால் ஏற்று
மதியை அதிகரிக்க முடியும்
என்று கருதப்படுகிறது. ஆகவே
கடந்த இரண்டாண்டுக் கால
மாகவே தமிழக மீன்துறை
இறால்களின் உயிரியல், அவை
கள் கிடைக்குமிடங்கள், உணவு
மற்றும் இனவிருத்திப் பழக்கங்
க்ள் ஆகியவைகளைக் கண்டறி
வதற்கு இறால் வளர்ப்பு பற்
றிய ஆராய்ச்சி மற்றும் முன்
னோடித் திட்டங்களைச் செயல்
படுத்தத் துவங்கியுள்ளது.

மேலும், மீன்துறை கடந்த
ஏழாண்டுக் காலமாக இந்திய
அரசின் விவசாய ஆராய்ச்சித்
துறையினருடன் ஒருங்கிணைந்து
சென்னையிலுள்ள சாந்தோம்
மீன் பண்ணையில் இறால்
வளர்ப்பினைச் செயல்படுத்தி
அரிய சாதனைகளை நிகழ்த்தி
இறால் வளர்ப்பு சம்பந்தமான
அடிப்படை விவரங்களைச் சேக
ரித்துள்ளது. ஒரு ஹெக்டேர்
உவர் நீர்ப்பரப்பில் அறிவியல்
அடிப்படையில் வளர்ப்பு முறை
களைக் கையாண்டால் ஒரு வரு
டத்தில் 1,000 கிலோ இறால்
உற்பத்தி செய்யலாம் என நிரு
பிக்கப்பட்டுள்ளது.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்
டத்தில், பத்து மாதிரி இறால்
பண்ணைகளை அமைக்க தமிழக
அரசு ரூ. 80 இலட்சம் ஒதுக்கி
யுள்ளது. இப்பண்ணைகள் கட
லோர மாவட்டங்களில் 250
ஹெக்டேர் பரப்பில் இறால்
வளர்ப்பை மேற்கொள்ள கூட்
டுறவுகளுக்குதவ திட்டமிடப்பட்
டுள்ளது. கறுப்பு மற்றும்
வெள்ளை இறால் குஞ்சுகள்
வளர்ப்பிற்குத் தொடர்ந்து
கிடைப்பது அரிதாக இருப்ப
தாலும், இறால் வளர்ப்புப்
பண்ணைகளை அமைக்க துவக்க
நிலையில் அதிக முதலீடு தேவைப்
படுவதாலும் அரசு மேற்கொள்
ளும் இம்முயற்சிகள் இறால்
வளர்ப்பில் ஓர் துவக்கமேயாகும்.

அரசினால் அமைக்கப்படும்
இப்பண்ணைகளில், இறால்
வளர்ப்பில் ஆர்வம் கொண்டவர்
களுக்குத் தேவையான பயிற்சி
அளிக்கவும், தொழில் நுட்ப
அடிப்படையில் இறால் வளர்ப்
பைக் கற்பிக்கவும் உதவும்.
செயல்விளக்கப் பண்ணைகளாக
வும் விரிவாக்க கேந்திரங்களாக
வும் செயல்படும். கடலோரப்
பகுதிகளிலோ அல்லது கழிமுகங்
களிலோ சொந்த நிலமுள்ளவர்
கள் இறால் வளர்ப்பை இலாப
கரமாக மேற்கொண்டு அரசு
மேற்கொள்ளும் அபிவிருத்தித்
திட்டத்திற்கு உதவ வேண்டும்.

ஒரு ஹெக்டேர் பரப்பி
குஞ்சு வளர்ப்பிடம் உள்ளட
கிய இறால் பண்ணை ஒன்
அமைக்க ரூ. 75,000 முதலீட்டு
தொகையாகத் தேவைப்படு





# இறால் வளர்ப்பு



இப் பண்ணைகளில் கறுப்பு மற்றும் வெள்ளை இறால் குஞ்சுகளை கழிமுகங்கள், உவர் நீர்ப்பரப்புகள், உவர்நீர் ஏரி போன்ற இயற்கை மூலகங்களிலிருந்து சேகரித்து ஒரு ஹெக்டேருக்கு 20,000 முதல் 30.000 வரை இறால் வகைக்கேற்ப இருப்பு செய்யலாம். இவை 110 முதல் 120 நாட்களில் விற்பனைச் செய்யக்கூடிய அளவிற்கு வளர்ந்துவிடும். முதல் அறுவடையை 110-120 நாட்களில் செய்யலாம். இறால் குஞ்சுகளுக்கு வளர்ப்புக் காலத்தில், பிண்ணாக்கு, மீன்தூள், தவிடு. ஆலியின் சதை. சிறிய மீன் குஞ்சுகள், மீன் வெட்டப்படும் போது ஏற்படும் கழிவு ஆகியவைகளை உணவாக அளிக்கலாம். பண்ணையில் உவர் நீரின் அளவு 90 செ. மீ. முதல் 100 செ. மீ. வரை இருக்கவேண்டும். தினந்தோறும் கடலிலிருந்து 15% உவர் நீரை வெளியேற்றி அதற்குப் பதிலாக புதிய நீரைப் பண்ணையில் உள்ள நீருடன் கலக்க வேண்டும்.

முறைப்படியாக வளர்ப்பு முறைகளைக் கையாளுவதன் மூலம் ஒரு வருடத்தில் இரண்டு போகம் இறால் அறுவடை செய்யலாம். வளர்ப்பிற்கான அனைத்துச் செலவுகளும் போக ஒரு ஹெக்டேருக்கு ரூ. 5000/- நிகர இலாபம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

மீன்துறை இறால் வளர்ப்புத் திட்டத்திற்கும் பெருமளவு பிரச்சாரம் செய்து இதுவரை 650 இளைஞர்களுக்கு இறால் வளர்ப்பில் பயிற்சியளித்துள்ளது. 1979-ஆம் ஆண்டில் தஞ்சையில் 20க்கும் மேற்பட்ட தனிப்பட்டவர்கள் அவர்களுடைய சொந்த இடத்திலேயே இறால் வளர்ப்பினை மேற்கொண்டு பல்வகை இலாபத் தொகைகளை அடைந்தார்கள். இத்திட்டத்தைமுனைப்புடன் செயல்நோக்குக் கொண்டதாய் ஆக்குவது அவசியமாகும். செங்கல்பட்டு, தஞ்சை, புதுக்கோட்டை மாவட்டங்களில் 1லிருந்து 1.5 ஹெக்டேர் பரப்பில் நான்கு இறால் பண்ணைகள் மீன்துறையால் அமைக்கப்பட்டுள்ளன. இதைப் போன்ற ஆறு பண்ணைகள் ஏனைய கடலோர மாவட்டங்களில் நிறுவப்படும்.

தஞ்சை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் முறையே





அதிராம்பட்டினம் மற்றும் காரங்காடு ஆகிய ஊர்களில் கூட்டுறவுச் சங்கங்கள் இறால் வளர்ப்பிற்காகவே அமைக்கப் பட்டு இறால் வளர்ப்பில் ஏற் கெனவே ஈடுபடத் துவங்கியுள் ளன.

கிள்ளை (தென்னார்க்காடு மாவட்டம்) உப்பங்கழிகளில் ரூ. 15.8 இலட்சம் செலவில் இறால் வளர்ப்புப் பண்ணை அமைக்க மத்திய அரசு நிதி யுதவியளித்து இப்பண்ணையின் வேலை துவங்கும் நிலையி லுள்ளது.

மேலும், 6வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 'சுற்றுப்புற அபி விருத்தித் திட்டத்தின்(Area development approach Project) அடிப் படையில் மத்திய அரசு, கட லோர மாநில அரசுகளுக்கு உவர் நீர் வளத்தில் இறால் வளர்ப்பு மூலம் அபிவிருத்தி செய்ய உதவ முன்வந்துள்ளது. ஆகவே, மாநில அரசு இறால் பண்ணைகள் அமைக்கத் தேவை யான, கால்வாய்கள், மதகுகள், சாலைகள், கட்டடங்கள், மின் சாரம் ஆகிய பொது வசதி களைச் செய்து கொடுக்கலாம். மத்திய மாநில அரசுகள் 50:50 என்ற விகிதத்தில் முதலீட்டுச் செலவினை ஏற்கும். இறால் வளர்ப்பிற்குத் தேவையான பொருள்களுக்கான செலவில் இறால் வளர்ப்போருக்கு 25% மானியம் வழங்கப்படும். இச் செலவினையும் மத்திய மாநில அரசுகள் 50:50 என்ற விகிதத் தில் ஏற்கும். மத்திய அரசின் இத்திட்டத்திற்கு மாநில அரசு இணக்கம் தெரிவித்து பழவேற் காடு, (செங்கை மாவட்டம்), வாலி நோக்கம் (இராமநாத புரம் மாவட்டம்) முத்துப் பேட்டை (தஞ்சை மாவட்டம்) ஆகிய இடங்களில் மொத்தம் 300 ஹெக்டேர் உவர் நீர்ப் பரப்பில் இறால் பண்ணைகள் படிப்படியாக மூன்று வருடத் திற்குள் செயல்படும். இதற்காக மொத்தம் முதலீடு ரூ. 2.627 கோடியாகும். ரூ. 10 இலட்சம் இறால் குஞ்சு பொரிப்பகம் (Prawn Hatchery) நிறுவ பயன் படுத்தப்படும். செலவுத்தொகை யில் ரூ. 113.57 இலட்சத் தினை மத்திய அரசும், ரூ. 149.10 இலட்சத்தினை மாநில அரசும் ஏற்கும். மூன் றாண்டு முடிவில் இத்திட்டம் முழுமையாகச் செயல்படும் போது 300 டன்கள் எடை





யுள்ள இறால் ஒரு வருடத்திற்கு கிடைக்க வாய்ப்புள்ளது. ஏற்றுமதியாகக் கூடிய இந்த இறால்களின் மூலம் ரூ 90 இலட்சம் கிடைப்பதுடன் இத்திட்டத்தின் மூலம் 300 குடும்பங்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும், 200 நபர்களுக்கு பகுதி நேர வேலை வாய்ப்பும் கிடைக்கும்.

இதைத் தவிர உணவு மற்றும் வேளாண்மை நிறுவனம்/வங்காள விரிகுடாத் திட்டம் (F.A.D/B.O.B.P) கிள்ளை (தென் ஆர்க்காடு மாவட்டம்) பகுதியில் '82-'83 ஆண்டில் ரூ. 8 இலட்சம் செலவில் 'பென் கல்சர்' என்ற முறையில் பரீட்சார்த்தமாக 3 ஹெக்டேர் பரப்பில் இறால் வளர்ப்பினை மேற்கொள்ளும். இத்திட்டம் வெற்றி அடைந்தால் இம்முறை மற்ற பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.



காலப்போக்கில் கடலோரப் பகுதிகளிலுள்ள பொருத்தமான இடங்கள் இறால் வளர்ப்பிற்குக் கொண்டுவரப்பட்டு இப்பகுதிகளில் வசிக்கும் மக்களுக்குத் தலா 5 ஹெக்டேர் பகுதியை நீண்ட நாள் குத்தகைக்கு அளித்து, வசதிகளை மாநில அரசு செய்து கொடுக்கலாம். இறால் வளர்ப்பு சம்பந்தமான தொழில் நுட்ப உதவிகளையும் இறால் குஞ்சுகளையும் அளிக்கும் பொறுப்பு மீன் துறையைச் சார்ந்ததாகும்.

இவ்வளர்ச்சித் திட்டத்தின் துவக்க நிலையில் இறால்களுக்காகும் தீவனச் செலவு, தண்ணீர் இறைப்பதற்காகும் சக்தி, மீன்பிடி உபகரணங்கள் போன்றவைகளுக்காகும் செலவில் ஊக்குவிப்புத் தொகை அளிக்கலாம். அடுத்த 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் கடலோரத்தில் 1000 ஹெக்டேர் பரப்புள்ள பகுதி உவர் நீர் மீன் வளர்ப்பின் கீழ் கொண்டு வரலாம்.



# ஊராட்சி ஒன்றியங்களில் மகாகவி பாரதி விழா

"எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓர் இனம் எல்லாரும் இந் நாட்டு மக்கள்'' என்ற ஒருமைப் பாட்டு உணர்ச்சியை மக்களிடையே வலியுறுத்திய மகாகவி பாரதிக்கு நூற்றாண்டு விழா. தேசிய கவியாக மட்டுமின்றிச் சீர்திருத்தக் கருத்துக்களை இனிய தமிழ்க் கவிதைகளால் பாமர மக்களின் நெஞ்சில் புகுத்திய பாரதியின்கொள்கைகளைப்பரப்ப தமிழ் நாடெங்கும் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், நகராட்சிகளிலும் விழா நடத்தப்படும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அறிவித்ததற்கிணங்க நாள்தோறும் பாரதி விழா கொண்டாடப்பட்டு வருகிறது.

கடந்த ஐந்து மாதங்களில் நூற்றுக்கும்மேற்பட்ட ஊராட்சி ஒன்றியங்களிலும் நகராட்சிகளிலும் விழா சிறப்புற நடத்தப்பட்டு வருகின்றன. இவ்விழாக்களைச் சாதாரண விழாவாக கொண்டாடாமல் அரசின் பல்வேறு முன்னேற்றத் திட்டங்களும், வளர்ச்சிப் பணிகளும் தொடங்கப்படுவதுடன் ஏழை எளிய மக்களுக்கு, விவசாயிகள் ஊனமுற்றோர், மகளிர், ஆகியோர்க்கு உறுதுணையளிக்கும் வகையில் கடனுதவிகளும் பயிற்சித் திட்டங்களும் அறிவிக்கப்பட்டு வருகின்றன.

அரசின் புதிய கட்டிடங்களுக்கு மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா நினைவுக்கட்டிடம் எனப் பெயரிடப்பட்டு வருகிறது.

## மதுரை மாவட்டம்

மதுரை மாவட்டத்தில் மதுரை கிழக்கு, பெரிய குளம், ரெட்டியார் சத்திரம், மதுரை மேற்கு, ஆத்தூர், சாணார்பட்டி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களிலும் விழா செவ்வனே நடைபெற்றன.

### மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம்

கள்ளந்திரி ஊராட்சியில் 9-1-82 அன்று விழா நடைபெற்றது. பள்ளிக் கட்டிடத்திற்குப் பாரதியார் பெயர் சூட்டப்பட்டுத்திறக்கப்பட்டது. இவ்விழாவில் கறவை மாடுகள் வாங்க இந்தியன் ஓவர்சீஸ் வங்கி வழங்கிய கடன்தொகை கிராம மக்களுக்கு வழங்கப்பட்டது. வசதியற்ற பெண்களுக்குத் தையல் பயிற்சிக் கொடுக்கப்பட்டு,மானிய உதவியுடன் தையல் மிஷின் வழங்கப்பட்டது. ஏழை எளிய மக்களுக்காக மான்ய உதவியுடன் பொம்மைப் பயிற்சி நிலையம் ஒத்தக்கடையில் துவக்கப்பட்டது. இக்கிராமத்தில் பாரதியார் நூற்றாண்டு விழா குடியிருப்பில் வசித்து வரும் ஆதி திராவிடர்களுக்கு வானொலிப் பெட்டி அளிக்கப்பட்டது. இரு குழந்தைகளுக்கு பாரதி பெயர் சூட்டப்பட்டது. போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ-மாணவியருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி மாணவ மாணவிகளால் இசை நிகழ்ச்சி நடத்தப்பெற்றது.

### பெரிய குளம்

23-1-82 அன்று விழா நடைபெற்றது. பொம்மி நாயக்கன் பட்டியில் ரூ. 60,000 மதிப்பீட்டில் கட்டப்பட்ட நடுநிலைப் பள்ளிக்கூடத்திற்குப் பாரதியார் பெயரிடப்பட்டு மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்குப்பரிசுகள் வழங்கப்பட்டன. கல்லூரி மாணவிகளின் பாஞ்சாலி சபதம் நாடகமும், பள்ளி மாணவிகளின் பாரதியார் நாடகமும், ஒயிலாட்டமும் நடைபெற்றன.

### ரெட்டியார் சத்திரம்

26-1-82 அன்று விழா சீரிய முறையில் கொண்டாடப்பட்டது.

தெள்ளூரில் (வட ஆர்க்காடு மாவட்டம்) 5.4.'82ல் நடைபெற்ற விழா



தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்ட பள்ளி திறக்கப்பட்டது. திருமால்நாய ரம் ஆரம்பப்பள்ளி கட்டிடத் திற்குப் பாரதியார்பெயர் சூட்டப் பட்டது. மாணவ மாணவிகளுக்குப் போட்டிகள் நடத்தப் பெற்று 62 பரிசுகள் வழங்கப்பட்டன. பள்ளி மாணவர்களின் கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

**மதுரை மேற்கு**

கொடிமங்கலம் ஊராட்சியில் 2-2-'82 அன்று விழா செவ்வனே நடந்தேறியது. தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப் பட்ட புதிய பள்ளிக்கூடத்திற்கு மகாகவி பாரதியார் நூற்றாண்டு நினைவுக் கட்டிடம் எனப் பெய ரிடப்பட்டது. மாணவ- மாணவிகள், மற்றும் கிராம மக் களுக்கு கிராமிய விளையாட்டுப் போட்டிகள் நடத்தப் பெற்று பரிசுகள் வழங்கப்பட்டன.

**ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம்**

13-2-'82 அன்று விழா சிறப்புற நடைபெற்றது. ஏ. இராமநாத புரத்தில் பாரதியார் நூற்றாண்டு விழா புதிய பள்ளிக் கட்டிடத் திறப்பு விழா செய்யப்பட்டது. சின்னாளப்பட்டியில் ஊராட்சி ஒன்றிய பாரதியார் நூற்றாண்டு பள்ளிக்கட்டிடக் கால்கோள்விழா மாவட்ட ஆட்சித் தலைவர்அவர் களால் செய்யப்பட்டது. மாணவ மாணவியருக்குப் பல்வேறு போட்டிகள் நடத்தப் பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. ஊனமுற்றோருக்கு ஊரக வளர்ச் சித் திட்டத்தின் கீழ் 81 நபர் களுக்குக் கறவைமாடுகள் வாங்கக் கடன் வழங்கப்பட்டது. விழா வில் பட்டிமன்றமும், பாரதியின் பாட்டுக்கேற்ப நடன நிகழ்ச்சி யும், கலை நிகழ்ச்சிகளும் சிறப் பாக நடைபெற்றன. ஊரக விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றோர்க்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

**சாணார்பட்டி**

பிப்ரவரி திங்கள் 23-ஆம் நாள் சிறந்த முறையில் பாரதி விழா கொண்டாடப்பட்டது. பாரதி யார் திருவுருவப்படந்தாங்கிய யானையுடன் ஊர்வலம் நடத்தப் பட்டது. மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகளும், வில்லுப் பாட்டும் இனிய நிகழ்ச்சிகளாக நடத்தப்பட்டன. வேம்பார்ப் பட்டி, கோபாலப்பட்டி ஆகிய இடங்களில்,கட்டப்பட்ட இரண்டு பள்ளிக்கூடங்களுக்கு மகாகவி பாரதியார் பெயர் சூட்டப்பட் டது.



கும்பகோணம் (தஞ்சை மாவட்டம்) நகராட்சியில் 14.2.'82ல் நடைபெற்ற விழா

**வட ஆர்க்காடு மாவட்டம்**

வட ஆர்க்காடு மாவட்டத் தில் மே திங்கள் வரை திருப்பத் தூர், நாட்ராம்பள்ளி, பேர ணாம்பட்டு, பெரணமல்லூர், காதிலி, குடியாத்தம், கே. வி. குப்பம், தண்டராம்பட்டு, ஆலங் காயம் அணைக்கட்டு, காட்பாடி, வேலூர், மாதனூர், ஆர்க்காடு ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் பாரதி நூற்றாண்டுவிழா சிறப் பாகக் கொண்டாடப்பட்டது.

**திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம்**

4-1-'82 அன்று விழா நடை பெற்றது. விழாவில் சமுதாய மன்றம், ஆசிரியர் நகர் தொடங் கப் பெற்று பாரதியார் பெய ரிடப்பட்டது. மாணவ மாணவிய ரிடையே பேச்சுப்போட்டி, கவிதைப் போட்டி, நடத்தப் பெற்றுப் பரிசுகள் வழங்கப்பட் டன. மாணவ மாணவியரால் நாடகங்கள், நாட்டியங்கள் நடத்தப்பட்டன. எக்கணம்பட்டி யிலுள்ள நடுநிலைப் பள்ளிக் கட்டிடத்திற்குப் பாரதியார் பெயர் சூட்டப்பட உள்ளது.

**நாட்ராம்பள்ளி ஊராட்சி ஒன்றியம்**

14-1-'82-ல் விழா நடத்தப் பட்டது. மாணவ- மாணவிய ருக்குப்பேச்சுப்போட்டி, பாட்டுப் போட்டி நடத்தப்பட்டுப் பரிசுகள் வழங்கப்பட்டன. கலைநிகழ்ச்சி யுடன் விழா இனிதே நடைபெற் றது.

**பேரணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம்**

24-1-'82 அன்று பேரணாம் பட்டு ஊராட்சி ஒன்றிய அலுவலகத் திடலில் மகாகவி பாரதியார் நூற்றாண்டுவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட் டது. பேச்சுப் போட்டி, பாட்டுப் போட்டி, கட்டுரைப் போட்டி நடத்தப்பெற்று பரிசுகள்மாணவ மாணவியருக்கு வழங்கப்பட்டன. கவின்மிகு கவியரங்கமும் நடை பெற்றது. ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கண்டு களித்தனர்.

**பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியம்**

விழா 27-1-'82 அன்று நடை பெற்றது. விழாவில் கவியரங்க மும், பட்டிமன்றமும், கிராமியக் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற் றன. விழாவில் ஆடு வளர்ப் போர் கூட்டுறவுச் சங்கங்களும், பால்வழங்கும் கூட்டுறவுச் சங் கங்களும் ஆரம்பிக்கப் பெற்றன. ஆயில்வாடி, நடுத்தோடு, இருச்சி மேடு, செபடாங்குளம், சோரை மங்கலம் ஆகிய கிராமங்களில் உள்ள ஆரம்பப் பள்ளிகளுக்கு பாரதியார் பெயரிட முடிவு செய் யப்பட்டுள்ளது. மாணவ-மாணவி

யருக்குப் பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி நடத்தப் பெற்று பரிசுகள் வழங்கப்பெற்றன. மாணவ-மாணவியரின்கலை நிகழ்ச்சிகளுடன் விழா செவ்வனே நடந்தேறியது.

### கந்திலி ஊராட்சி ஒன்றியம்

4-2-82 அன்று விழா நடத்தப் பட்டது. விழாவில் களரபதி கிராமத்தில் கிராம வேலைத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட பள்ளிக்கூடத்திற்குப் பாரதியார் பெயர் சூட்டப்பட்டது. பட்டி மன்றமும், மாணவ - மாணவியர்க்குப்பேச்சுப்போட்டி,பாட்டுப் போட்டிகளும் நடத்தப்பெற்றன. மாணவியர்களின் கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

### குடியாத்தம் ஊராட்சி ஒன்றியம்

14-2-'82-ல் விழா ஒர்த்தாங்கல் நடுநிலைப்பள்ளியில் கொண்டாடப்பட்டது. வி. ராமாபுரம் பள்ளிக்கட்டிடம், சாண்டிபுரம் மேநீர்த்தேக்கத்தொட்டி மற்றும் பெரும்பாடி மேநீர் தேக்கத் தொட்டி ஆகியவைகளுக்குப் பாரதியார் நூற்றாண்டு நினைவுக் கட்டிடம் எனப் பெயர் சூட்டப் பட்டது. பள்ளி மாணவ— மாணவியருக்குப்பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி நடத்தப் பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. பாரதியார் கலைநிகழ்ச்சியும், பாரதியார் வரலாற்று நாடகமும் நடைபெற்றன.

### கே. வி. குப்பம் ஊராட்சி ஒன்றியம்

விழா 24-2-'82 அன்று கீழ் வழித்துணையாள் குப்பத்தில் நடைபெற்றது. மகமதுபுரத்தில் கட்டப்பட்ட பள்ளிக்கட்டிடத் திற்கும், கொத்தமங்கலம் கிராமத்தில் போடப்பட்ட கப்பிச் சாலைக்கும், அன்னங்குடியில் உள்ள பாலத்திற்கும் பாரதியார் பெயர் சூட்டப்பட்டது. விழாவில் காட்பாடி சட்டமன்ற உறுப்பினரும், அரசு அலுவலர்களும், புலவர் பெருமக்களும்பங்கேற்றுச் சிறப்பித்தனர். கட்டுரைப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ-மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

### தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியம்

27-2-'82-ல் விழா. டி. கிருஷ்ணபுரம் மற்றும் அகரம் என்னும் இரு கிராமங்களில் கொண்டாடப்பட்டது. டி. கிருஷ்ணபுரம் மற்றும் அகரம் ஆகிய பள்ளிக் கூடங்களுக்கு மகாகவி பாரதியார் நூற்றாண்டு நினைவுப் பள்ளிக் கூடம் என்று பெயர் சூட்டப் பட்டது. மேல்நிலை, உயர் நிலைப்பள்ளி மாணவ-மாணவியருக்குப் பேச்சுப்போட்டி, பாட்டுப் போட்டி நடத்தப் பட்டன. பள்ளி மாணவர்களின் கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

### ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம்

4-3-'82-ல் விழா நடைபெற்றது. மாணவ-மாணவியருக்குப்பேச்சுப்போட்டி, கவிதைப் போட்டி, பாட்டுப் போட்டி ஆகியன நடத்தப்பட்டன. பாரதியார் பற்றிய சிறப்புச் சொற்பொழிவுகளும்-நடனம், கும்மி, கோலாட்டம் முதலிய கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

### அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியம்

15-3-'82 அன்று விழா சிறப்புற நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் கலந்து கொண்டு கட்டி முடிக்கப்பட்ட துவக்கப்பள்ளிக்கூடத்துக்குப் பாரதியார் பெயர் சூட்டித் திறந்து வைத்தார். மாணவ-மாணவியருக்குப்பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, இசைப் போட்டி நடத்தப்பட்டு, பரிசுகள் வழங்கப்பட்டன. வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும், 'பாரதி கண்ட சமுதாயம்' என்ற நாடகமும் நடைபெற்றது.

### காட்பாடி

காட்பாடி அரசினர் மேல் நிலைப்பள்ளியின் திறந்தவெளி அரங்கில் விழா 24-3-'82 அன்று நடைபெற்றது. விழாக்காலத்தில் மேல்வடுகள், குட்டை, கார் விம்பட்டு, அருப்புமேடு, ஒட்டந் தாங்கல் ஆகிய இடங்களில் பள்ளிக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டன. பள்ளி-கல்லூரி மாணவ-மாணவியருக்குப் பாட்டு பேச்சுப் போட்டிகள் நடத்தப் பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. மாணவ -மாணவியரின் கலை நிகழ்ச்சிகளுடன் விழா முடிவுற்றது.

### வேலூர் ஊராட்சி ஒன்றியம்

5-4-'82 அன்று விழா கொண்டாடப்பட்டது. சேக்கனூர் துவக்கப்பள்ளிக்கட்டிடத்திற்குப்பாரதியார் பெயரிடப்பட்டது. பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, பாட்டுப்போட்டி நடத்தப்பெற்று மாணவ-மாணவியருக்குப் பாரதியார் பற்றிய புத்தகங்கள் பரிசாக வழங்கப்பட்டன. மாணவ-மாணவிகள் கலை நிகழ்ச்சிகளோடு விழா இனிதே முடிவுற்றது.

13-4-82 அன்று விழா நடைபெற்றது. மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் திரு விஜயசாரதி அவர்கள் விழாவினைத் துவக்கி வைத்தார்கள். கதிதம்பாக்கம் நடுநிலைப்பள்ளிக் கட்டிடம், திருமலைக்குப்பம் நடுநிலைப்பள்ளிக்கட்டிடம். ஊராட்சி அலுவலகக் கட்டிடம், மாதனூர் நடுநிலைப்பள்ளிக் கட்டிடம் ஆகியவற்றிற்குப் பாரதியார் நூற்றாண்டுவிழா நினைவுக் கட்டிடம் எனப் பெயரிடப்பட்டு மாண்புமிகு அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மாணவ-மாணவியருக்குப் பேச்சு, பாட்டுமற்றும் கட்டுரைப் போட்டிகள் நடத்தப்பட்டுப் பரிசுகள் அளிக்கப்பட்டன. நடனம், கோலாட்டம் முதலிய கலை நிகழ்ச்சிகள் மாணவர்களால் நடத்தப்பட்டன.

### ஆர்க்காடு ஊராட்சி ஒன்றியம்

ஆர்க்காட்டில் 24-4-'82ல் விழா நடைபெற்றது. இலப்பைப்

**ஆர். எஸ். மங்கலத்தில் (இராமநாதபுர மாவட்டம்) நடைபெற்ற விழா**



பேட்டை துவக்கப்பள்ளி புதுக் கட்டிடத்திற்குப் பாரதியார் பெயரிடப்பட்டது. மாணவ - மாணயருக்குப் பேச்சு, கட்டுரை கவிதை, இசைப்போட்டிகள் நடத்தப்பட்டுப் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. மாணவ-மாணவிகளினால், பள்ளிகளிலும், விழாவிலும், தாய்மொழியின் சிறப்பு, சாதி ஒழிப்பு, விதவைகள் மறுமணம், பெண்கள் விடுதலை, ஒருமைப்பாடு ஆகியவைகள் குறித்து ஓரங்க நாடகங்கள் நடத்தப்பட்டன. காட்பாடி இசைக்குழுவினரின் இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

## கோவை மாவட்டம்

கோவை மாவட்டத்தில் மே திங்கள் வரை உடுமலைப்பேட்டை, வால்பாறை, சுல்தான்பேட்டை, அவிநாசி, திருப்பூர், அன்னூர், சூலூர், காரமடை, பொங்கலூர், பெரியநாயக்கன் பாளையம் ஆகிய 10 ஊராட்சி ஒன்றியங்களிலும் பொள்ளாச்சி நகராட்சியிலும் பாரதி நூற்றாண்டுவிழா சிறப்புறக்கொண்டாடப்பட்டது. இவ்விழாக்களில் பாரதி நூற்றாண்டு நினைவாகக் கீழ்க்கண்ட கட்டிடங்களுக்குப் பாரதியின் பெயர் சூட்டப்பட்டன. போடிப்பட்டி கூடுதல் பள்ளிக் கட்டிடத்தை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், பொள்ளாச்சி நகரமன்றஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கட்டிடத்தை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும்திறந்துவைத்தார்கள். அவிநாசியில் கட்டப்பட்ட துவக்கப்பள்ளிக்கூடம், பொம்மநாயக்கன்பாளையத்தில் ஒரு பள்ளிக் கட்டிடம் சூலூரில் இரண்டு பள்ளிக் கூடுதல் கட்டிடம் சிறுமுகை புதூர் கூடுதல் பள்ளிக் கட்டிடம் ஆகியவைகளுக்கும் பாரதியார் பெயர் சூட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. விழாக்களில் நடைபெற்ற பட்டிமன்றம் கருத்தரங்கம், கவியரங்கம், சிறப்புக்கூட்டம் ஆகியவற்றில் தமிழறிஞர்கள், கவிஞர்கள், அரசியல் விற்பன்னர்கள் கலந்து கொண்டு பாரதி கருத்துக்களை முழங்கினர். மாணவ - மாணவியருக்குப்பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, இசைப்போட்டி, நாடகப் போட்டி, ஆகியவை நடத்தப்பட்டுப் பரிசுகள் வழங்கப்பட்டன. விழா நடைபெறும் இடங்களில் பாரதி வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் கண் காட்சிகளும் நடத்தப்பட்டன. அனைத்து விழாக்களிலும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு களித்தனர்.

## தஞ்சாவூர் மாவட்டம்

### திருவையாறு ஊராட்சி ஒன்றியம்

திருவையாற்றில் 12-1-'82 அன்று விழா நடத்தப்பட்டது. கண்டியூர் பள்ளிக்கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது. தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தலைமையில் பட்டிமன்றம் சிறப்புற நடைபெற்றது. விழாவில் பட்டிமன்றம், நாட்டிய நாடகம், நாதசுர இன்னிசை ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பேச்சு, பாட்டு, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

### கும்பகோணம் நகராட்சி

கும்பகோணம் நகராட்சியில் 14-2-82 அன்று பாரதி விழா சிறப்புற நடைபெற்றது. மூன்று சாலைகள் சந்திக்கும் இடத்திலுள்ள மையப் பூங்காவிற்குப் பாரதியார் நூற்றாண்டு விழா நினைவுச் சதுக்கம் எனப் பெயரிடப்பட்டது. பாரதியார் பற்றிய கட்டுரைப் போட்டி, கவிதைப்போட்டி, பட்டிமன்றம், இசைப்போட்டி, கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

## கன்னியாகுமரி மாவட்டம்

### தோவாளை ஊராட்சி ஒன்றியம்

4-2-'82 அன்று விழா நடத்தப்பட்டது. ஆரல்வாய்மொழி பேரூராட்சி பூங்கா திடலிலுள்ள கலையரங்கத்திற்குப் பாரதியார் நூற்றாண்டு நினைவுக் கலையரங்கம் எனப் பெயரிடப்பட்டது. பள்ளி மாணவ-மாணவிகளுக்குப்பேச்சுப் போட்டி, கவிதை, கட்டுரைப் போட்டி நடத்தப்பட்டன. பாரதியாரின் கொள்கைகளைப் பற்றிய கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

## திருநெல்வேலி மாவட்டம்

### ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம்

நெட்டூர் கிராமத்தில் விழா 15-2-'82 அன்றுநடத்தப் பட்டது. மாணவ,மாணவிகளுக்குப் பேச்சுப் போட்டி நடத்தப்பெற்று,பரிசுகள் வழங்கப்பட்டன. பாரதி பற்றிய வில்லிசை நடைபெற்றது. தன்னிறைவுத் திட்டம், கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம், ஊரக வளர்ச்சித் திட்டம் ஆகியவை குறித்து மக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

### சேரன் மகாதேவி ஊராட்சி ஒன்றியம்

25-2-'82 அன்று விழா நடைபெற்றது. மாணவ-மாணவிகளால் கலைநிகழ்ச்சி பாஞ்சாலி சபதம் ஓரங்க நாடகம், இன்னிசை நிகழ்ச்சி ஆகியவை நடத்தப்பட்டன. கிராமமெங்கும் பாரதி பொன்மொழிகள் கொண்ட வளைவுகள் அமைக்கப்பட்டன. பிராஞ்சேரி, கூனியூர் வானொலி கட்டிடங்கள், மேலச்செவல் கிராமத்தில் மருந்தகக் கட்டிடம் ஆகியவற்றிற்குப் பாரதியார் பெயர் சூட்டப்பட்டது. மாணவ மாணவியருக்குப்பேச்சுப்போட்டி நடத்திப் பரிசுகள் வழங்கப்பட்டன. கலைநிகழ்ச்சிகளோடு விழா இனிதே நடந்தேறியது.

## நீலகிரி மாவட்டம்

உதகை ஊராட்சி ஒன்றியத்தில் 25-4-'82-ம் நாளன்று பாரதி நூற்றாண்டு விழா சிறப்புற நடந்தேறியது. விழாவில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் ப. குழந்தைவேலு அவர்கள் கலந்துகொண்டு பாரதியார் நூற்றாண்டு நினைவு பள்ளிக் கட்டிடத்தைத் திறந்து வைத்தார். தூனேரி ஆரம்பப் பள்ளிக்கூடத்திற்கு பாரதியார் பெயரிடப்பட்டது. பாரதியார் திருவுருவப் படத்தைச் சட்டமேலவை உறுப்பினர் டாக்டர் இரா. ஜனார்த்தனன் அவர்கள் திறந்து வைத்தார். விழாத் தலைவர் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. உச்சிகவுடர் தலைமையுரையாற்றினார். மாணவ—மாணவியருக்காக நடத்தப்பட்ட பேச்சுப் போட்டி, பாட்டுப் போட்டி ஆகியவைகளில் வெற்றி பெற்றோர்க்குப்பரிசுகள் வழங்கப்பட்டன. மாணவ-மாணவியரின் கலைநிகழ்ச்சியோடு விழா இனிதே முடிவுற்றது. விழாவில் ஆயிரக் கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.



நம் நாட்டில் மக்கள் எல்லாவற்றையும் படித்துத் தெரிந்து கொள்வார்கள் என்றிருந்தால் அது இயலாத காரியம். கண்ணால் கண்டு, கேட்டு விளக்கங்களைப் பெறும் கண்காட்சியின் மூலம்தான் நம் நாட்டு மக்களுக்கு அறிவுத் தெளிவை ஏற்படுத்த முடியும்.

—பேரறிஞர் அண்ணா



டாக்டர் பி. பி. ராஜன் எம்.டி.எஸ்.
முதல்வர்: சென்னை பல் மருத்துவக் கல்லூரி.

# சமுதாயப் பல் மருத்துவத் தொண்டு

மனிதன் தோன்றிய காலந் தொட்டே அவனைப் பாகுபாடின்றித் தாக்கும் நோய்களும் வருகின்றன. உடலின் ஒவ்வொரு உறுப்பும் நோய்க்குப் பலியாகித் தொல்லைகள் கொடுப்பது நாம் கண்டறிந்த உண்மை.

வாயிலும் பற்களிலும் ஏற்படுகின்ற நோய்கள் கடுமையான பல்வலி, வாய் எரிச்சல், ஈறுகளில் ரத்தம் வருதல், கன்னங்களில் வீக்கம் போன்ற தொல்லைகளைத் தொடர்ந்து கொடுத்துக் கொண்டே வரும். மேலும் வாய் திறவாமை, தொண்டை விழுங்காமை, நாக்கு நீளாமை போன்ற தொல்லைகளால் உட்கொள்ள முடியாமலும், உச்சரிப்பு தடைப்பட்டு சரிவரப்பேச முடியாமலும், கஷ்டப்படுவதும் உண்டு. சொத்தையால் பழுதடைந்த பற்களிலும் ஈறுகளிலும் கிருமிகளின் தாக்குதலால் சீழ்கட்டிகள் தோன்றி, அந்தச்சீழ் இரத்தத்தின் வழியாக உடலெங்கும் பரவி, இதய நோய், சிறுநீரக நோய், மூட்டு நோய் ஆகிய நோய்களை உடலின் மற்ற பாகங்களில் உண்டாக்கும். பாதிக்கப்பட்ட பற்களிலும் ஈறுகளிலும் நச்சுப் பொருட்கள் தங்கி, வெறுக்கத்தக்க வாய் துர்நாற்றத்தைக் கொடுப்பதோடு, அந்த நச்சுப் பொருட்கள் உண்ணுகின்ற உணவுடன் கலந்து உணவு மண்டலத்தில் நுழைந்து, இரைப்பையிலும் குடலிலும் நோய்களை உண்டாக்கும். அத்துடன் தாங்கமுடியாத வயிற்றுவலி, வயிற்றுப் போக்கு ஆகிய தொல்லைகளையும் கொடுக்கும். வாயிலும் பற்களிலும் ஏற்படுகின்ற நோய்கள் உடல் நலத்தைப் பாதிப்பதால் உடல் நலம் பேணும் மருத்துவத் துறையில், பல் மருத்துவத்துறை வளம் பெற்று பற்களில் நோய் வராமல் தடுக்கவும், வந்த நோய்களைக் குணப்படுத்தவும் மக்களுக்குப் பல் மருத்துவர்கள் நற்பணி புரிந்து வருகின்றனர்.

சென்னை பல் மருத்துவக் கல்லூரியில், சிறப்புக்குரிய தகுதியும் சிறந்த அனுபவமும் பெற்ற மருத்துவர்கள் பல்வேறு துறைகளின் மூலம் செவ்வனே பல் மருத்துவத் தொண்டு புரிந்து வருகின்றனர். வாயிலும் பற்களிலும் தோன்றுகின்ற பல்வேறு நோய்களை, அறிவியல் முறைப்படிக் கண்டறிந்து, மருத்துவச் சிகிச்சை அளிப்பது, பழுதடைந்த பற்களைப் பக்குவமாய் எடுத்தெறிவது, பாழ்பட்ட பற்களைச் செப்பனிடுவது, வரிசையிலே குலைந்த பற்களைச் சீராக்குவது, இழந்த பற்களுக்குச் செயற்கைப் பல்பொருத்துவது, ஈறுகளை வளமுடன் காப்பது, நோய்களைத் தடுக்கும் முறைகளை மக்களுக்கு எடுத்து விளக்குவது ஆகிய நற்பணிகளில் நாள்தோறும் ஈடுபட்டு, மருத்துவர்களும் மருத்துவமனை ஊழியர்களும் மக்களுக்குத் தொண்டாற்றி வருகின்றனர்.

நாகரீக உலகில் ஏறுநடை போடும் நகரத்து மக்கள் இந்த நல்லதொண்டுகளைப் பெறுவதில் நாம் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தாலும், நமது கடமை முடிந்துவிட்டதாகக் கருதக் கூடாது. அக நாகரீகத்தில் மேம்படு சிறப்பினைப் பெற்று, ஏர் முனையிலே பார் எனும் தத்துவப்படி நாளெல்லாம் நாட்டுக்காக உழைத்துவரும், உத்தமர்களாகிய கிராம மக்களுக்கு இந்த நவீன வைத்திய முறைகள் பயன்படவில்லையே என்பதை நினைக்கும்பொழுது உண்மையிலேயே நாம் வருத்தப்படவேண்டும்.

கிராம மக்களுடைய பல்வேறு பிரச்சினைகளைத் தீர ஆராய்ந்து அவர் தம் வாழ்வு மலர சீரிய திட்டங்களைச் செவ்வனே தீட்டி கிராமங்களில் ஒரு மறுமலர்ச்சியையுண்டு பண்ண நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அரும்பாடுபட்டுவருவது நாடறிந்த உண்மை. அரசின் இவ்வரிய திட்டத்திற்குத் துணை புரியும் வண்ணம் சென்னை பல் மருத்துவக் கல்லூரி கிராமங்களுக்கென்று தனிப்பட்ட முறையில் பல் மருத்துவத் தொண்டு புரிய ''சமுதாயப் பல் நலப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. இதன்படி மருத்துவர்களும் மாணவர்களும் பல்வேறு கிராமங்களுக்குச் சென்று



புகைபிடிக்கும் கிராமவாசிக்குப் புற்றுநோய் இருக்கிறதா என்று பரிசோதிக்கப்படுகிறது.

ஆங்காங்கு பல மருத்துவ முகாமிட்டு பல் பரிசோதனை செய்வதோடு, பல் வைத்தியத்தையும் அந்த முகாமிலேயே செய்துவருகின்றனர்.

1981-82 ஆம் ஆண்டில் 59 பல் மருத்துவ முகாம்கள் நடத்தி 61,223 பேர்களுக்குப் பல் பரிசோதனை செய்யப்பட்டிருக்கிறது. 2735 பேர்களுக்கு முகாமிலேயே பற்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. 2694 பேர்களுக்குப் பற்களில் உள்ள சொத்தை போக்கி அடைப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. 2528 பேர்களுக்குப் பற்களில் உள்ள காரைகளைச் சுத்தம் செய்து மருந்திடப்பட்டிருக்கிறது. மற்றும் செயற்கைப்பல் கட்டுதல், பல் சீரமைப்பு ஆகிய வைத்திய முறைகள் செய்யப் பட்டிருக்கிறது. பணி, தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

பல் மருத்துவமுகாம்களில் கண்டறிந்த செய்திகள் பலப்பல. கிராம மக்களில் 93% இன்னும் மண், மணல், சாம்பல் கரிப்பொடி, செங்கல் பொடி ஆகியவைகளை உபயோகித்துப் பற்களைத் துலக்கி வருகின்றனர். அவர்களுடைய பற்களெல்லாம் பழுதடைந்து, உருமாறி, நிறம் மாறி, பொலிவிழந்து காணப்படுகின்றன. பல் துலக்குவதைப் பற்றிக் கவலைப் படாதுகாலங்கழிப்போரும் உண்டு. ஆலும் வேலும் பல்லுக்குறுதி என்ற பழமொழிக்கிணங்க, கிராம மக்களில் சிலர், ஆலங்குச்சியையும் வேப்பங்குச்சியையும் உபயோகித்து வந்தாலும் இன்னும் சிலர் மாங்குச்சி, சவுக்குக் குச்சி ஆகியவைகளால் பல் துலக்கி வருகிறார்கள். பல் வலி வந்தவர்களுக்கு லவங்க எண்ணெய் வைப்பதும் மண்ணெண்ணெய் தடவுவதும் சுண்ணாம்பை வைத்து அழுத்துவதும், சுக்கை அரைத்துப் போடுவதும் கை வைத்தியங்களாகக் காணப்படுகின்றன. இவைகளை உபயோகிப்பதால் வாயில் ரணம் ஏற்பட்டு வேதனைப்படுவோர்கள் பலருண்டு. உண்மை தெரியாமல் இது ஆண்டவனின் சோதனை என்று அலுத்துக் கொள்வோரும் உண்டு. பல் மருத்துவ முகாமில் கிராம மக்களை ஒன்று திரட்டி இதுபோன்ற பழக்கங்களினால் ஏற்படும் தீமைகளை தெளிவுபடுத்தி அவைகளைத் தவிர்க்க வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டு வருகிறது. முகாமில் வாய், பல் பரிசோதனையில் கண்டுபிடிக்கப்பட்ட பல்வேறு வியாதிகளின், கொடுமைகளை விளக்கி, நோயைக் குணப்படுத்த தக்க மருந்துகளைக் கொடுத்து, அந்த நோய்கள் வராமல் தடுக்கவேண்டிய வழி முறைகளையும் எடுத்துச் சொல்லி, மருத்துவர்கள் தொண்டு புரிந்து வருகின்றனர்.

சொத்தைப் பற்களாலும், உடைந்த பற்களாலும் பல நாட்கள் பல்வலியால் வேதனைப் பட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு அந்த முகாமிலேயே பழுதடைந்த பற்களைப் பக்குவமாய் மரப்பு மருந்து கொடுத்து வலியில்லாமல் எடுத்து அவர்களின் வேதனை நீக்கப்படுகிறது.

பல்நோய்களில் பெருமளவுக்குக் காணப்படும் நோய் பற்சொத்தை. முகாமிற்கு எடுத்துச் செல்லும் இயந்திரங்களின் உதவியால், பற்களில் ஏற்பட்டிருக்கும் ஆரம்பக் கால சொத்தையை அகற்றி, அடைப்பு மருந்துகளால் அடைத்து, பழுதடைந்த பற்கள் செப்பனிடப்படுகின்றன.

பற்களைச் சுற்றிப் படிந்துள்ள அழுக்குகளும், காரைகளும், ஈறுகளைத் தாக்கி, ஈறுகளில் ரத்தம் கசிந்து வாய்த் துர்நாற்றம் ஏற்படுவதுண்டு. இப்படிப்பட்ட நோய்களில் வாடுபவர்களுக்குப் பல் மருத்துவ முகாமிலேயே பற்களைச் சுத்தம் செய்து, ஈறுகளுக்கு மருந்திட்டு அவர்களின் வாய் நலம் பாதுகாக்கப்படுகிறது.

கொடுமையான நோய்களில் ஒன்றுதான், புற்று நோய். கூரான பற்களால் ஏற்படும் ஆறாத புண்களும், அளவுக்கு மீறிப் புகை பிடிப்பதால் ஏற்படும் வெண் படைகளும், அடக்கி வைத்துக் கொண்டிருக்கும் புகையிலையால் ஏற்படும் ரணமும் புற்றுநோயை வரவழைக்கும் என்பது அறிவியல்

பழுதடைந்த பல்லை நீக்க மரப்பு மருந்து கொடுக்கப்படுகிறது.



வலியில்லாமல் பல் நீக்கப்படுகிறது.







பற்சொத்தை இயந்திரத்தால் பக்குவமாய் எடுக்கப்படுகிறது.

சொத்தையை எடுத்தபின் பற்களில் அடைப்பு மருந்துகள் வைக்கப்படுகின்றன

கண்ட உண்மை. முகாம்களில் நடத்திய பரிசோதனையில் இது போன்ற புற்று நோயின் முன் குறிகளைக் கண்டுபிடித்து அதன் விளைவுகளைக்கிராம மக்களுக்கு எடுத்துச் சொல்லி, புகைபிடிப்பதையும், புகையிலை போடுவதையும் தடுத்து நிறுத்துவதோடு, அந் நோய்களில் தாக்கப்பட்டவர்களை மருத்துவமனைக்கு அழைத்துவந்து, நோயைக் குணப்படுத்தி, புற்றுநோய்த் தடுப்பு முறையில் இத்தகைய முகாம்கள் பெரும்பங்கு கொள்கின்றன.

கிராம மக்களில் ஒரு சிலர் பற்களை இழந்து, உண்ணும்உணவை அரைக்க முடியாமலும், ஓசை நயம் படப் பேச முடியாமலும் தவித்து வருகின்றனர். அவர்களில் சிலரைப் பல்மருத்துவமனைக்கு கொண்டுவந்து, செயற்கைப் பல் பொருத்தி, பல் இழந்தோர் சொல் இழந்தோர் என்று பழிக்கு ஆளாகாமல் பாதுகாக்கப்படுகின்றனர். பழக்க வழக்கங்களாலும், பல்வேறு பாரம்பரியக் காரணங்களாலும், மாறுபட்ட தாடை வளர்ச்சி உடையவர்களும், நிலைமாறி அலங்கோலமானபல் வரிசைஉள்ள ஒரு சிலருக்கும் மருத்துவ மனையில் நவீன முறைப்படி கம்பிகள் வைத்துக் கட்டி, அலங்கோலப் பற்களை அலங்காரப் பற்களாக மாற்றி அவர்தம் குறைகள் போக்கப்பட்டு வருகின்றன.

சமுதாயத்தில் கல்வியாளர்கள் பெருகியிருந்தும், சீர்திருத்தவாதிகள் சிறந்த முறையில் பணிபுரிந்தும், மூடப்பழக்க வழக்கங்களுக்கு இன்னும் கிராமங்களில் முடிவுகட்டவில்லை. அம் மூடப்பழக்க வழக்கங்கள் பல் மருத்துவத்திலும் படமெடுத்தாடுவதைக் காணும்போது வேதனையாக இருக்கிறது. ஒரு கிராமத்தில் 20 வயது இளமங்கை ஒருத்திக்கு கன்னத்தில்ஒருதழும்பு இருப்பதைக் கண்டபோது, காரணம் கேட்கப்பட்டது. மங்கையவள் மன வேதனையுடன் சொன்னாள்: ''எனக்கு ஞானப்பல்

இலவச பல் மருத்துவ முகாமில் கிராம மக்கள்






முளைக்கும்போது கன்னம் வீங்கி பல்வலி ஏற்பட்டது, அப்போது பக்கத்து வீட்டுப்பாட்டி, பழுக்கக் காய்ச்சிய இரும்பை என் கன்னத்தில் வைத்துச் சுட்டாள். வீக்கமுடன் பெரிய ரணம் ஏற்பட்டு வேதனைப்பட்டேன். வெந்த இடம் ஆறிவரும்போது இந்தத் தழும்பு வந்தது'' என்றாள். பல்வலிக்கு பழுக்கக் காய்ச்சிய இரும்பு ஒரு மருந்து! நெஞ்சு கலங்குகிறது. விழிகளில் நீர் பெருகுகிறதுகுடிசையில் வாழும் ஒரு பாம்பு வைத்தியன். அவன் பச்சிலையை பல்லில் வைத்து பல் எடுக்கிறானாம். வலி வரும்போது சாணறுக் கயிற்றைத் தாடையில் கட்டுகிறானாம். பல்வலிக்குப் பார்வை பார்ப்பதும், மந்திரங்கள் ஓதுவதும், தாயத்துகள் கட்டுவதும் பழக்கங்களாக கிராம மக்களிடம் இருந்து வருகின்றன. கிராம மக்களின் மன நிலைக்குத் தக்கவாறு மூடப் பழக்க வழக்கங்களால் ஏற்படும் தீமைகள் பல் மருத்துவ முகாமில் எடுத்துச் சொல்லப்பட்டு வருகிறது.

சென்னை பல் மருத்துவக் கல்லூரியின் சமுதாய பல் நலப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஆற்றிவரும் நற்பணிகள் கிராம மக்களுக்கு, மட்டுமல்லாமல், நகரத்தில் வாழும் ஏழை, எளியவர்களுக்கும், மாநகராட்சி பள்ளிச் சிறுவர்களுக்கும், குடிசை வாழ் மக்களுக்கும் பயன்பட்டு வருகிறது. சென்னை பல் மருத்துவக் கல்லூரியின் முதல்வரை அணுகினால், எந்த இடத்திலும் எந்தச் சூழ்நிலையிலும், பல் மருத்துவ முகாமிட்டு பல் மருத்துவத் தொண்டாற்ற உடனடியாக ஆவன செய்யப்படும். இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு மக்கள் பற்களைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

பற்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ளாததே பல்நோய்களுக்குக் காரணம் என்பது அறிவியல் ஆராய்ச்சியாலும் பேரறிஞர்களின் அனுபவத்தாலும், பல் மருத்துவ முகாம்களின் குறிப்புகளாலும் கண்டறிந்த மாபெரும் உண்மை.

இருமுறை பல்துலக்கினால் ஒருமுறையும் பல் மருத்துவரிடம் செல்லவேண்டாம் என்று மருத்துவர்கள் விளக்கம் சொன்னாலும், கிராமங்களில் ஒரு முறைகூட பல் துலக்காமல் இருப்பவர்களும், பல் துலக்குவதற்குப் பல் பொடியைத் தவிர மற்றப்பொருட்களை உபயோகிப்பவர்களும் ஏராளமாக இருக்கின்றனர். அவர்களுடைய பற்களில் பல்வேறு நோய்கள் தோன்றி, உடலில் பரவி, உடல் நலம் பாதிக்கப்பட்டு, வாடுகிறார்கள். இந்தக் கொடுமைகளை அகற்றி, ஒவ்வொருவரும் சுத்தமான பற்களோடு இருக்க வேண்டும் என்றும், அதன் மூலம் உடல் நலத்தைப் பாதுகாக்க வேண்டும் என்றும், பரந்த எண்ணமுடன் தமிழக முதல்வர் கிராம மக்களுக்கு இலவசப் பல்பொடி வழங்கும் திட்டத்தைத் தீட்டி செயல்படுத்த முற்பட்டிருக்கிறார்கள். இத்திட்டம் உண்மையிலேயே ஒரு புரட்சிகரமான திட்டம்.

பல்நலம் காப்பதன் அடிப்படைத் தத்துவமான பல் துலக்கும் முறை, அதுவும் அறிவியல் முறைப்படி தயாரித்த பல்பொடியால் பல் துலக்குவது சாலச் சிறந்தது. இதை நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் கடைப் பிடிக்க வேண்டும். இத்திட்டத்தால் ஆயிரமாயிரம் ஏழை கிராம மக்கள் தங்கள் பற்களைப் பாதுகாக்கும் வாய்ப்பினைப் பெறுவதோடு பல்வேறு நோய்களின் பிடியிலிருந்து விடுபட்டு ஒரு நல் வாழ்வினைப் பெற்று, நலமோடு வாழ ஏதுவாகும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதற்கிணங்க, நோயற்ற ஒரு சமுதாயத்தைக் கிராமங்களிடம் உருவாக்க இந்த இலவசப் பல்பொடி வழங்கும் திட்டமும் உதவும் என்பது உண்மை. கிராம மக்கள் அனைவரும் இந்தத் திட்டத்தால் பயன் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.




# வெள்ளிவிழாக் கண்ட காதி பவனம்!

ஜி. ஆனந்தன்

'காதி கிராமோத்யோக்பவன்' வெள்ளிவிழா, சென்னை அவ்வை சண்முகம் சாலையிலுள்ள 'காதி கிராமோத் யோக் பவன்' வளாகத்தில், 14-6-82 அன்று சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது.

வெள்ளி விழாவிக்கு அனைத்திந்தியக் கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுத் தலைவர் திரு ஏ. எம். தாமஸ் அவர்கள் தலைமை வகித்தார்:

**மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர்**

''விழாவை மாண்புமிகு மத்திய பாதுகாப்புத்துறைஅமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் தொடங்கி வைத்தார். அவர் தமது உரையில் குறிப்பிட்டார்.

'காந்தியடிகள் வகுத்த கொள்கையின் அடிப்படையில் கிராமத் தொழில் வளர்ச்சியில் தமிழகம் அக்கறை காட்டி வருகிறது. நாட்டின் பொருளாதார வளர்ச்சி பெரிதும் கிராமப்புறப் பொருளாதாரத்தை, அடிப்படையாகக் கொண்டது. இந்தக் 'காதி கிராமோத்யோக் பவன்' சிறப்போடு செயல்பட்டு வருகிறது. மற்ற நிறுவனங்களுக்கெல்லாம் வழிகாட்டியாகவும் திகழ்கிறது.''

வெள்ளி விழாவையொட்டி கதர்-கிராமக் கைத்தொழில் பொருட்காட்சி ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அந்தப் பொருட்காட்சியை, மாண்புமிகு கதர்-மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எஸ். என். ராஜேந்திரன் அவர்கள் திறந்து வைத்தார். அவர் தமது உரையில்—

''காதி கிராமோத்யோக் பவன்' சிறப்பாகச் செயல்பட்டு வருவதைப் பாராட்டுகிறேன். கதர் என்றால் ஒரு குறிப்பிட்ட கட்சியினருக்கும், ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினருக்குமே உரியது என்ற நிலை இன்று மாறியுள்ளது. கதரின் மகிமையை எல்லா மக்களுக்கும் பயன்படும் வகையில் இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. கதர்த்துறை சிறப்பாக வளர மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அதிக அக்கறை காட்டிக் காரிய மாற்றி வருகிறார்கள்.

''இந்த ஆண்டு கதர்த் துணி 6 கோடி ரூபாய் அளவுக்கு விற்பனையாகியுள்ளது. கதர்த்துணி விற்பனை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது. அதேபோல பட்டுத் துணிக்கும் நமது நாட்டில் மட்டுமின்றி மேலை நாடுகளிலும் நல்ல வரவேற்பு இருந்து வருகிறது. ரூ. 30 இலட்சம் மதிப்புள்ள பட்டுத் துணிகளை வெளிநாடுகளுக்கு







விரைவில் அனுப்பி வைக்க இருக்கிறது தமிழக அரசு'' என்றார்.

**மலர் வெளியீடு!**

மாண்புமிகு மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்களும் மாண்புமிகு கதர்-மற்றும் பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. எஸ். என். ராஜேந்திரன் அவர்களும் வெள்ளி விழாவையொட்டி அமைக்கப்பட்ட பொருட்காட்சியைப் பார்வையிட்டனர்.

மாண்புமிகு ஆந்திர கதர்த் துறை அமைச்சர் திரு. எம். மாணிக்கராவ் நரேந்திரதுபே, 'காதி கிராமோத்யோக்பவன்' செயலாளர் திரு. டி. வி. மல்லையா, பொருளாளர் திரு. சி. பி. வி. ராகவலு, சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சி. கே. கரியாலி, 'காதி கிராமோத்யோக்பவன்' சங்க அறங்காவலரும், மக்கள் தொடர்பு அலுவலருமான திரு. பி. ஆர். கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் உரையாற்றினார்கள்.

விழா மலரை திரு அருணாசலம் எம். எல். சி. வெளியிட்டார். மலரைத் தயாரித்த திரு ஆ. சுகுமாறனுக்கு மாண்புமிகு மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் பொன்னாடை போர்த்தினார். திரு. எம். எஸ். அனந்தராம் நன்றி கூறினார்.

**காந்தி வாழ்க்கை வரலாற்றுக் கண்காட்சி**

வெள்ளி விழா அரங்கில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ''மகாத்மா காந்தியடிகள்'' வாழ்க்கை வரலாற்றைச்சித்திரிக்கும் படத்தொகுப்பு இடம் பெற்று இருக்கின்றது. புகைப் படங்கள் மட்டுமின்றி, காந்தி வரலாற்றைக் குறிக்கும் சிலைகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த இடத்தைப் பார்த்தால் சென்னை அரசினர் தோட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கும் 'காந்தி இல்லம்' நமக்கு நினைவுக்கு வருகிறது. அந்த அளவுக்குக் காந்தியடிகளின் வரலாற்றுப் படங்கள், பார்ப்போர் மனத்தைத் தொடுவதாக அமைந்துள்ளது.

பொருட்காட்சி அரங்கில் ஒவ்வொரு குடும்பத்திற்குத் தேவையான சமையல் பண்டங்களும், காந்தி கிராமோத்யோக் பவனில் தயாரிக்கப்பட்ட 'பாலிவஸ்திரா' துணி வகைகளையும், கதர்வாரியம் தயாரித்துள்ள வாசனைச் சலவை சோப்பு வகைகளும், கிராமத் தொழில்களில் தயாரிக்கும் பொருள்களும், பனை மரத்தினால் செய்யப்பட்ட-பயன்படும் 32 வகையான பொருள்களும் இடம் பெற்றிருந்தன.



கிராம மக்களுக்கு உலக அறிவு ஊட்டக் கண்காட்சிகள் நடத்தப்பட வேண்டும். கிராம மக்களுக்கு நாம் உலக அறிவை ஊட்டவில்லையென்றால் அது நாட்டை வாழ வைக்காது; வளர வைக்காது.

—பேரறிஞர் அண்ணா

**மருத்துவத்தின் சிறப்பு**

மனித உயிர்வாழத் தேவையான சித்த-ஆயுர் வேத மருத்துவத்தின் சிறப்பை விளக்கும் அரங்கும் பொருட்காட்சி மைதானத்தில் இடம் பெற்றன. திண்டுக்கல் சிறுமலைப் பகுதிகளில் திரட்டப்பட்ட மூலிகையால் தயாரிக்கப்பட்ட மருந்து வகைகளை டாக்டர் கொண்டல் ராவ் அவர்கள் விவரித்துக் கொண்டிருந்தார்.

காந்திகிராமம் லட்சுமி சேவா சங்கத்தினர் அமைத்துள்ள இந்த சித்த-ஆயுர்வேத மருத்துவத்தின் சிறப்பை கடந்த 35 ஆண்டுகளாக மக்களுக்குப் பயன்படும் வகையில் நடத்தி வருகிறார் டாக்டர் கொண்டல்ராவ்.

வெள்ளிவிழாவைக் கண்ட காதி கிராமோத் யோக்பவன், இதனைத் தொடர்ந்து பொன் விழாவையும், வைர விழாவையும் காண நாமும் வாழ்த்துவோம்

# பொலிவு பெறும் பெரியார் மாவட்டம்

என். தில்லை கோவிந்தன்,
உதவி மக்கள் தொடர்பு
அலுவலர், (தகவல்)
பெரியார் மாவட்டம்,

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் பிறந்த ஈரோட்டு மண்ணில் அண்ணாவின் அரசு காட்டிவரும் அக்கறையால் பல்வேறு ஆக்கப்பணிகள் விரைந்து செயல்பட்டு வருகின்றன.

தந்தை பெரியார் அவர்களின் பெயரால் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள இந்த மாவட்டம், தனி மாவட்டமாகச் செயல்படத் தொடங்கி மூன்று ஆண்டுகள் கூட முடியவில்லை. எனினும் அரசின் தனிக் கவனம் பெற்றமையால் பெரியார் மாவட்டம், குறிப்பாக அதன் தலைநகரமாம் ஈரோடு இன்றைக்குப் பல்வேறு நலன்களைப் பெற்று வருகின்றது.

ரூபாய் 2 கோடி செலவில் எட்டு அடுக்குக் கொண்ட புதிய மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகமும், கருவூலமும் உருவாகி வருகின்றன.

குடிநீர்த் திட்டத்திற்காக ரூ. 2.93 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, திட்டப்பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

ரூ. 3 கோடி செலவில் பாதாள சாக்கடைத் திட்டமும் தீட்டப்பட்டுள்ளது.

நகரின் மையப் பகுதியான மணிக்கூண்டைச் சுற்றிலும் மழைக் காலங்களில் தண்ணீர் தேங்காதவாறு செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

குடிசை மாற்று வாரியத்தின் மூலம் 480 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் ஆயிரம் வீடுகள் கட்டும் திட்டமும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

புதிய மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகமும், காவலர் குடியிருப்பும் கட்டி முடிக்கப்பட்டு, கடந்த 10-11-'81 ஆம் நாள் மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

ஈரோடு நகரை அழகு படுத்திட, வ. உ. சி. பூங்காவை மக்கள் மனம் நிறைவு கொள்ளத் தக்க வகையில் பயனுள்ளதாக மாற்றி அமைத்திட, பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டு மிகுந்த விரைவில் செயல்பட்டு வருகின்றன. தந்தை பெரியார் அவர்களால் கட்டப்பெற்று, மூதறிஞர் இராஜாஜி அவர்களால் திறக்கப்பட்ட குடிநீர்த் தொட்டி புதிய வண்ணம் தீட்டப் பெற்று, ஒரு கோட்டையைப்போல் காட்சியளிக்கின்றது!

வெடித்துச் சிதறிய முத்துக்கள் போல்!
வெண்பனித் துளிகள் போல்!

இரவு நேரங்களில் குடிநீர்த் தொட்டியையும், மரங்களையும் அழகு செய்திடும் மின்விளக்குகள்!

இரவு வேளையில் மின்னொளியில் கைப்பந்தாட புதிய மைதானம் உருவாக்கப்பட்டுள்ளது. அழகிய நீச்சல் குளம், மாவட்ட மைய நூலகம், திறந்த வெளிச் சிற்றுண்டிச் சாலை அமைக்கப் படவிருக்கின்றன.

எட்டு மாடிகளுடனும், லிப்ட் வசதிகளுடனும் ரூ. 2 கோடி செலவில் ஈரோட்டில் உருவாகிவரும் பெரியார் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம்.





ஈரோடு மணிக்கூண்டு பகுதியில் மழைக்காலத்தில தேங்கும் தண்ணீரை வெளியேற்றும் திட்டத்திற்கு அரசு ரூ. 22 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. வேலைகள் நடைபெறுவதை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் பார்வையிடுதல்.

பள்ளிப்பாளையம், சேசாயி காகித ஆலையினர் மனமுவந்து அளிக்கவிருக்கும் குழந்தைகள் ரெயில் விரைவில் பூங்காவில் ஓடத் துவங்கும்.

ஸ்டேடியம், பெரியார் மன்றம் அமைப்பதற்காக ரூ. 70 இலட்சம் செலவுகளுக்கான மதிப்பீடுகள் பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவரால் தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இருளடைந்து கிடந்த வ.உ.சி. பூங்கா ஒளிபெற்று வருகின்றது. ஈரோட்டு மக்கள் பாராட்டுகின்றனர் அண்ணாவின் அரசை.

பாம்புப் புற்றுகள் நிறைந்திருந்த வ. உ. சி. பூங்கா மக்களின் மனம் கவரும் பல்வேறு திட்டங்களைப் பெற்று வருகின்றது.

இந்தியாவிலேயே ஈரோடு நகராட்சி வருவாயில் முதலிடம் வகித்து வருகின்றது. ஈரோட்டுப் பெருமக்கள் மாலை வேளையை உல்லாசமாகக் களித்திடும் இடமாக வ. உ. சி. திடல் மாற்றப்பட்டு வருகின்றது. இளைஞர்கள் பல்வேறு விளையாட்டுக்களில் பயிற்சி பெற வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. குழந்தைகளுக்கு இனிய பொழுது போக்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

வீட்டு வசதி வாரியத்தின் மூலம் அரசு அலுவலாளர்களுக்கு ரூ. 20.07 கோடி செலவில் 856 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, அலுவலாளர்கள் குடியிருந்து வருகின்றனர்.

ரூ. 379.12 இலட்சம் செலவில் 1,293 வீடுகளும், குடியிருப்புகளும் கட்டி முடிக்கப்பட்டு ஒதுக்கீடு செய்து தரப்படவுள்ளன.

புதன்கிழமை தோறும் போக்குவரத்துக்கு இடையூறாக விளங்கி வரும் துணிச் சந்தையை, வசதியான வேறு இடத்திற்கு மாற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பில் சித்தோட்டுக்கருகில் புதிய நகர் அமையவிருக்கின்றது.

போக்குவரத்து விபத்தின்றி நடந்திட நகரில் பல்வேறு முக்கிய இடங்களில் சாலைகள் அகலப்படுத்தப்பட்டுள்ளன. வளைவுகள் அமைக்கப்பட்டு, அவை அழகுபடுத்தப்பட்டு வருகின்றன.

''சோடியம் வேப்பர்'' மின் விளக்குகள் ஈரோட்டுத் தெருக்களை ஒளி செய்யத் தொடங்கியுள்ளன.

''பிரப்'' ரோடு என அழைக்கப்பட்டு நகரின் முக்கியசாலையை சென்னையிலுள்ள அண்ணா சாலையைப்போல் மாற்றத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. சு. முத்துச்சாமி, அவர்கள் சீரிய முயற்சிகள் இப்பணிகளுக்கு ஆணி வேராகும்.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அ. ந. தியானேசுவரன் இ. ஆ. ப., அவர்கள் துடிப்புமிக்க நடவடிக்கைகள், திட்டங்கள் விரைவில் முடிந்திடத் துணை புரியும்.

மக்கள் நலத் திட்டங்களுக்கு அனைத்து வழிகளிலும் ஒத்துழைப்புத் தரும் ஈரோட்டுப் பெருமக்களின் ஒத்துழைப்பால், புதிய ஈரோட்டை — பொலிவுமிக்க ஈரோட்டை விரைவில் காண்போம்

புதியதாகக் கட்டப்பட்டு வரும் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடத்தை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி அவர்கள் பார்வையிடுதல்.



## மாணவர் பக்கம்



### விளையும் பயிர்

பள்ளிப் பருவத்திலேயே, பல்துறையிலும் சிறந்து விளங்குகின்ற மாணவமணிகளை நாம் பார்க்கின்றோம்.

ஆடல், பாடல், நடிப்பு, ஓவியம், விளையாட்டு இப்படி பல துறைகளில் அவர்கள் 'பளிச்'சிடுவதை பள்ளி விழாக்களில், கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்றுப் பரிசுகள் பெறும்போது பார்க்கின்றோம்.

நீலகிரி, செயின்ட் ஜார்ஜ் ஹோம்ஸ் பள்ளியில் பத்தாம் வகுப்பில் படிக்கும் மாணவர் திரு ஜி. ராஜேஷ். இவர் விளையாட்டுப் போட்டிகளில் பரிசுகள், சான்றிதழ்கள் பெற்றுள்ளார்.

100 மீட்டர் மற்றும் 400 மீட்டர் ஓட்டப் பந்தயங்கள், உயரத் தாண்டுதல் போன்றவற்றில் இவர் கோப்பைகள், பதக்கங்கள் பெற்றுள்ளார். இவருக்குப் பொழுதுபோக்கு என்ன?

பாட்டுப் பாடுவது, ஆட்டோ மொபைல் ரிப்பேர். இவரது நினைவு எல்லாம் தொழில் நுட்பத்திலேயே செல்கிறது. படிப்பிலும் சிறந்து விளங்கும் இம்மாணவரின் எதிர் காலம் ஒளிமயமாக அமையும் என்று நம்பலாம்.

### கடலில் மிகப் பெரிய "நீர் வீழ்ச்சி"

உலகத்தின் மிகப்பெரிய நீர்வீழ்ச்சிகளைவிட மிகமிகப்பெரிய நீர் வீழ்ச்சி ஒன்று ஆர்க்டிக் கடலும் அட்லாண்டிக் கடலும் சேரும் இடத்தில் (கடலுக்கு அடியில்) இருப்பதாக, லெனின்கிராடில் உள்ள ஆர்க்டிக்-அண்டார்க்டிக் கடலியல் ஆராய்ச்சிக் கழக விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கின்றனர். ஆர்க்டிக் கடலுக்கும், அட்லாண்டிக் கடலுக்கும் எல்லையாக விளங்கும் கிரீன்லாந்து ஸ்காட்லாந்து ஆர்க் எனப்படும் தீவுக் கூட்டத்தருகே இந்த நீர் வீழ்ச்சி உள்ளது; ஆர்க்டிக் பகுதிகளிலிருந்து வரும் குளிர்ந்த நீர் அட்லாண்டிக் மாகடலில் 3000 மீட்டர் பள்ளத்தில் வீழ்கிறது. இங்கு பாயும் தண்ணீரின் அளவு ஒன்றரை இலட்சம் கன கிலோமீட்டர் என்று மதிப்பிடப்படுகிறது. உலகத்தில் பாயும் அத்தனை நதிகளின் தண்ணீர் அளவையும் விட இது அதிகமாகும்.

அட்லாண்டிக் மாகடலில், அதன் தென் கோடி எல்லை வரை உள்ள நீரோட்டம் முழுவதையுமே இந்த நீர்வீழ்ச்சி பாதிப்பதாகக் கடல்-இயல் வல்லுநர்கள் கருதுகின்றனர். ஆக்சிஜன் வாயு அதிகம் கலந்துள்ள ஆர்க்டிக் கடல் நீர் பாய்ந்து எந்நேரமும் அட்லாண்டிக் கடல் நீரைப் புதுப்பித்துக் கொண்டேயிருக்கிறது.

## முழுமை பெற்று வாழ்ந்திடுவோம்!

இளமை என்னும் நிலத்திலே
விடாமை என்னும் விதைவிதைப்போம்!
திறமை என்னும் எருவிடுவோம்
நேர்மை என்னும் ஏர் உழுவோம்!
பொறுமை என்னும் களைபறிப்போம்!

மடமை என்னும் களைபறிப்போம்!
கடமை என்னும் நீரிடுவோம்
தீமை என்னும் தீதொழிப்போம்!
வன்மை என்னும் பயிர்காப்போம்
வளமை என்னும் பயிர்காப்போம்

நன்மை என்னும் அறுவடையால்
வறுமை என்னும் திரைநீக்கி
பசுமை என்னும் பயனடைந்து
தூய்மை என்னும் உயர்வடைவோம்!

எளிமை என்னும் போக்குடனே
உண்மை என்னும் சொல்லுடனே
மேன்மை என்னும் நிலையுடனே
முழுமை என்னும் பேறடைவோம்!

சு. சந்திரசேகர்,
பிளாட் நெ. 14,
13வது குறுக்குத் தெரு,
நியூ காலனி, குரோம்பேட்டை,
சென்னை-600 044.



# சோவியத் வன விலங்குகள்

சோவியத் யூனியனது இயற்கை அமைப்புகள் மிகவும் பலதரப்பட்டவை; எனவே, இந்த நாட்டில் கணக்கற்ற விலங்கு வகைகள் உள்ளன. சோவியத் நாட்டின் கானகங்களிலும் சமவெளிகளிலும் மலைகளிலும் நாம் விதம் விதமான விலங்குகளைக் காணலாம்;

பின்கண்ட விலங்குகள் அரசுப் பாதுகாப்பில் உள்ளன: புலி, பனிவேங்கை. இமாலயக் கரடி, காட்டெருது, ஆசிய சிறுத்தைப் புலி.

## தெரிந்து கொள்க!

கஸ்தூரி தரும் மிருகம்—மான்
பறக்காத பறவை—பெங்குவின்
நாய்க்கு வேர்க்கும் பாகம்—நாக்கு
கொம்பிலே கண் உள்ள பிராணி—நத்தை
காலில் காதுள்ள பூச்சி—வெட்டுக்கிளி
நீந்தத் தெரியாத மிருகம்—ஒட்டகம்
இந்தியாவில் முதன் முதலில் நடத்தப்பட்ட பத்திரிகை—பெங்கால் கெசட்
இந்தியாவில் முதன்முதலில் மதுவிலக்கு அமலுக்கு வந்த மாவட்டம்—சேலம்
தமிழில் வெளிவந்த முதல் நூல்—பைபிள்
இசைத் தட்டு செய்யப் பயன்படும் பொருள்
—அரக்கு

வ. இரவிச்சந்திரன்,
12-ஆம் வகுப்பு "அ" பிரிவு,
அரசினர் மேல்நிலைப் பள்ளி,
கலவை (அஞ்சல்), 632 506.
வ. ஆ. மாவட்டம்.













சிங்கப்பூரில் நடைபெற்ற உலகத் தோல் தொழிற் கண் காட்சித் துவக்க விழாவில் கலந்துகொண்டபோது...

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வதினால் உற்பத்தியின் அளவு அங்கே அதிக மாக இருக்கின்றது. ஆனால் நம்மைப்பொறுத் தவரை உற்பத்தி ( Productivity ) யுடன் வேலை வாய்ப்பும் குறிக்கோளாக இருப்பதால் நூல் நூற்க இயந்திரத்தை நாம் முழுமை யாகப் பயன்படுத்த இயலவில்லை. வேலை வாய்ப்பில் தமிழகம் தன்னிறைவு பெற்றுச் செல்வச் செழிப்பில் ஓங்கும்போது நமது நாடும் முழு அளவுக்கு இயந்திரமயமாகும் என்பதில் எனக்கு ஐயம் இல்லை.

ஜப்பான் நாட்டினர், ஆராய்ச்சியுடன் கூடிய வளர்ச்சிக்கு (Research and Development) முக்கியத்துவம் தருகிறார்கள். பட்டுவளர்ப்பு குறித்து ஆராய்ச்சி செய்வதற்காகப் பல நிறு வனங்களை அமைத்துச்செயல்பட்டு வருகிறார் கள். நூற்றுக்கும் மேற்பட்ட கலப்பின வகை பட்டு முட்டைகளைக் கண்டுபிடித்திருக்கிறார் கள். அந்த முறையைப் பின்பற்றி தமிழ்நாட் டிலும் மாவட்டந்தோறும் ஆராய்ச்சி அமைப் புகளை நிறுவ மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சி இங்கே நினைவு கூரத்தக்கதாகும்.

பால் பண்ணைத் தொழில் என்று எண் ணும்போது தமிழ்நாட்டிலிருப்பவர்களுக்கு மாதவரம் பால் பண்ணைதான் நினைவுக்கு வரும். அங்கிருக்கும் நவீன பால்பண்ணை 1962ஆம் ஆண்டு 'நியூசிலாந்து நாட்டின்' ஒத்துழைப்போடு தொடங்கப்பட்டதாகும். அதனால்தான் அந்நாட்டிற்குச் செல்லும் போது காலத்தால் உதவிய ஒரு நண்பரின் இல்லத்திற்குச் செல்வதுபோன்ற உணர்வோடு சென்றேன்.

நியூசிலாந்து நாட்டின் தேசிய பொரு ளாதாரமே பால் பண்ணைத் தொழிலைத் தான் நம்பியிருக்கின்றது என்றால் அது மிகை யாகாது. உற்பத்தியாளர்கள் என்ற வகையில் அந்நாட்டில் இத் தொழிலில் ஈடுபட்டு இருப் பவர்கள் 15,000 பேர்தான், ஆனால் அவர் கள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் பால் பொருள்களின் மதிப்பு ரூ. 800 கோடியாகும் உலகில் ஏற்றுமதி செய்யப்படும் பால்பொருள் களின் மொத்த அளவில் இது,கால் பங்காகும்.

பால்வளத்துறையில் இத்தகைய வெற்றி யினை அவர்கள் பெற்றதற்கான அடிப்படை யான காரணம், அங்குள்ள முறையும் அமைப் பும் தான் (Structure, System & Organisation) என்பதை நம்மால் அறிந்திட முடிகின்றது.

அத்தகைய அமைப்பினையும், முறை யினையும், வடிவத்தினையும் நாம் பெற்று

ஜப்பான் நாட்டு மின் அணுத் தொழிற்சாலைக்கு சென்றிருந்தபோது...



விட்டால்-இத்துறையில் தமிழகம் தோற்றுவித்துள்ள வெண்மைப் புரட்சி விரைவில் வெற்றியடையும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

10 லட்சம் விவசாயக் குடும்பங்களுக்கு பயனளிக்கும் வகையில் ரூ.40 கோடி செலவில் இரண்டாம் பால் வளத்திட்டத்தின் மூலம் புரட்சித்தலைவர் அவர்களின் விழுமிய முயற்சியால் நிறைவேற்றப்படவிருக்கும் சீரிய திட்டத்தினைச் செம்மையுடன் செயல்படுத்த நியூசிலாந்து நாட்டின் முயற்சி சிறந்த முன்னுதாரணமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

தமிழகத்தில் பூம்புகார் நிறுவனத்தால் உருவாக்கப்படும் கைவினை கலைப்பொருள்களுக்கு கோலாலம்பூர் போன்ற இடங்களில் களாக வடிக்கும் அந்தப் பெரும் பணிக்கு நமது பூம்புகார் நிறுவனத்தின் ஒத்துழைப்பினை அவர்கள் நாடியுள்ளனர்.

ஜெனிவா நகரில் அகில உலக அணு ஆயுத ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் பாரதக் கதையை அழகிய சித்திரமாகத் தீட்டித்தந்த பூம்புகார் நிறுவனம் இந்தப் பெரும்பணியினையும், சிறப்பாக நிறைவேற்ற இருக்கின்றது.

தமிழ்நாட்டின் கலைத்திறனையும், சித்திர வேலைப்பாட்டினையும், அந்நாட்டினர் பாராட்டியபோது,

"....I consider that the Dravidians have got something concrete, something distinct and



ஆஸ்திரேலிய நாட்டில் உள்ள தோல் தொழிற்சாலையில்

நல்ல வரவேற்பு இருப்பதை அறிந்து மகிழ்ந்தேன். அங்குள்ள சுப்ரமணியர் ஆலயத்தில் தமிழ்நாட்டைச் சார்ந்த கைவினைக் கலைஞர்கள் வெள்ளித் தேர் ஒன்றினை உருவாக்கிடும் காட்சியினைக் கண்டேன். தமிழ்நாட்டின் கலைத்திறனையும் கற்பனை வளத்தையும் அந்நாட்டில் பறைசாற்ற இந்த வெள்ளித்தேர் ஒன்றே போதும்!

நான் கண்ட சுப்ரமணியர் ஆலயம் குன்றொன்றின் மீதுதான் அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குன்றில் இரண்டு குகைகள் இருப்பதைக் கண்டேன். ஒரு குகைக்குள் அரிய கலைக்கண்காட்சி ஒன்றினை உருவாக்கியிருக்கிறார்கள். வள்ளுவரின் பெருமையினையும், திருக்குறளின் மாட்சியினையும் விவரிக்கும் அழகிய கண்காட்சியினை இன்னொரு குகையில் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள். 1300 குறட்பாக்களையும் அழகிய காட்சி

something different to offer in the Nation at large...."

என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் நாடாளுமன்ற மாநிலங்களவையில் பேசும் போது பெருமைபட உரைத்த கருத்துத்தான் என் நினைவில் தோன்றியது!

தனி மனிதனின் நல்வாழ்வுக்கும், சமுதாய அறநெறிக்கும் உள்ளங்களின் இன்ப அன்பு வாழ்வுக்கும் அடிப்படையான கருத்துக்களை கோடிட்டுக்காட்டும் குறளுக்கு அழியாச் சின்னமாக அமையவிருக்கும் இந்தக்கலைக் கண்காட்சி பூம்புகார் நிறுவனத்தின் திறமையையும் தமிழ்நாட்டின் பெருமையையும் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு எடுத்துக்காட்டும் என்ற பெருமித உணர்வோடு அவ்விடத்தைவிட்டு அகன்றேன்.



**கோலாலம்பூர் சுப்ரமணியர் ஆலயத்திற்கு, பூம்புகார் நிறுவனத்தினால் அளிக்கப்பட்டுள்ள வெள்ளித்தேரைப் பார்வையிடுதல்**

இப்படி புரட்சித்தலைவரின் ஆணையினையும், அன்புக்கட்டளையையும் ஏற்று 7 நாடுகளுக்குச் சென்று 25 நாட்களில் 50க்கு மேற்பட்ட தொழில் நிறுவனங்களையும் ஆராய்ச்சி மையங்களையும் கண்ட நான் ஒரு நம்பிக்கையோடு உள்ள உறுதியோடு தமிழகம் திரும்பியிருக்கின்றேன்.

வளர்ச்சியின் முகட்டினைத் தமிழகம் எட்டிப்பிடிக்க முடியும் - வளர்ந்து வரும் நாடுகளோடு போட்டியிடும் அளவுக்கு முன்னேற்றம் அடைய முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. வெளிநாட்டுப் பயணத்தின்போது நான் கற்ற படிப்பினையும் பெற்ற அனுபவமும், இந்த உண்மையினைத்தான் எனக்கு உணர்த்துகின்றன.

"He smote the rock of national resources and abundant streams of revenue gushed forth. He touched the dead corps of public credit and it sprang upon its feet"

''நாட்டிலே இருக்கின்ற செல்வங்கள் பாறையைப்போல் அழுத்திக்கொண்டு இருந்தன- அவைகளை அவன் தட்டிப்பார்க்கவில்லை - உடைத்தான். தேவையான வளம் பீரிட்டுப் பாய்ந்தது. செத்ததோ என்று கருதுகிற அளவுக்குச் சோர்ந்து போயிருந்த பொது மக்களுடைய செல்வ நிலைமையைத் தொட்டான், தொட்டவுடன் அது துள்ளியெழுந்தது.''

அமெரிக்க நாட்டில் ஹாமில்டன் என்பவருக்காக சொல்லப்பட்ட இந்தப்புகழுரை அண்ணாவின் இதயக்கனி புரட்சித்தலைவர் அவர்களுக்கு முழுக்க முழுக்கப் பொருத்தமுடையதாக இருக்கின்றது.

தமிழ்நாட்டு மக்களுடைய செல்வ நிலை துள்ளியெழுகின்ற வகையில் மாறுதல்கள் நிகழ்ந்திடவும், எல்லோரும் எல்லாம் பெற்று வாழும் இன்பநிலை மலர்ந்திடவும், திட்டங்கள் வகுத்துச் செயலாற்றிவரும் புரட்சித் தலைவர் அவர்களின் சீரிய எண்ணங்கள் செயல்வடிவம் பெற எனது பயணம் துணை நின்று தமிழகத்தின் தொழில்வளர்ச்சிக்கு ஒரு திறவுகோலாக அமையும் என்பதை எண்ணிடும்போது மகிழ்கிறேன்.

## கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு ரூ. 90 கோடி



**தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், நடப்பு ஆண்டின் முதல் ஆறு மாதக் காலத்திற்கு ரூ. 90.3 கோடியை மத்திய அரசு ஒதுக்கியுள்ளது. 1982–83-ஆம் ஆண்டுக்கான திட்டத்தில், மத்திய அரசின் பங்கு ரூ. 190 கோடி என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்குச் சமமான தொகையை மாநில அரசுகள் வழங்கும்.**

**இதில் பத்து சதவீதம் ஷெட்யூல்டு வகுப்பினர் / பழங்குடியினருக்கும், மற்றொரு பத்து சதவீதம் சமுதாயக் காடுகளுக்கும் ஒதுக்கப்படும். இதரப் பணிகளுக்காக ரூ. 72.27 கோடி செலவிடப்படும்.**

**ரூ. 24.75 கோடி மதிப்புள்ள உணவு தானியங்களும் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் அரிசி 1 இலட்சம் டன். கோதுமை 50,000 டன்.**

**நடப்பு ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் 300 முதல் 350 மில்லியன் மனித நாட்களுக்கு வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.**

**இத்திட்டம் முன்பு வேலைக்கு உணவுத் திட்டம் என்று அழைக்கப்பட்டு, 1977–78- ல் துவக்கப்பட்டது.**



# பெருந்தலைவர் சில நினைவுகள்

**-எஸ்.எம்.மருதம்**

ஒட்டிய வயிறு, உலர்ந்த கண்கள், சலவையைச் சந்தித்துப் பல நாட்களாகி விட்ட பழுப்புக் கதர்ச்சட்டை, வறுமையோடு இறுக்கமான உறவின் காரணமாக வானவில்லாய் வளைந்து காணும் உடல்-இந்த நிலையில் ஒருவர்,

''நான் முதலமைச்சரைப் பார்க்க வேண்டும்'' என்று கூறியவாறு முண்டியடித்துக் கொண்டு வந்தார். பாதுகாப்புப் போலீஸ் அதிகாரி ஒருவர் பாதியில் அவரை வழிமறித்துப் பின்னால் தள்ளினார். கெஞ்சும் குரலுக்குக் கொஞ்சமும் அவர் செவிசாய்க்கவில்லை. ''முதலமைச்சர் ஓய்வு எடுக்கப் போகிறார்; பெரிய ஆட்கள் கூட இப்போது போக முடியாது'' என்று போலீஸ் அதிகாரி அழுத்தமாக உரத்த குரலில் கூறினார்.

அப்போது தற்செயலாக மாடி வராந்தாவிற்கு வந்த முதல்வர் காமராசர் அந்தப் போராட்டக் காட்சியைக் கண்ணுற்றார். உடனே, ''அவரை இங்கே அனுப்புங்கள்'' என்று உரத்த குரலில் கூறினார். அந்த மனிதர் காமராசரிடம் சென்றார். ''வா வேலு வா! எப்படி இருக்கேன்னேன்'' என்று பாசம் பரிமளிக்க-அன்பு அரவணைக்க, வந்தவர் தோளில் தன் வலக்கரத்தைப் பதித்தவாறு கூறினார் காமராசர்.

எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு. சுதந்திரப் போராட்டக் காலத்தில் தன்னுடன் சில காலம் சிறையில் இருந்த சாதாரணக் காங்கிரஸ் தொண்டர் அவர் என்பதை இத்தனை காலத்திற்குப் பிறகும் நினைவில் வைத்து அடையாளம் கண்டு, அழைத்து அளவளாவினார் காமராசர்.

1955-ஆம் ஆண்டு நெல்லை மாவட்டத்தில் அன்றைய தமிழக முதல்வராக இருந்த காமராசர் சுற்றுப் பயணம் மேற்கொண்ட போது சிற்றூர் ஒன்றில் நடைபெற்ற நிகழ்ச்சி இது!

வந்தவர் சொந்த சோக வரலாற்றினைச் சொல்ல, அவரை வாட்டி வளைத்திருந்த வறுமைக்கு ஓரளவு பரிகாரம் கிடைத்ததாகக் கூறப்பட்டது. பட்டி, தொட்டி, சிற்றூர், பேரூர் எங்கும் எத்தனை தொண்டர்கள் இருக்கிறார்களோ, அத்தனை பேரையும் நினைவில் வைத்து, தொண்டருக்குத் தொண்டராய் விளங்கியதால் தான் தமிழகம் அவரைப் பெருந்தலைவராக்கிப் பெருமையடைந்தது.

தியாகத் திருவுருவாக, எளிமையின் இலக்கணமாக, நேர்மையின் சின்னமாக வாழ்ந்தார் காமராசர் என்பது நாடறிந்த உண்மை. ஏன், உலகறிந்த உண்மை என்றுகூடக் கூறலாம்.

'இந்திய அரசியலில் தோன்றியிருக்கும் ஒரு புதுமைக்கு காமராசர் ஒரு சின்னம். தியாகமும், எளிமையும் அடக்கமும் ஒருங்கே அமைந்த அவர், பாமர மக்களிடத்தில் உதித்து பரிமளித்தவர் என்று 'நியூயார்க் டைம்ஸ்' ஏட்டின்செய்தியாளர் அந்தோணி லூகஸ் குறிப்பிட்டது எவ்வளவு பொருத்தம்?

பாரம்பரியக் குடும்பப் பெருமை படைத்தோர், பல்கலைக் கழகப் பட்டம் பெற்றோர்தான் நாடாள முடியும் என்ற பழம் கதையை, பொய்யாக்கி, புதிய வரலாறு படைத்த தமிழக முதல்

வர்களுக்கு முதல்வர் காமராசர்.

''நான் படிக்கவில்லை என்று பலர் கூறுகின்றனர். நான் எந்தப் பல்கலைக் கழகத்திலும் படித்ததாகச் சொல்லிக் கொள்ளவில்லையே! ஆனாலும் எனக்குப் பூகோள சாத்திரம் நன்கு தெரியும். தமிழ்நாட்டில் அநேகமாக எல்லாப் பகுதியும் எனக்கு நன்கு தெரியும். எங்கெல்லாம் ஆறுகள் இருக்கின்றன? எங்கெல்லாம் ஏரிகள் இருக்கின்றன? எந்த நகரில் எந்தக் கிராமத்தில் மக்கள் என்னென்ன தொழில் செய்கிறார்கள்? எப்படி வாழ்கிறார்கள்? என்பதும் தெரியும். இவைகள் எல்லாம் பூகோள சாத்திர அறிவு இல்லை. நேர்கோடுகளும் வளைகோடுகளும் கொண்டிருக்கும் புத்தகம் தான் பூகோள சாத்திரம் என்றால் அதுபற்றித் தெரிந்து கொள்ளாமலேயே இருந்து விடுகிறேன்.''

அமெரிக்கப் பத்திரிகையாளருக்குப் பேட்டி அளித்த காமராசர் ஒரு வினாவிற்கு அளித்த விளக்கம் இது.

வல்லான் வகுத்த வழியைச் செல்லாக் காசாக்கி, எல்லாரும் எல்லாமே பெறவேண்டும் என்ற இதய கீதத்தை இலட்சியமாகக் கொண்டவர் காமராசர். எனவே தான் ''இருட்டுக் குகையிலே குருட்டுத்தனமாகக்கிடப்பவனே, எழு, விழி! ஏற்ற நடைபோடு! என்றார். பட்டிதொட்டி எல்லாம் பள்ளிகள், பகலுணவு, இலவசக் கல்வி, மின் இணைப்பு, எண்ணற்ற தொழிற் கூடங்கள் இவற்றிற்குக் கால்கோள் விழா வெடுத்து, கட்டடப் பணியையும் துவக்கியவர் காமராசர்தானே?

''சிலர் வாழ்வதற்கும் பலர் கஷ்டப்படுவதற்கும் அவரவர் தலை எழுத்துதான் காரணம் என்று சொல்வது சரியா? அப்படி கடவுள் எழுதியிருந்தான்னா, அவன் கையை முறுக்கி மாற்றி எழுத வைப்போம்னே'' என்று 1963-இல் சென்னை சேப்பாக்கம் கூட்டத்திலே அவர் எளிய மொழியிலே பார்போற்றும் கருத்தைக் கூறியது எதைக் காட்டுகிறது? சாதி, மத, கடவுள் விவகாரங்களில் காமராசரும் ஒரு ஜவகர்லால் நேரு என்பது அவரோடு நெருங்கிப் பழகியவர்களுக்குத்தான் தெரியும்.

1954-ஆம் ஆண்டு காமராசர் தமிழகத்தின் முதல்வர் ஆனதும் தந்தை பெரியார் அவர்களும் பேரறிஞர் அண்ணா அவர்களும் அவரை மனப்பூர்வமாக வரவேற்றனர்.

ஒரு நாள் சென்னை பெரம்பூர் பொதுக் கூட்டம் முடிந்தவுடன் நேரமாகிவிட்டபடியால் பத்திரிகை நிருபர்களையும் தன் காரிலேயே ஏற்றிக் கொண்டு வந்து கொண்டிருந்தார் காமராசர். நடை பாதையில் பலர் படுத்திருப்பதைப்பார்த்தார். ஒரு அசைவ ஓட்டல் முன்பு இருந்த தொட்டியில் சில ஏழைக் குழந்தைகள் எச்சில் இலைகளை எடுத்து அவற்றில் ஒட்டிக் கொண்டிருப்பதைச் சாப்பிடுவதையும் பார்த்தார். ஏதேதோ பேசிக் கொண்டே வந்தார்.

''என்ன சுதந்திரம்? நம்ம ஆட்சி வந்தா போதுமா? இந்தக் குழந்தைகள் எல்லாம் படிக்க வேண்டிய வயசு! பசி இருந்தா எப்படிப் படிப்பு வரும்னேன்? இதற்கெல்லாம் எப்படியாவது படிப்படியா ஒரு வழி பண்ணியாகணும்! அப்போதுதானே சுதந்திரம் என்று அர்த்தம்?''

இந்தச் சிந்தனைகளின் விளைவே பள்ளிப் பெருக்கமும் மதிய உணவுத் திட்டமும்.

அரசியல் இயக்கங்கள் என்ற வகையில் எதிரும் புதிருமாக பல நேரங்களில் இயங்குவது ஜனநாயக நாட்டில் இயல்பு. ஆனாலும் காமராசர், விடுதலை வீரர், தமிழகத்தின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் துவக்க விழா நடத்தியவர் என்ற வகையில், கட்சி மாச்சரியங்களுக்கு அப்பால் நின்று, பெருந்தலைவர் என்ற விருதைப் பெற்றிருக்கிறார்..







# சேலத்தில் பாரதியார் விழா

— அ. மருது

தமிழக அரசு சார்பில் நடத்தப்படும் பாரதியார் நூற்றாண்டு விழா சேலத்தில் 4-7-1982 அன்று நடைபெற்றது.

சேலம் நேரு கலையரங்கில் நாதசுர இன்னிசைத் தென்றல் கலைமாமணி தர்மபுரி கோவிந்தராசலு சகோதரர்களின் இன்னிசையோடு விழா துவங்கியது.

பள்ளி மாணவ மாணவியர்கள் பாரதி பற்றிய இசை நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டினர்.

சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இரா. வரதராசலு இ.ஆ.ப. அவர்கள் பாரதி பற்றிய புகைப்பட, புத்தகக் கண்காட்சியினைத் திறந்து வைத்தார். கூடுதல் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ப. செல்வம், இ.ஆ.ப. வரவேற்புரை ஆற்றினார்.

இளையபாரதம் நிகழ்ச்சி டாக்டர் கே. ராமமூர்த்தி (பாரதி இளைஞர் சங்கத் தலைவர்) அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு பி. டி. சாமி 'பாரதியும் பாவேந்தரும்' என்ற தலைப்பிலும், செல்வி சாந்தி 'பாரதியும் ஷெல்லியும்' என்ற தலைப்பிலும், செல்வி அ. குந்தவை 'பாரதியும் கம்பனும்' என்ற தலைப்பிலும், திரு எம். பி. ரகுமான் 'பாரதியும் பெரியாரும்' என்ற தலைப்பிலும், செல்வி இன்சுவை 'பாரதியும் ஷெல்லியும்' என்ற தலைப்பிலும் உரையாற்றி அவையோரின் பலத்த கையொலிகளைப் பெற்றனர்.

கவியரங்க நிகழ்ச்சியை மாண்புமிகு சட்டம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் தொடங்கி வைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது :

''பாரதியார் தமிழ் மொழி, தமிழ் இன வளர்ச்சிக்காகவும், இளம் சமுதாயத்தினரிடம் பகுத்தறிவு மிளிர வேண்டும் என்ற நோக்கத்தோடும் அயராது பாடுபட்டவர். அவரை மதிக்கவேண்டுமென்பதற்காக மாண்புமிகு முதல்வர் எம். ஜி. ஆர். அவர்கள் இன்று பட்டிதொட்டியிலெல்லாம் பாரதியாருக்கு விழா எடுத்துள்ளார்.

''பாரதியார் தந்தை பெரியார் போன்று துணிவான கருத்துக்களைக் கொண்டு இருந்தார். புத்தம் புதுக் கலைகள் வேண்டும், பழையன பற்றிப் பேசிப் பயன் இல்லை என்று கூறினார், அதன்படியும் செயல்பட்டார்.

''விடுதலை வேள்விக்கு எரி வளர்க்கும் நெய்போல சுதந்திரப் போராட்டப் பாடல்களை மட்



டும் பாரதியார் பாடவில்லை. விடுதலை பெற்ற இந்தியா, சமூக பொருளாதார அரசியல் வாழ்வில் எப்படி வாழவேண்டும் என்று எதிர்கால இந்தியாவுக்கு வழிகாட்டியாகவும் பாரதியார் திகழ்கின்றார்.

''சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்படாமல் இருப்பதால் அரசுக்கு ஆண்டுக்கு 300 கோடி நட்டம் ஏற்படுகின்றது. இதை முன்பே நன்கு உணர்ந்த காரணத்தினால்தான் பாரதியார், தமிழகத்திற்கும் ஈழத்திற்கும் பாலம் வேண்டுமென்று அன்றே வலியுறுத்தினார். அன்று அண்ணா வலியுறுத்தியதைத் தொடர்ந்து இன்று இந்த அரசும் மைய அரசை வலியுறுத்தி வருகின்றது.

''வறுமை என்பது மிகக் சொடியது, அதிலும் இளமையில் வறுமை மிக மிகக் கொடியது. அதற்காகத்தான் தமிழகத்தில் குழந்தைகட்கு உணவுத் திட்டம் என்ற சிறப்பான திட்டத்தை வகுத்துத் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

''பாரதியின் கருத்துப்படி இன்று பாரதியின் வாரிசு என்ற அடிப்படையில் ஏழை எளிய குழந்தைகளுக்கு ரூ. 100 கோடி இலவச சத்துணவுத் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர் அவர்கள் தமிழ் மண்ணில் தவழவிட்டுள்ளார்.

''தமிழ் இனம் தலைநிமிர்ந்து வாழ ஒற்றுமை வேண்டும் என்றும், பாரதி கண்ட மொழி உணர்வு எல்லாம் பெற வேண்டுமென்று விரும்பி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கவியரங்க நிகழ்ச்சிக்கு மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் புலவர் புலமைப் பித்தன் அவர்கள் தலைமை தாங்கி உரையாற்றினார்.

''ஆகாவென்றெழுந்தது பார் யுகப் புரட்சி'' என்ற பொருளில் பல்வேறு கவிஞர்கள் பங்கேற்றுக் கவிதை பாடினார்கள். அறிவியல் புரட்சி என்ற தலைப்பில் கவிஞர் பெ. வேலு அவர்களும், சமுதாயப் புரட்சி என்ற தலைப்பில் கவிஞர் செந்தமிழ் மாறன் அவர்களும், கவிதைப் புரட்சி என்ற தலைப்பில் கவிஞர் நாமக்கல் நாதன் அவர்களும், பசுமைப் புரட்சி என்ற தலைப்பில் கவிஞர் மழை மகன் அவர்களும், மகளிர் விடுதலைப் புரட்சி என்ற தலைப்பில் செல்வி ஆ. மான்விழி அவர்களும் பங்கேற்றனர்.




காலை நிகழ்ச்சிகள் சீரும் சிறப்புடனும் முடிவுற்றன. விழாவின் இறுதியில் சேலம் நகராட்சித் தனிஅலுவலர் திரு த. அ. சிவசுப்ரமணியன் நன்றி கூறினார்.

பாரதி பற்றிய அலங்கார ஊர்திகள், சேலம் காந்தி மைதானத்திலிருந்து புறப்பட்டு நகரின் முக்கிய சாலைகள் வழியாக சென்று நேரே நேரு கலையரங்கை அடைந்தது.

ஊர்வலத்தில் தேசிய மாணவர் படையினர், சாரணர் படையினர், ஊர்க்காவல் படையினர், கரகாட்டம், பள்ளி மாணவ மாணவியர்கள் ஆகியோர் அணிவகுத்துச் சென்றனர். நகரின் பல்வேறு பகுதிகளில் பாரதியார் பற்றிய அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டிருந்தன. ஊர்வலத்தை மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சி. அவர்களும், திட்டக்குழுத் துணைத் தலைவர் மா. முத்துச்சாமி அவர்களும் சேலம் அரசினர் பள்ளி அருகில் அமைக்கப்பட்டிருந்த மேடையிலிருந்து பார்த்தனர்.

மாலையில் நடைபெற்ற பட்டிமன்ற நிகழ்ச்சிக்கு சிலம்பொலி சு. செல்லப்பன் அவர்கள் நடுவராக இருந்தார்.

பாரதியார் கவிதைகள் மிகவும் வலியுறுத்துவது விடுதலை உணர்வு' என்ற தலைப்பில் திரு சு. அண்ணாமலை, திரு ப. வேங்கடாசலம், திருமதி அன்னம்மாள் ஆகியோர் ஓர் அணியிலும், சமுதாய மலர்ச்சி என்ற தலைப்பில் திரு துக்காணி அ. வரதராசன், திரு க. திருநாவுக்கரசு, திருமதி முல்லை மாணிக்கம் ஆகியோர் மற்றொரு அணியிலும் ஆணித்தரமாக வாதிட்டனர்.

வழக்காடு மன்றம் நிகழ்ச்சிக்கு திரு வலம்புரி ஜான் அவர்கள் நடுவராக இருந்தார்.

பாரதியை முறையாகப் பின்பற்றாத சமுதாயம் குற்றமுடையதே என்ற பொருளில், வழக்குத் தொடுப்பவராக திரு மன்னம் சேர சந்திரகாசன் அவர்களும் எதிர் வழக்காடுபவராக பேராசிரியர் இரா. செல்வகணபதி அவர்களும் பங்கேற்றனர். இத்துடன் மாலை நிகழ்ச்சிகள் முடிவுபெற்றன.

விழா நிறைவுச் சிறப்புக் கூட்டத்திற்கு சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இரா. வரதராசலு இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

இக் கூட்டத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு திட்டக்குழுத்



# ஆங்காங்கில் மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா



தமிழ்ப் பண்பாட்டு மன்றத்தின் சார்பில் மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா ஆங்காங்கில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்களும் ஆங்காங் நாட்டில் வாழும் இந்தியப் பிரமுகர்களும் விழாவில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினர்.

துணைத் தலைவர் பாவலர் மா. முத்துச்சாமி அவர்கள் தலைமை தாங்கியும், பாரதி படத்தினைத் திறந்து வைத்தும், நல்வாழ்வுத் திட்டங்களுக்கு உதவிகள் வழங்கியும், உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''பாரதியார் ஒரு தேசிய கவி—மகாகவி, விடுதலை வீரர், கவிதைப் பூங்கா, சமுதாயச் சிற்பி, புரட்சிக் கவிஞர் என்று இங்கே பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். பாரதியார் சொல்ல வேண்டிய கருத்துக்களை அழுத்தம் திருத்தமாகச் சொன்னார். ஆனால் சமுதாயம் அந்தக் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளவில்லை.

''பாரதியார் நூற்றாண்டு விழாக் கொண்டாடும் இந்தத் தருணத்தில் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு பாரதியாரை நாம் உருவாக்க வேண்டும்.''

மருத்துவமனைக்கும், பள்ளிக் கட்டடத்திற்கும் பாரதி பெயர் சூட்டியும் அடிக்கல் நாட்டியும் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச்செல்வர் டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''பாரதியார் பாடலில்-கவிதையில்-சொல்லில்-சுவை உள்ளது. சுதந்திர போராட்ட காலத்திலே பாரதியார் பாடலைப் பாடியதால் ஆங்கிலேயரிடம் அடிபட்டோம், சிறைபட்டோம். அதில் லட்சியம் இருந்தது, அதற்காக அடிபட்டோம். அவர்கள் அடிக்கும்போது ''வந்தே மாதரம்'' என்று பாடுவோம். ஏன் தெரியுமா? அடிக்கின்ற வலிதெரியாமல் இருக்கத்தான். 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்றான் பாரதி. சாதிகள் கூத்தாடுகின்றன என்று இங்கே பேசியவர்கள் சொன்னார்கள். சாதிகள் கூத்தாடவில்லை, நாம் தான் கூத்தாட வைக்கின்றோம்.

''மத்திய அரசு 20 அம்சத் திட்டத்தைக் கொண்டுவந்துள்ளது. தமிழக அரசின் இந்த இலவசச் சத்துணவுத் திட்டத்தையும் சேர்த்து 21 அம்சத் திட்டமாக மத்திய அரசு செயல்படவேண்டும். மற்ற மாநிலங்களும் இதைப் பின்பற்ற வேண்டும். பல திட்டங்களுக்கு ஐ. நா. சபை நிதி உதவி வழங்கத்தான் போகின்றது.''

மாவட்ட அளவில் பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்கட்கு பரிசாகப் புத்தகங்கள் வழங்கப் பட்டன.

திரு சி. என். கிருஷ்ணபாரதி அவர்கள் (தனி அலுவலர், மகாகவிபாரதியார் நூற்றாண்டு விழாக் குழு) நன்றி கூறினார். செல்வி வெண்ணிற ஆடை நிர்மலா குழுவினரின் 'பாரதி கண்ணம்மா' நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது.



தமிழக அரசின் நல்வாழ்வுத் திட்டங்களின் கீழ் சேலம் மாவட்டத்தில் பயனடைந்தோர் பட்டியல்.:

| | ஆதி திராவிடர் | மலைவாழ் மக்கள் | மற்ற வர்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| நிலப்பட்டா பெற்றவர்கள் | 7 | 22 | 64 | 93 |
| வீட்டு மனைப்பட்டாக்கள் | 308 | — | 266 | 574 |
| முதியோர் உதவித் தொகை பெறுவோர் | | | | 103 |
| விதவை உதவித் தொகை பெறுவோர் | | | | 12 |
| உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை | | | | 75 |
| விவசாயக் கூலி வேலை செய்வோர் பெறும் உதவிகள் | | | | 26 |
| விபத்து நிவாரண நிதி | | | | 4 |
| சலவைத் தொழிற்கருவி பெறுவோர் | | | | 12 |
| சவரத் தொழிற்கருவி பெறுவோர் | | | | 12 |
| கல் உடைக்கும் கருவி பெறுவோர் | | | | 9 |
| நில உடைமை பட்டாப் பெறுவோர் | | | | 8,986 |

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


எழிலான வண்ணங்கள்
இனிதான எண்ணங்கள்!
கண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
மகளிர் அனைவரும் விரும்பும் அருமை
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள்…அழகார்ந்த ரகங்கள்
அனைத்தும் உண்டு!
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
Sir

பதிவு எண். M. 8676 Licence No. TN/MS(C)/PP-23 தமிழரசு 16-7-1982 75 காசு

